# தேவபோகம்

அல்லது

## சோமப்பிரபாவிலாசம்

DEC 1918
MADRAS



BY

**S. A. Tirumalai Kolundu Pillai B.A.**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தேவபோகம்

அல்லது

# சோமப்பிரபாவிலாசம்

ஓர் நவீன நாடகம்.

BY

**S. A. Tirumalai Kolundu Pillai B. A.**

*Formerly, Professor of English Manipay Hindu College,*
*now, Educationist, Hindu High School, Srivilliputtur.*

ஸ்ரீரங்கம் :

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.

1917.

894.8112

**Prices.**

| | | | | |
|---|---|---|---|---|
| Edition-de-Luxe | Rs. | 4 | 0 | 0 |
| Thick paper Cloth | ,, | 1 | 8 | 0 |
| Thin paper | ,, | 0 | 12 | 0 |

178900

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# தேவபோகம்

அல்லது

## சோமப்பிரபாவிலாசம்.

### முதல் அங்கம்.

### முதற் காட்சி.

காலம்—விடியற்காலம்.

இடம்—குகசேனனது இல்லம்: முன் கூடம்.

[குகசேனன் வர]

குகசேனன்—நேற்று யாது நேர்ந்திருக்கக்கூடும்? நமது புத்திரன் எத்தனையோ புத்திசாலியாயிற்றே! எளிதே மனவாதைக்குள்ளாக வல்லனே? வேடிக்கைப் பார்ப்பதில் பற்றில்லானாயினும், குகச்சந்திரன் நேற்றுப் பின்பகல் ஏதோ விநோதார்த்தமாக வசந்தத் திருவிழாவைத் தரிசிக்க வெளிச்சென்றான். திரும்பி வந்தவன் பித்துற்றவன்போற்

றோன்றுநின்ற காரணம் யாது கொல்? காதல் நோய்க்கு ஒரோவழி ஆளாயிருப்பனெனவெண்ணுதற்கோ கூடவில்லை. கலியாணமென்றால் அவனுக்கு வேப்பங்காயாயிற்றே! வனப்பாலும் குணத்தாலும் புகழ்படைத்த வணிக மங்கையர் எத்தனைபேரோ முறைப் பெண்ணா யிராநின்றார். அவருள் ஒரு கன்னிகைபாலேனும் அவனுக்கு இணக்கம் பிறந்திலதே. ஆதலால் காதலாற்றாக் குன்றி மதிமயங்கி நிற்பான் என நினைக்கவிடமில்லை. ஐயோ! தீவினைவயத்தாற் பேய்க்கோட்பட்டானோ? இருட்டிற் பயந்திருப்பானென வெண்ணுதற்கும் வழியில்லை. ஏனெனில் பொழுதவிழும் அமயத்திலேயே வீடுவந்து சேர்ந்தான். நேரே யவனிடம் பேசின் கூசுவானெனக் கருதி, மெய்யைத்தெளிய தேவசமிதையை அவனிடமனுப்பினேன். அன்னையிடமேனும் மெய்யைப் புலனகாட்டானா! [தேவசமிதை வர] இதோ வராநின்றாளே. [அவளை நோக்கி] உன்மகனிடமிருந்த காரணத்தை தெளிந்தாயா?

**தேவசமிதை**—ஊமைபோல் மௌனமாயிருக்கின்றானே! என்ன பேசினும் எதிரிட்டு நோக்கின்றானல்லன். தலை குனிந்தவண்ணமே யிராநின்றான். இதுவரை இவ்வாறு ஒரு பொழுதும் அவனிருந்ததில்லை. நேற்றிரவோ நான் அவனைச் சாப்பிடக் கூப்பிட்டபொழுது பசிக்கவில்லையெனச் சொல்லி

உணவருந்தாது படுத்துக்கொண்டான். ஏதோ தலைவலி போலுமென நினைத்துவாளாவிருந்தேன். இன்று, விடிந்தபின் பார்த்தபோழ்து அவன் முகம் அதிக மாறுட்டமாயிராநின்றது. வாயைத் திறந்து பேசத்துணிகிலன். ஏதோ மனோவாதையுற்றவன்போற் றோன்றுகின்றான். மனத்துள்ளிருப்பதை வெளியிடக் கூசுகின்றானெனவே துணிகிறேன். யாது செய்வது?

குகசேனன்—நல்லது. அவனது பிராணசிநேகனைக் கூப்பிட்டு—[இந்திரகுப்தன் வர] அவனும் வந்துவிட்டான். ஏ இந்திரகுப்தா, உனக்கு ஆள்விட வேண்டுமென வெண்ணியகணமே நீயுற்றாய். உனக்குத் தீர்க்காயுள்—அப்பா, நேற்று நீ எனுற்றாய்?

இந்திரகுப்தன்—மத்தியான போஜனமானவுடன் இங்கு வந்து குகச்சந்திரனை யிட்டுக்கொண்டு வசந்தோத்ஸவத்தைக் காணலாமென வெண்ணி வீட்டை விட்டுப் புறப்படுமமயத்தில், எனது நண்பன் சமுத்திரதத்தன் குறுக்கிட்டு ஒரு பணிமேல் என்னை யிட்டுக்கொண்டு வீடு சென்றான். அவ்வேலை முடிய நெடுநேரமாயிற்று. ஆதலின் வரச்சரிப்படவில்லை. குகச்சந்திரன் எங்கே? என்னைத் தேட ஆள் விடும்படியாய் நினைத்த காரணம் யாது?

குகசேனன்—அதைத்தானே சொல்வதற்கிருந்தேன். சாயங்கால வேளைகளில் நீயுனது நண்பனோடு கூட

லே உலாவச் செல்வாயே. நேற்றோ, நீ வராமை யின் ஒண்டியாய்த் திருவிழாப் பார்க்கச்சென்றான். பொழுது விழுமமயம் வீடு வந்து சேர்ந்தான. ஆயினும், முகம் ஏதோ வாட்ட முற்றதுபோற் றோன்றிற்று. தாயார் சாப்பிடக்கூப்பிட்டபோழ்து பசியில்லையெனச் செப்பிவிட்டுப் படுத்துக்கொள் ளச் சென்றான். விடிந்த பின்பு அவனை நோக்கிய காலை ஏதோ உன்மத்தங்கொண்டான்போற் றோண றுகிறான். அவனது மாதாவோடும் வாய்திறந்து பேசாது மௌனத்தைச் சாதிக்கிறான். ஆயினும் நீ அவனது இன்னுயிர் நண்பனாதலின், உன்னை அழைத்து அவனது மனநோயைத் தெளிபலா மென வெண்ணமுற்றேன. அக்கணமே நீயும் வந் தாய். நீ அவனிடஞ் சென்று காரணத்தைப் புலன் கண்டுவந்து செப்புதி. காமநோயாய்த்தா னிருக்கவேண்டும். ஆயினும் துணிவாக வெண்ண விடமில்லை. மகளிர்பால் விரக்தியைக் கொண் டிருந்த குகச்சந்திரன் மங்கையர் மோகத்திற்கு ஆளாகி எளிதே அறிவு புறம்போகவல்லனோ? அவனது மனோதிடத்தை நீ யறிவாயன்றே.

இந்திரகுப்தன்—மாமா, மோகத்தின் ஆற்றல் சால வும் பெரிதெனச் ஆன்றோர்கூறவில்லையோ? எவ்வ ளவு காமனைக் கடிந்தானோ அவ்வளவு காமனுக் கே யடிமையானன்போலும்! ஆசையை முற்று

வித்துக் களைவதே நலமாகும். சிலரோ, 'அது தவறு, அவ்வாறு செய்யின் ஆசை மேன்மேலும் ஓங்கி வளர்தருமேயன்றிக் குன்றாது. ஆதலின் ஆசைக்கிடங் கொடாமையே யுக்த'மெனக் கூறு கிற்பர். இவ்விதி பாமரர்பால் ஓரோவழி ஒக்குமாயினும் தம்மை நாடவல்லார்பால் அமையாதெனவே கூறலாம். கட்டியை அடக்குவது நலமோ, கீறி வழிகண்டுவிடுவது நலமோ? ஆசையை யடக்கின் திடீரெனவெழுந்து எதிர் பாராத தீங்கினை இழைக்கினும இழைக்கும். காமனை முதற்கண் சிறிது சாந்தப்படுத்தாது பெருந்தவத்திருந்த முனிவரும் திடீரென மனங்குலைந்து காமனது மலர்க் கணைக்கிலக்காகி மதியிழந்தாரன்றே! ஆதலின் எதனையும அனுபவித்துப் பின்னர் வெறுத்துத் தள்ளுவதே அறிஞர்க்கழகு.

குகசேனன்—இவ்வளவு பேரறிவு வாய்ந்தவனென உன்னையான் இதுவரை எண்ணிலேன்! உனதறிவின் பெருக்கத்தை மெச்சாநின்றேன்.

இந்திரகுப்தன்—மாமா, என்னையோ மிகவறிவுபடைத்தவனென மதிக்காநின்றீர்கள். நமது குகச்சந்திரனது அறிவின் முன் என்னறிவு எம்மட்டு? இது நிற்க, தாங்கள் சோர்வுற வேண்டாம். கடிது சென்று எனது நண்பனது மனத்தை ஆழங்கண்டு வருகிறேன். அதன் பின்னர் மற்றுமகா

வேண்டுவனவற்றை நாடுவாம்.

துகசேனன்—அப்பா, அப்படியே உட்சென்று விரைவில் நினது நண்பனது மனநோயைத்தெளிகி. உன்னுற்றான் எனது மனம் ஓர் சிறிது திடம்பெறுகின்றது; இல்லையாயின், யாது செய்வதென வலமந்து நிற்பேன். உட்சென்று வருதி.

இந்திரகுப்தன்— இதோ சென்று வருகிறேன்.

தேவசமிதை—சீக்கிரம் தெரிந்துவா, அப்பா.

இந்திரகுப்தன்—அப்படியே, அம்மணி.

[இந்திரகுப்தன் உட்செல்ல; காட்சிமறைய.]

---

## இரண்டாம் காட்சி.

இடம்—துகச்சந்திரனது வித்தியா மண்டபம்.
காலம்—காலை, பத்து நாழிகை.

[துகச்சந்திரன் ஓர் ஆசனத்திற் சாய்ந்து இடது கையாற் றலையைத்தாங்கி ஏதோ ஒன்றை நோக்குவான்போற் றோன்று நின்றான். ஆயினும், நண்பனது வரவை யுணராது துகச்சந்திரன் சாய்ந்தவண்ணமே உறைகின்றான்]

இந்திரகுப்தன்—ஏ, துகச்சந்திரா! [துகச்சந்திரன் எதிட்டுப்பார்த்து நிமிர்ந்து உட்கார] என்ன? விழித்தவண்ணமே தூங்கிக்கொண்டிருந்தாயா? அல்லது தியானமோ? ஏதோ ஒரு மாதிரியாயிருக்கின்றுயே! உடம்பு அசௌக்கியமா? ஏதேனும் மனவாட்டமோ?

குகச்சந்திரன்—[தாழ்ந்த குரலாய்] வந்தாயா! நீ என்னைக் கேட்பதிருக்கட்டும். நேற்று ஏனோ வரத் தவறினாய்?

இந்திரகுப்தன்—நான் வரத் தடைப்பட்ட காரணத்தைக் கூறுகிறேன்—நீ, இவ்வளவு ஹீனஸ்வரத்தோடு வார்த்தையாடும் வயணம் யாது? ஏதோ, தாங்கலாற்ற மனோவாதைக்காளாகி வருந்துகின்றாய் போலும். எத்தகைய அறிஞரேயாயினும் தமது உள்ள நிகழ்ச்சியைப் புலப்படாமல் மறைக்க வல்லரோ?

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டு முகம்

என்றபடி உன் மனத்துள் ஏதோவொன்று வாதை செய்யா நின்றது. வெளியிடவும் கூசா நின்றாய். தாய்க்கொளித்த சூலுளதோ? எவர் பக்கலும் வெளியிடுதற்குத் தகாத இரகசியமேயாயினும் பிராண சிநேகனிடம் வெளியிடத் தகாததாமோ? சிநேகம் என்பதுதான் எதன்பொருட்டு? மனோவாதையை நண்பனிடம் வெளியிடின் அதனது பாரம் பாதியேனும் குன்றாதா? நீயுறும் வாதையை நோக்க என் மனஞ் சஞ்சலத்துளாழா நின்றதே. குகச்சந்திரா, வாய் திறவாது மௌனம் சாதிக்காதே.

குகச்சந்திரன்—இந்திரகுப்தா, கொம்பரில்லாக்கொடி

போல் அலமந்து நின்ற எனதுயிர்க்குத் தக்க பற்றுக்கோடென வந்தாய். உனக்கன்றி மற்றெவர்க்கே உற்றதையுரைப்பேன். நீ எனது பெற்றோரைக்கண்டு எனது மன நிலையையறிந்து இவனுற்றதெனத் தெளிகிறேன். என்னைப் பார்க்க வந்த எனதன்னை விசனத்தோடகன்றாள். பெற்றவளேயாயினும், எனது மன நிலையை, உற்றவட்கும் விள்ள மிகவும் நாணமுற்றேன். வாய் திறப்பின் உள்ளதைச்சொல்ல நேரிடுமேயென வாளாவிருந்தேன். சில விஷயங்களை நண்பர் பக்கல் விள்ளுதற்கும் மனம் நாணும். அவை வறுமையும் காதலும்.

இந்திரகுப்தன்—ஆகவே, ஏதோ காமத்திற்காளாகி மனவலிகுன்றிப் பொலிவிழந்து ஒன்றைப் பறிகொடுத்தவன்போற் றோன்றுகின்றாய். பள! பளா!! பிரசண்டமாருதமெழுந்து மலைகளை வேரோடு பிடுங்கிச் சமுத்திரத்துட்பெய்து அலைகளை மலைபோலெழுப்பி, இம்மண்ணுலகம் அல்லகல்லோலப்பட்டு பிரளயத்தை அடையும் சமயத்தும் மனங்கலங்காத் தீரர்களுமுண்டெனப் பெரியர் கூறியுளார். அத்தகைய தீரரில் உன்னையும் ஒருவனென வல்லவோ வெண்ணியிருந்தேன். ஐயோ! நீயோ ஓர் பெண்ணைக் கண்டு மனநிலை குலைந்து எளியனாய் நிற்கிறாயே! இது பெரும் வியப்பே!!

குகச்சந்திரன்—நீ சொல்லுவது யுக்தமே. எவர் மனக்கலக்கமுறினும் அவரைத் தெருட்டவல்லவனாகவேயிருந்தேன். இப்போழ்தோ நான் அறிவு புறம்போனவனைப்போல் ஓர் தையல்பால் மனமிழந்து நிற்பது எதுபோலுமெனின், ஓடுகின்ற நாகத்தைப் பிடித்து படத்தைப்பற்றி இரண்டாய்க் கிழித்தெறிய வல்ல மஞ்ஞை பச்சோந்தியைக் கண்டு மதிமயங்கி நிற்பதை யொக்கும்.

சோம்பிக் கொதுங்கி மேயா மஞ்ஞை குஞ்சரங்கோளிழைக்
[கும்
பாம்பைப்பிடித்துப் படங்கிழித்தாங் கப்பணைமுலைக்கே
தேம்பற்றுடியிடை மான்மடநோக்கி தில்லைச்சிவன்று
ளாம் போற்றடபலர் சூடும் என்னுற்றலசற்றியதே.

எனையெழுந்த துறையை யறியாயோ ? எனது கதியும் அதுவேயாயிற்று.

இந்திரகுப்தன்—அப்பா குகச்சந்திரா ! எனக்கொரு வாறு சந்தோஷம். தமது யௌவன திசையில் சித்தஜனையடக்கி மங்கையரைத் தாயென மதித்து உலக மாயையைக் கடக்கப் பார்த்த மாந்தர் நீயே யன்றி மற்றும் எத்தனையோபேர் இருந்துளார். ஆயினும் அவர்கள் எதிர்பாராவண்ணம் திடீரென மங்கையர் மோகத்திற்காளாகி மனநிலையினின்று வழுவவே செய்தார். அவ்வாறே நீயும் உனது உறுதியினின்றும் பிறண்டாய். உன் மனத்தைத்-

திருப்பத் தெய்வந் துணை. நின்றதை நோக்க எனக்கு ஆனந்தமே. உனது பெற்றோர் களிக்குமாறு, இனியேனும், நீ இல்லறத் துறையுளிறங்கலாமன்றே!

துகச்சந்திரன்—என் மனத்துள்ளிருப்பதை நான்வெளியிடுமுன்பே, நீ ஏதோ மனம்போனபடி முடிவுகளைக் கட்டா நின்றாயே! என்ன சாமர்த்தியம்?

இந்திரகுப்தன்—காரியத்தை ஏன் வீணே நீட்டவேண்டும்? நீ காமித்த இளங்கொடியாள் எவளோ அறிகிலேன். எவளாயினும் என்? நீ காமுற்ற மெல்லியலைக் கடிதில் உனக்கு மணமாலை சூட்டுவிப்பின் நினது மனநோய் நிற்கவல்லதோ!

துகச்சந்திரன்—நண்ப! உனது மதுர வாக்கைக்கேட்கக் கேட்க எனக்கிருந்த மனக்கூச்சம் சிறிது சிறிதாய் விலகாநின்றது. ஆயினும் எனக்குற்ற மனோபாதை உரைக்கடங்காது. நீ இச்சமயம் வராதிருப்பையாயின் விரகத்தாற்றுக்குண்ட என்மனம் சூனியத்தையடைந்திருக்கும். இதனால், மனந்தேறிவிட்டதாகவும் எண்ணற்க. வேடிக்கைப்பார்ப்பதில் பற்றில்லாதவனென்பதை நீ யறிவாய். ஊழின் வலியும், அஃது மாந்தரை வினையூட்டுவிக்கும் தந்திரமும், எனக்கிப்போதன்றோ விளங்கா நின்றன. பண்டைப் பழவினை என்னையறியாது உந்தவே, அதன் வயப்பட்டு, நேற்றுப் பின் பகல்

வேடிக்கைப் பார்ப்பதில் ஏதோ சித்தமிணங்கிக் காமன்பொருட்டு நடைபெறும் திருவிழாவைப் பார்த்துக்கொண்டு வீதிகளின் வழியே வருங்கால், வடக்கு வீதியில் ஒன்பது தங்கக் கலசங்களோடு விளங்கும் மாளிகையின் பக்கல் வர நேர்ந்தது. அஃது எவரது இல்லமென்பதை யுணர்வாயன்றே. அஃது தர்மகுப்தரது கிரகம். அதனது மாடத்தில் மின்னலே பெண்ணுருக்கொண்டாங்கு ஓர் யுவதி நின்றாள்! வேறென் சொல்வேன்! வானில் ஊரும் மதியமே மேகத்தின் பீடைக்கஞ்சி இம் மண்ணுலகிற் சரந்துறைவதாகக் கருதலாம். உயிரோவியம் எனத்தகும் திரிலோக சுந்தரியைக் காணவே, எனது பிராணன் கண்வழியோடி அப் பெண்ணமுதத்தினிடத்தே பிரதிஷ்டையாயது. க்ஷணநேரத்திற்குமேற் றரிசனந் தந்திலளே! மின்னல் மேகத்துள் குபீரென மறைவதுபோல் திடீரென வுட்சென்று மறைந்து, கொண்டாளே! ஈதென்ன மாயம்!

இந்திரகுப்தன்—[மெல்லிய குரலால்] இப்படியோ நேர்ந்தது!

குகச்சந்திரன் —மற்றுங் கூறுவதைக் கேள். எவ்வளவோ முயன்றும் ஏக்கமோ மேன்மேலும் முறுகி வளரா நின்றது. அவளைக் கண்டது முதல் இவ்வுலகம் ஏதோ சூனியமாயதுபோற் றோன்றிற்று.

அவளைக் கண்டபின் எவ்வாறு வீடு வந்து சேர்ந்தேனென்பது எனக்கே வியப்பைத் தாராநின்றது. இம் மண்ணுலகம் மனத்துட் டோன்றி மறையும் சொற்பனம்போல் என்மனத்தில் வருவதும் போவதுமாயிராநின்றது. 'காமஞ்சாலா அவ்விளையாள் வயின் ஏமஞ்சாலா விடும்பை யெய்திய யான் அவளைக் கண்டு பரிசித்தாலன்றி எனது பிரமை நீங்காது. உன்னைக் கண்ட போழ்து நம்மிருவருக்கும் சிறு வயது முதல் வளர்ந்துவந்த நேயத்தால் ஏதோ உன்னோடு வார்த்தையாடக் கூடியவனானேன். நண்ப, உற்றதை யுரைத்தேன். எனதுயிர்க்கு உறுதியை நாடி என்னை உய்விப்பது நினது பாரம்.

இந்திரகுப்தன்—நீயே தீரனென்பதை இப்போழ்து தான் மெய்யாக உணர்தரா நின்றேன். நீ அம் மங்கையையோ கண்டாய்? கண்டது மெய்தானோ?

சுகச்சந்திரன்—என்ன, இப்படி கேட்கின்றாய்!

இந்திரகுப்தன்—துணிவுபெறாது ஓர் சிறிது ஐயத்திற்கிடமாய் நின்றவோர் இரகசியம் உன்னால் முழு மெய்யாயது. இம் மண்ணுலகில் மனத்தைப் பணிகொண்ட தீரன் உன்னையன்றி வேறெவனே யுளான்? அவளைக்கண்டு தன்வயமிழவாது வீடு வந்து சேர்ந்து நடந்த வயணத்தை உள்ளது உள்ளபடி உரைக்கும் உனது மனோதிடத்தை என்

னென்று புகழ்வேன்? அறிவைப் புறம் போக
விடாது காக்கவல்ல சதுரன் நீயொருவனே.

துகச்சந்திரன்—நீ இவ்வாறு கூறும் உள்ளீட்டை
யான் உணர்கிலேன். என்னை அதி உன்னதமாக
நீ புகழும் வயணம் யாது?

இந்திரகுப்தன்—விள்ளுகிறேன். நீ அம்மங்கையை
யே கண்டாயெனவும் நீ கண்டது மெய்யோ
வெனவும் உன்னைக்கேட்டேனன்றே! நீ கண்ட
மெல்லியல் தேவலோகப் பெண்ணென்பது திண்
ணம். அவளை ஜகன்மோகினி யெனக்கூறலாம்.
தேவ மகளிர் நரரதுதரிசனத்திற்குக் கிட்டுவது
அரிது. உன்னைத் தீரனென வுரைக்க காரணத்
தைத் தெளிந்தாயா?

துகச்சந்திரன்—நண்ப, நீ சொல்லும் வண்ணம் அப்
பெண்ணமுதம் தெய்வமகளெனவே தகும்.
மண்ணுலகில் அத்தகைய தேகலாவண்யம் அமை
யற்பாலதோ? எனது மனத்தை இவ்விதமாய் மிக
வெளிதே பணிகொள்ளும் ஆற்றல் மண்ணுலக
மங்கைக்கு அமையுமோ? ஆயினும் நீ அவளைத்
தெய்வப் பெண்ணெனத் திண்ணமாகவுறுதிகொள்
ளுங்காரணம் யாது? அன்றியும் எனக்கு மாம
னாகும் தர்மகுப்தரில்லத்தில் அத்தகைய பெண்
ணிருப்பதாக ஒருபோதும் உணர்ந்திலேன். நவ
கோடி நிதிபடைத்தும், அதனையாளப் புத்திரனே

னும் புத்திரியேனும் கிடைக்கப்பெறாத பாக்கிய ஹீனரென்றே இதுவரை மதித்திருந்தேன். உனது வார்த்தைகள் சில மறைவுகளை உடைத்துக்காட்ட வல்லனபோற் றோன்றாநின்றனவே. எனக்குந் தெரியாத சில இரகசியங்கள் உன் மனத்தே யுறைவதை இன்றே கண்டேன். இது வியப்பே! என் மனத்தினிடத்தோ நீயறியாச் சூதொன்றுங் கிடையாது.

இந்திரகுப்தன்—குகச்சந்திரா! உனக்குப் புலன்காட்டக் கூடாதென நான் ஏதோ சூதை மனத்துள் மறைவாக வைத்திருப்பதாய் நீ யெண்ணுகின்றாயோ?

குகச்சந்திரன்—அப்படியன்று. ஏதோ வொரு இரகசியம் கட்டுப்பிரட்டாய் எனக்குத் தெரியாது உன் மனத்துள் உறைதரலாம்.

இந்திரகுப்தன்—அதனை விள்ளுகிறேன், கேள். உனது மாமனாராகிய தர்மகுப்தருக்கு ஒருபுத்திரி பிறந்ததாக நீ கேள்விப்பட்டதுண்டா?

குகச்சந்திரன்—அப்படிப்பட்ட ஞாபகம் ஒன்றும் தோன்றவில்லை. அவருக்குப் பிள்ளையேனும் பெண்ணேனும் ஓர் போதும் பிறக்கவில்லை யெனவே மதித்திருந்தேன். மெய்யெப்படி?

[தேவசமிதை வர]

இந்திரகுப்தன்—ஓர் பெண் பிறந்ததென்பதற்கைய

மில்லை. நீ அப்பொழுது சிறுபிள்ளை; நானே வுனக்கு எழு வயதிற்கு மூத்தவன். இதோ எனதம்மணியும் வந்து விட்டார்கள். [அவளை நோக்கி] அத்தே, எனது சிற்றன்னை தேஜோவதி கர்ப்பத்தில் ஒரு பெண்மகவு உதித்ததாகத் தாங்கள் கேள்விப்பட்டதில்லையா.

தேவசமிதை—அது நெடுநாட்பட்ட கதையாயிற்றே! இப்பொழுது அதைப்பற்றி என்ன? அந்தப் பெண்ணினைப்பற்றிய பேச்சு இப்பொழுது உங்கட்குள் வருங்காரணம் யாது? அப்பெண்ணே பிறந்தவன்றே இறந்துபோய் விடவில்லையோ?

இந்திரகுப்தன்—அத்தே, தாங்கள் கூறும் வண்ணமே வெளிப்பேச்சு. நானும் நெடுங்காலமாக அப்படியே எண்ணியிருந்தேன். ஆயினும், ஓர் சமயம் எனது நண்பனாகிய சமுத்திரதத்தன் மூலமாக அப்பெண் இறந்ததென்பது பொய்ப்பேச்சென்றும், அது தெய்வீகம்பொருந்திய பெண்ணெனவும் கேள்விப்பட்டேன். ஆயினும் உறுதி பிறவாதிருந்தது. பின்னர் ஓரிரவு நடுநிசிவரை ஒரு நூலை வாசித்துக்கொண்டு அதன் பொருட்கண் மனமாழும் சமயத்தில் மாந்தர் செவியாற் கேட்டிருக்கமாட்டாத ஓர் திவ்ய கானம் மெல்லென என் செவியில் வீழ்ந்தது. அஃது தர்மகுப்தரது மாளிகையினின்றே வெளிப்பட்டதென்பதற்கைய

மில்லை. அம்மங்கை வாய்ப்பிறக்கும் சேவகானத்தைப்பற்றி எங்ஙனம் விரிப்பேன். எல்லாம் நிற்ப, நாலைந்து தினங்கட்கு முன்னர்—

குகச்சந்திரன்—ஈதென்ன வாச்சரியம்! என் மனம் அனலிலடைப்பட்ட மெழுகைப்போல் எனதின்னுயிர்பாவைபால் மற்றும் ஈடுபடா நின்றதே!! என்வயமிழந்து என் மனம் பித்துக்கொண்டு இப்படியும் என்னைத் தவிக்கவிட்டோடுமோ!!! [சொக்கி ஆசனத்திற் சாய்கிருன்]

தேவசமிதை—ஐயோ, இதென்ன விபரீதம்! பேசிக்கொண்டே எனது குழந்தை மூர்ச்சை போகின்றனே!

இந்திரகுப்தன்—அத்தே, பயப்படவேண்டாம்; இஃது விரகதாபத்தின் கொடுமை.

[இருவரும் விசிறிகொண்டு விசிறி சைத்தியோபசாரம் செய்யவே, குகச்சந்திரன் மெல்லென விழித்துப் பார்க்கிருன்.]

தேவசமிதை—[தனது புதல்வனைத் தழுவிக்கொண்டு, இந்திரகுப்தனை நோக்கி] நீங்களிருவரும் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தீர்களே, பாவிவந்து அதனை நோக்கி நெஞ்சம் பூரித்தேன், கேட்டிற்கோ வந்தேன்! திடீரெனப் பெருமூச்செறிந்து நமது குகச்சந்திரன் மயக்கங்கொண்ட காரணம் யாது?

இந்திரகுப்தன்—எல்லாம் அந்தப் பெண்ணால் நேர்ந்த சோகம்.

தேவசமிதை—எனது அண்ணன் தர்மகுப்தரது புதல்வியால் விளைந்ததெனவா கூறுகின்றாய்? அப்பெண் இறந்ததென்பது பொய்யா? அவள் தெய்வப் பிறவியா? அப்பெண் அவரது வீட்டிலிருப்பது மெய்யா?

இந்திரகுப்தன்—இதற்கென்ன சந்தேகம். நமது குகச்சந்திரன் சாதாரண மண்ணுலக மங்கையைக் கண்டு மதிமோசம்போகத் தகுந்தவனோ? மின்னலே உருவெடுத்துப் பிறந்ததுபோன்ற திவ்ய தேஜசோடும்கூடிய அம்மங்கை தெய்வீகப் பிறப்பே. குகச்சந்திரனது இதயம் அவளைப்பற்றிப் பேசப் பேச மிகவும் பரவசப்பட்டாநின்றது. ஆகவே கடிதில் மணமுடிக்கும் உபாயத்தை நாடுவதே உசிதம். அப்பா, குகச்சந்திரா! நீ யொருவிதக் கவலையும் உறவேண்டாம். உனது மனப்பாங்கிற்கிசைந்த அம்மங்கையை இரண்டொரு தினத்துளே உனக்கு மணம்முடிப்பித்து நினது விரகத்தை யாற்றும் வழியை நாடுவேன். அதுவரை தண்ணீரருந்தினுலும் அருந்துவேனேயன்றி அன்னம் புசியேன். உனது மனநோய் தீரும்வரை கண்ணுறக்கத்திற்கிடங்கொடுப்பேனே?

தேவசமிதை—இந்திரகுப்தா, உன்னைப்போன்ற பிரா

ண ஸிநேகன் எவர்க்கேனும் கிட்டவல்லனோ! குகச்சந்திரா! நீ தைரியத்தை விடாதே. அப்பா, இந்திரகுப்தா! நீ உடனே குகச்சந்திரனது பிதாவிடஞ் சென்று விவாஹ விஷயத்தைத் துரிதப்படுத்து. நான் குழந்தையிடமிருக்கிறேன்.

இந்திரகுப்தன்—குகச்சந்திரா! எவரையுந் தெருட்டவல்ல பேரறிவு வாய்ந்த உனக்கு நான் யாதே மதி கூறுவது? உன் மனப்பாங்கின்படி மணம் முடியுமென்பதில் ஐயம் வேண்டாம். நினது அன்னையின் மனங் கலங்காவண்ணம் தைரியத்தைக் கடைப்பிடி. ஈசன்பால் மனத்தை நாட்டு. கடவுளருளாலேயே யாவும் முட்டின்றி இனிதாய்க் கைகூடிவரவேண்டும்.

குகச்சந்திரன்—நண்பா, தெய்வத்தின் ஞாபகத்தைத் தக்க சமயத்திற் றூண்டினாய்; எனக்கு ஊக்கம் பிறவா நின்றது. தெய்வம் துணை நிற்கும். நீ எந்தையிடஞ்சென்று வருதி. தாயாரும் உனது கூடவே செல்லலாம். அம்மா நீயும் சென்றுவா. சிறிது ஏகாந்தமாகக் கடவுளைத் தியானஞ் செய்கிறேன். எய்த்தவிடத்தில் மற்றெவரே நமக்குற்றவராவார்? மதிமோசத்திற்கு ஆளாவேனென அஞ்சவேண்டாம். மனஞ் சிறிது ஏகாந்தத்தை நாடா நின்றது.

தேவசமிதை—அப்பா, குகச்சந்திரா! உனது காரிய

மாகவே இருவரும் பிதாவிடஞ் செல்கிறோம். ஆத லின் நீ ஊக்கமாகவிருக்கவேண்டும். ஏகாந்தத்தை நீ நாடாநின்றதால் சிறிது நேரம் உன்னைப் பிரிந்து கடிதிற் றிரும்ப வருகிறோம்.

குகச்சந்திரன்—போய் வம்மின். [இருவரும் குகச்சந் திரனை விட்டுப் பிரிய] என்ன புதுமை! கஞ்சா முத லான லாகிரிப் பொருள்களால் புத்தி நிலை குலையு மெனக் கேட்டிருக்கிறேன்; அவ்வாறே மாந்தர் மதிமோசம் போவதையுங் கண்டுளேன். மோகத் தாற் சொக்குண்பவருளரெனக் கதைகளிற் கேட் டதுண்டு. ஆயினும் பொய்யெனவிருந்தேன். வி னையோ என்னைப் பரிகாசஞ் செய்யத் த்வஜங் கட்டி என் மதியை ஓர் உயிரோவியத்தினிடத்தே ஈடுபடச்செய்தது. எல்லாம் ஈசன் திருவிளையாட் டாயிருக்கிறது. அவனையே நம்பி நிற்பேன். வே று புகலிடம் உளதோ? ஈசா! உனது அருள் வழி நிற்பேன். கடைக்கணி. ஏ, மனமே! நீ, என்ன, திரும்பத்திரும்ப வம்பு செய்யா நின்றாய்? சிறிது ஆத்திரத்தையடக்கி அருள்வழிநில்; ஈசன் உனக்காக வேண்டியதைக் கூட்டிவைப்பன். மரம் வைத்தவன் வளர்க்கானோ?

சாட்டையிற்பம்பர சாலம்போலெலாம்
ஆட்டுவானிறையென அறிந்து நெஞ்சமே
நாட்டமொன்றற அருட்செயற்கண் நிற்றிகாண்
வீட்டறம் துறவறம் இரண்டும் ஏகமே.

மோகம் என்பது இப்பிரபஞ்சத்தில் ஏற்பட்ட காரணம் யாது! அஃது இல்லாத வழி ஜகம் நடைபெறமாட்டாது. சகல ஜீவ பேதங்களும் பிறவிச் சுழலைத் தாண்டி வீடெய்தும். மோகம் இம்மண்ணுலகத்தை மட்டுமோ வினைவழியாட்டிப் போகம் ஊட்டா நிற்கும்? பொன்னுலகமும் மோகத்திற்குத் தொழும்பு செய்யா நின்றதே! இதனை எவரே வென்று அழியா முதலைக் காணவல்லார்!—

முத்தனைய மூரலும் பவளவாயின்சொலும்
　　முகத்திலகு பசுமஞ்சளும்
மூர்ச்சிக்க விரகசன்னதமேற்ற விருகும்ப
　　முலையின்மணி மாலை நால
வைத்தெமை மயக்கி இருகண் வலையை வீசியே
　　மாயாவிலாச மோக
வாரிதியிலாழ்த்திடும் பாழான சிற்றிடை
　　மடந்தையர்கள் சிற்றின்பமோ
புத்தமிர்தபோகம் புசித்துவிழி யிமையாத
　　பொன்னாட்டும் வந்ததென்றால்
போராட்டமல்லவோ? பேரின்ப முத்தி
　　இப்பூமியிலிருந்து காண
எத்தனை விகாதம் வரும்; என்று சுகர் சென்றநெறி
　　இவ்வுலகம் அறியாததோ
இகபரமிரண்டினிலும் உயிரினுக்குயிராகி
　　எங்கும் நிறைகின்ற பொருளே.

---

## மூன்றும் காட்சி.

**இடம்— குகசேனனது கிரகம், முன் கூடம், காலம்—நண்பகல்.**

[குகசேனன் ஓர் ஆசனத்தில் சோகத்தோடமர்ந்திருப்ப, அவனது பரிசாரகன் தாகத்திற்குத்தண்ணீர் கொண்டு வரா நின்முன். குகசேனன் தாகத்தைத் தீர்த்துக்கொண்டு, சமயற்காரனை நோக்கி]

**குகசேனன்**—ஏ, அமரதாசா, குகச்சந்திரனைப் பார்த்து விட்டுக் கடிதில் வருவதாய் மகனது வித்யாக் கிரகத்திற்குச் சென்ற தேவசமிதை இன்னம் வந்திலள். முன்னமே சென்றிருந்த இந்திரகுப்தன் நமது புத்திரனோடு யாது செய்கிறான்? அப்பா, அமரதாசா, நீ உட்சென்று மூவரும் யாது செய்கிறார்களென்பதை மெல்லென வறிந்து கடிது வந்து செப்புதி.

[அமரதாசன் உட்செல்லப்பார்க்க; தேவசமிதையும் இந்திரகுப்தனும் வர]

**அமரதாசன்**—எதிரே வந்து விட்டார்களே.

**குகசேனன்**—நீ உட்சென்று உனது பணியைப் பார்.

[அமரதாசன் உட்செல்ல; குகசேனன் இந்திரகுப்தனை நோக்கி]

இந்திரகுப்தா, உனது நண்பனது நிலையை யறிந்தாயா?

**இந்திரகுப்தன்**—தாங்கள் எண்ணிய வண்ணம் காத

லே காரணம்; ஆயினும் நமது குகச்சந்திரனை உள்ளவா தீரனென்றே கூறவேண்டும். அவன் காமுறநேர்ந்த மங்கை ஒரு தெய்விகப் பெண். யாரெனிற் கூறுகிறேன். தங்கள் மைத்துனர் தர்மகுப்தரது புதல்வியே.

குகசேனன்—நீ பேசுவது ஏதோ விநோதமாகவிருக்கின்றதே. எனது மைத்துனர்க்கு சந்ததிகிடையாதே. சில்லாண்டுகளுக்கு முன்னர் ஓர் பெண் பிறந்ததாயினும் அஃது இறந்துபோகவில்லையோ! தேவசமிதே, உனக்குத் தெரியாதா?

தேவசமிதை—இருவரும் துக்கங் கேட்கப் போனோமே? நினைத்துப்பாருங்கள்.

குகசேனன்—மெய், மெய், எல்லாம் ஞாபகத்திற்கு வராநின்றது. அப்பெண்ணைப்பற்றி ஏதோ சில புதுமைகளான வார்த்தைகளும் வெளிப்பட்டதுண்டு. நானோ அவற்றை வீணேயெழுந்த அபவாதமெனநினைத்துப் பொருட் படுத்திலேன். அப்பெண் உயிரோடிருப்பது மெய்யா? நமது குகச்சந்திரன் அப்பெண்ணைப் பார்க்கநேர்ந்த வயணம் யாது? அப்பெண் திட்டமாக நமது மைத்துனரிடம் இருப்பதாக நீ எவ்வாறு நம்பாநின்றாய்? நடந்த வயணத்தைச் சொல்.

இந்திரகுப்தன்—நமது குகச்சந்திரன் எளிதே மகளிர் மோகத்திற்கு ஆளாகமாட்டானென்பதை

தான் கூறவேண்டாம். நேற்று சாயங்காலம் வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு வடக்கு வீதி வழியாய் வரும்போழ்து, தர்மகுப்தரது மாடத்தில் திரிலோகத்திலும் கிட்டுதற்கரிய பெண்ணமுதத்தைக் கண்டான். தெய்வீக மங்கையைக் கண்டு மனம் ஈடுபட்டமையால் தன்வயமிழந்தான். நிற்க. அப்பெண் தங்களது தங்கை வயிற்றிலுதித்த தெய்வீகப் பிறவியென வெண்ண வேண்டும். இதற் கையம் வேண்டாம்.

குகசேனன்—அப்பா, இந்திரகுப்தா, நமது குகச்சந்திரன் அப்பெண்ணைப்பார்த்தே மதிமோசம் போயிருப்பான். அவன் பொய் கூறுவானோ? ஆகவே அப்பெண்ணிருப்பது சரதமே. ஆயினும் தர்மகுப்தரிடம் இத்தகைய பெண்ணிருக்கிறாளென்பதை நீ எவ்வாறு உறுதி கண்டாய்? நீ அப்பெண்ணைக் கண்ணுற் பார்த்ததுண்டா?

இந்திரகுப்தன்—இல்லை, இல்லை. ஆயினும் ஊர் வாயை மூட உலைமூடியுளதோ? நள்ளிரவில் சில சமயங்களில் அவரது இல்லத்திருந்து திப்பிரிய தேவநாதம் பிறப்பதாக அவரது அண்டை வீட்டில் வதியும் சமுத்திரதத்தன் பன்முறை கூறியதுண்டு. மெய்யெனவே நம்பலாம். பிரதி சுக்கிர வாரமும் அஃது கேட்கப்படுவது திண்ணம். ஆயினும் உரத்த சப்தமாயிராது. உற்றுக்

கவனிப்பவர்க்கோ பேரானந்தத்தை விளைக்க வல்லது. சமுத்திரதத்தன் இதைக் கேட்டதுண்டு. நானும் ஓர் சமயம் நடுயாமத்தில் அந்த திவ்ய கானத்தைக் கேட்டு மெய்மறந்து ஆனந்தங் கொண்டேன். ஆயினும் நாலைந்து தினங்கட்கு முன்னர்தான் தற்செயலாய் இரகசியத்தை உள்ளது உள்ளபடி தெரிய நேர்ந்தது.

குகசேனன்—உனக்கென்ன அதிசயம் உள்ளபடி தெரிந்தது?

இந்திரகுப்தன்—இதோ சொல்கிறேன். அப்பெண் பிறந்தவுடனே தனது தேககாந்தி வீடெல்லாம் வீச, எழுந்து வீற்றிருந்துகொண்டு அதியற்புத தேவகானங்களைத் தனது மழலை வாக்காற் பாடினதாம். இதனைத் தெரிந்த தர்மகுப்தர் உடனே சூதகவறைக்குட் சென்று தமது திவ்ய புத்திரியைக் கண்டு பயபக்தியோடு 'அம்மா, பகவதி! நீ ஏதோ அவதாரமாக வெனது வீட்டிற் பிறந்தாய். எங்களைக் காத்துத்தரவேண்டுமம்மா' வெனக் குறையிரந்தாராம். அதற்கு அப்பெண் 'தாங்கள் வருத்தமுறவேண்டாம்; என்னை ஒருவருக்கும் புலப்படுத்தாது வளர்த்து வருவீராயின் உம்மிடம் செல்வம் மிகக் கடிதிற் பொங்கியெழும்' என்றதாம்.

தேவசமிதை—ஈதென்ன விந்தை!

குகசேனன்—அப்பா, இந்திரகுப்தா, நீ சொல்வதில் இப்பொழுதுதான் உள்ளவா நம்பிக்கை பிறவா நின்றது. அப்பெண் பிறந்ததற்கு முன்பு எனது மைத்துனர் இருந்த நிலைமையை யறிவேன். சாதாரண வணிகராகத்தானிருந்தார். அதன் பின் அதிசீக்கிரத்தில் அவருக்குக் குபேரசம்பத்து விளைந்தது. இப்பொழ்து ஒன்பதுகோடி நிதியை யாளாநின்றுறே! தெய்வக்கடாக்ஷமின்றி ஒருவனும் முயற்சியால் குபீரென உயர்ந்த பதவியை எய்த வல்லனோ? நான் மிகவும் அதிசயமுற்றதுண்டு. அவர் தொட்டதெல்லாம் பொன்னாய் விளைந்தது. எல்லாம் அந்த திவ்ய மங்கையின் கிருபையாலேயே விளைந்திருக்க வேண்டுமென விப்போழ்து தெளிகின்றேன்.

தேவசமிதை—அப்பெண் நமக்கு மருகியாய் நமது புத்திரனுக்கு மனையாட்டியாயமையின் நமது பாக்கியத்தை எவரே புகழவல்லவரர்வர்?

குகசேனன்—கிடைத்தால் நல்ல பாக்கியந்தான். உனது தம்பனோரோ தமது திவ்விய குமாரியை உற்ற உறவினராகிய நமக்குக்கூடப் புலன் காட்டாது வளர்த்துவருவதை நோக்கின், எளிதே கலியாணத்திற்கிசைவரோ?

இந்திரகுப்தன்—மாமா, இதனையொட்டிய மற்றுமோர் இரகசியத்தை விண்டுசொல்வதற்குள் வேறு வார்த்

தைகள் விளைந்தன. 'அப்பெண் தனது தந்தையிடம் 'என்னை ஒருவருக்கும் தாங்கள் வதுவை செய்து தாலாகாது. நான் இறந்துபோய்விட்டதாகச் சொல்லி ஊராருக்குப் போக்குக்காட்டிவிட்டு என்னை அந்தரங்கமாக வளர்த்துவரவேண்டும்' எனவும் செப்பியதாம்.

குகசேனன்—இதனுற்றான் அப்பெண் இறந்துபோய் விட்டதாக இழவுகொண்டாடினர்போலும். அப்பா உனக்கு இவ்வளவு உள்ளீடு எவ்வாறு தெரிந்தது? எங்கட்கோ வொன்றுமெட்டவில்லையே!

இந்திரகுப்தன்—எனதில்லம் தர்மகுப்தரது மாளிகைக்குச் சமீபமன்றோ?

குகசேனன்—அதனுல்?

இந்திரகுப்தன்—ஓர் இரவு எனக்குத் திவ்விய நாதம் எட்டினதாகக் கூறினேனல்லனே? அன்றியும் எனதன்னை சில சமயங்களில் நள்ளிரவில் விழித்தெழ நேர்ந்தபோழ்து தர்மகுப்தரது மாளிகையினின்று மாந்தர் செவிக்கெட்டுதற்கரிய தேவகானங்களைக் கேட்க நேர்ந்ததாம். 'எனக்கு முழு இரகசியம் வெளியாகிய விந்தையைக் கூறுகிறேன். நாலைந்து தினங்கட்கு முன்னர் எனது சிற்றன்னையாகிய தேஜோவதியம்மாள் என் தாயாரைப் பார்க்கவந்தாள். அப்போழ்து யான் எனது வித்யாகிரகத்துள் கதவை யடைத்துக்கொண்டு ஒரு

அரிய நூலை யுற்றுநோக்கிக்கொண்டிருந்தேன். எனதன்னை நான் வெளியேபோயிருப்பதாக வெண்ணினாள். மற்றப்படி வீட்டில் வேறொருவருமில்லை. அவள் தனது தங்கையை நோக்கி, 'ஏ தேஜோவதி, சில சமயங்களில் நடுநிசியில் உனதில்லத்திருந்து அதியற்புத தேவகானம் கிளம்பாநின்றது. அது எனது செவிவழி புகுந்து மட்டுக்கடங்காவின்பத்தைப் பயந்ததுண்டு. அது பெண் குரல்; உனக்குப் புலப்படாதிருக்கக் கூடுமா?' வெனக்கேட்டாள். அப்போழ்து எனது சிற்றன்னை எனது தாயாரை நோக்கி, 'அக்கா, நெடுநாளாய் ஒரு இரகசியத்தை யுனக்கு வெளியிட வெண்ணியும் ஏதோ கூசி மனத்துள் வைத்திருந்தேன். இன்று நீ அதனைப் புலன் கண்டதால் வெளியிடுகிறேன். இங்கே இப்போழ்து வேறெவருமில்லையே என்றாள். எனதன்னை அவளை நோக்கி 'ஒருவருமில்லை; நமது இந்திரகுப்தன் சிறிது நேரத்திற்கு முன் இவணிருந்தான். இப்போழ்துதான் வெளியே போயிருப்பானெனச் செல்லிக்கொண்டே சென்று தலைவாசற் கதவை தாழிட்டாள். உடனே என் சிற்றன்னை தனது மகளது தெய்வீகத்தை வெளியிட்டாள். அப்பெண் பிறந்தபோழ்து, சூதகவறையுள் சந்திரனே உதயமானது போலிருந்ததாம். ஓடிவந்து தன்னை வணங்கிப் பிரார்த்தித்த தந்தையிடம் தன்னை ஒருவருக்கும்

வதுவை செய்து கொடாது மறைவாக வளர்த்து வரும்படி சொன்னதாம். அதனது தேககாந்தியை நோக்கி அதற்கு சோமப்பிரபையெனப் பெயர் சூட்டினார்களாம். இவ்வளவு இரகசியத்தையும் தேஜோவதியம்மாள் எனதன்னையிடம் வெளியிட்டுக் கடேசியாக, 'அக்கா, நீ என்னோடு கூடப் பிறந்தவளாதலின் உன்னிடம் மறைவை விண்டேன். இது உன் மனத்துள்ளிருக்கட்டும்; வேறெவ்விதத்தாலேனும் பிறர் இதனைப் புலன் காண நேரவரினும் ஒன்றும் வெளிப்படாவண்ணம் நீ சாதுரியமாகவடக்கிப்போடும் வழியை நாடவேண்டு'மெனவும் கேட்டுக் கொண்டாள்.

சூகசேனன்—தமயனுக்கு வெளியிடாத இரகசியத்தைத் தமக்கைக்கு வெளியிட்டாள்போலும். அதிசயம்! அதிசயம்!! பெரிய தர்ம சங்கடமாகவிருக்கிறதே! ஏ, தேவசமிதே, நான் முன்னமே கூறவில்லையா? உனது தமயனார் நமது புத்திரனுக்கு அப்பெண்ணைக் கட்டிக் கொடுக்கவாபோகிறார்?

இந்திரகுப்தன்—நாமாகவே, ஓர் முடிவுங் கட்ட வேண்டாம். மாமா, தாங்கள் நேரந்தாழ்க்காது இப்போழ்தே சென்று தர்மகுப்தரிடம் வினயமாகப் பெண் கேட்கவேண்டும். அவர் பெண் கிடையாதென மறுக்கிறாரா, கொடுக்கமாட்டே

னெனச் சொல்கிறாா, வேறெவ்விதமான விடை தான் பகராநின்றாரோ பார்ப்போம். கடவுள் கிருபையால் சம்மதிப்பாராயின் நமது பாக்கியம். தடை கூறுவாராயின் மேலே யாகவேண்டியதைப் பார்த்துக் கொள்ளலாம்.

தேவசமிதை—குகச்சந்திரன் படும்பாடு மிகப்பெரிது. ஆகலால் இந்திரகுப்தன் சொல்லும் வண்ணமே தாங்கள் பெண் கேட்டுப் பாருங்கள்; நானும், வேண்டுமாயின், கூட வருகிறேன்.

இந்திரகுப்தன்—நீங்களிருவரும் உடனே பெண்கேட்கச் சென்மின். நான் குகச்சந்திரனிடம்போய் மனத்தைத் தேற்றிக் கொண்டிருப்பேன்.

குகசேனன்—சரி, அப்படியே நானும் தேவசமிதையும் தர்மகுப்தரிடம் செல்கிறோம். நீ யுனது நண்பனிடஞ் சென்று பேசிக்கொண்டிரு.

இந்திரகுப்தன்—இதோ செல்கிறேன். இருவரும் போய் வம்மின்.

[காட்சி மறைய]

---

## நான்காம் காட்சி.

இடம்—தர்மகுப்தரது மாளிகை.

காலம்—சாயங்காலம்.

[தர்மகுப்தர் தனது மனைவி தேஜோவதியுடன் ஏதோ

பேசிக்கொண்டிருக்கும் தருணத்தில் குகசேனனும் தேவசமி தையும் அவண் வர.]

தர்மகுப்தன்—அத்தானே வரவேண்டும்; அம்மா, தேவசமிதே, உனக்கு வர வழி தெரிந்ததா?

தேஜோவதி—அண்ணா, தாங்கள் இப்போழ்து முன் போல அடிக்கடி வரக்கண்டிலேன். மதினியாரும் என்னை மறந்துவிட்டார்களோ? உங்கட்கென்ன குறை! அறிவாலும் குணத்தாலும் நமது மர பிற்கே ஆபரணம்போன்ற உத்தம புத்திரனைப்பெற் றெடுத்திருக்கிறீர்கள். எப்பாக்கியமே யாயினும் புத்திர பாக்கியத்தை வெல்ல வல்லதோ?

குகசேனன்—ஏதோ பாக்கியக் குறைவுற்றவள்போற் கூறுகின்றாயே! உங்கட்கென்ன குறை! நமது குகசேனன் உங்கட்கு மருகன்றானே. மகன் வேறு மருகன் வேறு? வேண்டுமாயின் சொந்தப் புத்திரனாக வெடுத்துக்கொண்மின்.

தர்மகுப்தன்—அத்தானே, தங்கட்குக் கோடி வந்த னம். இவ்வளவு பேரன்பைத் தாங்கள் எங்களி டம் வைத்திருப்பதை நோக்க மிகவும் ஆனந்தம். இது நிற்க, ஏனோ நமது குகச்சந்திரனுக்கு இது காறும் வதுவை செய்விக்காது வாளாவிருக்கின் றீர்கள்?

குகசேனன்—நான் வந்த காரியத்தை நீங்களே தொட்டீர்கள். மிகவும் சந்தோஷம். மங்கள

காரியத்தை முட்டின்றி முடிப்பிசதுவைக்கவேண்டியது தங்கள் பொறுப்பு.

தர்மகுப்தன்—தங்கட்கு யாதே குறையுளது? எங்களாற் றங்கட்கு முடியவேண்டிய காரியம் ஏதேனுமுளதோ?

குகசேனன்—கடவுள் அருளால் ஒரு குறையுமிலேம். குகச்சந்திரனுக்கு ஏன் இதுகாறும் வதுவை நடத்திவைக்கவில்லை யெனக்கேட்டீர்களே. அவனது மனோ நிலை உங்கட்குத் தெரியாமலோ விருந்தது? நமது மரபில் எத்தனையோ யுவதிகளாகிய கன்னிகைகளிராநின்றார். ஆயினும் குகச்சந்திரனுக்கோ பெண் நாற்றமென்றால் பிணநாற்றமாகவேயிருந்தது. மனமிசையாதானை என்செய்வதென விதுகாறும் எண்ணியிருந்தேன். தெய்வாதீனமாய் இன்றல்லவோ வதுவை செய்து கொள்வதிற் பிரியங் காட்டினன்.

தர்மகுப்தன்
தேஜோவதி —இசைந்தானா? நல்லகாலம்.

தர்மகுப்தன்—அப்படியாயின் தக்கபெண்ணைப்பார்த்துக் கடிதில் விவாகம் முடித்து வைக்கலாமே.

குகசேனன்—தான் காமுற்ற மங்கையை மணம் முடிப்பித்தாலன்றோ அவன் இசைவான்.

தேஜோவதி—[புறம்பாக] நம்மிடம் பெண் கேட்கத்தான் வந்தாரோ?

தர்மகுப்தன்—[சஞ்சலமுற்று] அவன் காமுற்றமெல்லியலையே அவனுக்கு மணமாலை சூட்ட என்ன தடை? அந்தப் பெண் எவர் பெண்?

குகசேனன்—ஓர் தடையுங் கிடையாது. தங்களது மனமிசைய வேண்டியதொன்றே குறை. நமது குகச்சந்திரன் காமுற்ற பெண் தாங்கள் அருமையாய்ப் பெற்று மறைவாய் வளர்த்துவரும் சோமப்பிரபையே. கடிதில் மணத்தை முடிப்பித்து எனது மனக்கவலையை யொழிக்க வேண்டும்.

தர்மகுப்தன்—ஈதென்னவிபரீதம்!

தேஜோவதி—மைத்துனரென அண்ணாவவர்கள் தங்களை ஏளனஞ் செய்கிறார்கள் போலும்.

குகசேனன்—வேலையற்றுப்போய் ஏளனம்பண்ணவோ இவ்வளவு தூரம் வருவேன்?

தர்மகுப்தன்—அத்தானே, ஒன்று சொல்கிறேன். நாம் இருவரும் மைத்துனபாவமுடையவரேயாயினும் இழிஞரைப்போல் இழிவான பரிகாசம் இதுவரை ஒருவரோடொருவர் புரிந்ததில்லை. இன்றோ தாங்கள் ஏதோ வீண் வார்த்தையாடா நின்றீர்கள். இவ்விளையாட்டு வேண்டாம்.

குகசேனன்—நான் மெய்யாகவொன்றை வேண்டின் கேலிபண்ணுவதாகவோ கருதுவது? நன்றாயி

ருக்கிறது! குகச்சந்திரன்பால் மிகவும் பூர்வம் படைத்தவர்கள்போற் பேசினீர்களே. அவனுக் குற்ற இடுக்கணை கேட்டவுடன் களைவதன்றோ உங்கட்கழகு.

தர்மகுப்தன்—ஏதோ, என்னிடம் பெண்ணிருப்பது போலவும் அதனை நான் தராது மறுப்பதுபோல வும் எண்ணி என்னை வீணே மனப் புண்படுத்து வது தங்கட்கழகன்று. இனி அப்பேச்சை சகிக் கமாட்டேன்.

குகசேனன்—மைத்துனரே, சத்தியத்தைக் கருதாது முழுப் பூசினிக்காயைச் சோற்றுள் மறைக்கப் பார்ப்பதையொப்ப, தமது பெண்ணைத் தக்கவரா னுக்குக் கட்டிக்கொடுக்க விணங்காது இல்லவே யில்லையெனச் சாதிக்கலாமோ?

தர்மகுப்தன்—ஓய், உம்மை அதிகப் பேச்சுபேச வேண்டாமென வற்புறுத்தியும் மதியிழந்து ஏ தோ வாய்க்குவந்த வண்ணம் பிதற்றுகின்றீர்? வயது முதிர்ந்தும் அறிவு குன்றினீரோ? சீக்கி ரம் வந்த வழியைப் பார்த்துச் செல்லும்.

குகசேனன்—மரியாதையறிந்த நீர் தக்கபடி பேசி வந்தீரே? திடீரென வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்பதுபோல் நாவடக்கமின்றி, யான் தம்மினும் வயதில் முதிர்ந்தவனென்பதனையுங் கருதாது அலக்ஷியஞ் செய்து என்னைச் சிறு மைப்படுத்தத் தைரியங்கொண்டீர்! பணக்கொழு

ப்பு என்னதான் செய்யாது! நவகோடி நிதிபடைத்துக் குபேர சம்பத்தைப் பெற்றீரேயாயினும் வாய்மையைப் போற்றாது பொய் கூறத்துணிந்த உமது புன்மை நகைப்பிற்கிடமாமன்றே!

தர்மகுப்தன்—ஏது, வம்பு பலமாக வளராநின்றது. ஹடஞ்செய்து கலகத்திற் கிடஞ்செய்ய வந்தீர் போலும். தெரியுமா?

தேவசமிதை—அண்ணா, இப்படிக்கோபப்படலாமோ?

தேஜோவதி—அண்ணா, தங்கள் மைத்துனர் அடங்காக்கோபங் கொள்கின்றார். கலகம் வேண்டாம். தாங்கள் இனி இங்கு நிற்பது அழகன்று.

குகசேனன்—என்ன சொன்னாய்? கூடப்பிறந்த தங்கையாயிருந்தும் நியாயத்தையும் சாராது கணவனுக்குத்துணையாக நின்று என்னை நீயுமோ அலக்ஷியஞ்செய்யாநின்றாய்! அடீ, தேவசமிதே, இனி நமக்கிங்கென்ன? மதியாதார் வாசல் மிதியாதேயெனச் சொல்வார்கள். நாம் அரைக்கணமும் இனியிங்கு தரிக்கலாகாது. இவர்களோ செல்வச் செருக்கால் மதி குருடாயினர். பெண்ணைக் கொடுக்காது வறுத்துத் தின்னப்போகிறார்களோ? பெண் எங்கேதான் போகின்றதெனப் பார்ப்போம். வா, வீட்டிற்குப்போவோம்.

[இருவரும் மாளிகையை விட்டு வெளியேறுகின்றனர்.]

தர்மகுப்தன்—அடி, தேஜோவதி, நம்மிடம் பெண்ணிருப்பதை இவர்கள் எவ்வாறு தெரிந்துகொண்டனர்? அன்றியும் பெண்ணின் பெயரையும் எப்படியோ அறிந்துகொண்டனரே. இவர்கட்கு நமது பெண்ணைப்பற்றிய ஆவளவும் தெரியாதென்றல்லவோ எண்ணியிருந்தேன். மறை வெளிப்பட்ட காரணம் மிகவும் வியப்பே! நீ தான் அடக்கமின்றி யெவர்க்கேனும் சொல்லியிருக்க வேண்டும்.

தேஜோவதி—என்ன, இப்படிச் சொல்கின்றீர்கள்?

தர்மகுப்தன்—பெண்பாலார் இரகசியத்தை யடக்கத் தெரிந்தவரோ? நீ, புத்திசாலிதான். எளிதே வெளிவிடமாட்டாய். ஆயினும் மூன்றும் வீட்டில வதியும் உனது தமக்கைக்கு ஒரோவழி தெரிவித்திருப்பாய். விழிக்கிறாயே. என்ன வயணம்? உள்ளதைச் சொல்.

தேஜோவதி—நேரிற்கண்டவர்களைப்போல் கள்ளனைப் பிடிக்கின்றீர்களே. உங்கள் சாதுரியமே சாதுரியம்.

தர்மகுப்தன்—கேலி செய்கின்றாயா?

தேஜோவதி—அடியாள் பரிகாசஞ் செய்யத் தகுந்தவளா? மெய்யையே கூறினேன்.

தர்மகுப்தன்—அப்படியாயின், உனது தமக்கை சக்திமதியிடம் எதனையேனும் விண்டாயா?

தேஜோவதி—நாலைந்து தினங்கட்கு முன்பு அவளது வீட்டிற்குப் போயிருந்தேன். அப்போழ்து அவள் தனியாகவிருந்தாள். அவள் என்னைப்பார்த்து 'ஏ, தேஜோவதி! சில சமயங்களில் நள்ளிரவில் உனது மாளிகையிலிருந்து திவ்வியநாதம் பிறவா நின்றது. அது என்னுட் புகுந்து விளைத்த சுகத்தை என்னென்று சொல்வேன். அஃது ஒரு பெண்குரல். அதனது உள்ளீடு உனக்குத் தெரியாதிருக்கக்கூடுமா?' வெனக்கேட்டாள். நமது சோமப்பிரபையது இரகசியம் அவட்குத் தெய்வகதியாய்ப் புலனாயிற்றெனக் கருதி, அவள் எனது கூடப் பிறந்த தமக்கைதானே யென்பதையு மெண்ணி நான் அவளிடம் இரகசியத்தை வெளியிட்டேன்.

தர்மகுப்தன்—வெளியிட்டாயா? என்ன தவறு செய்தாய்!

தேஜோவதி—ஆயினும், நான் அவளிடம் 'அக்கா, இவ் இரகசியத்தை வேறெவரேனும் சிறிது புலன் காண நேரவரினும் அதனையோர் சிறிதும் வெளிப்படா வண்ணம் தந்திரமாக வடக்கிப்போ'டென வும் வேண்டிக்கொண்டேன். அவளும் அப்படியே வாக்குக் கொடுத்தாள். அவள் அதனை வெளியிடுவாளோ? மிகுந்த சத்தியவதி யன்றோ? அவள் ஒருக்காலும் வெளியிட்டிருக்கமாட்டாளெனவே நம்புகிறேன்.

தர்மகுப்தன்—அவள் வெளியிட்டாளோ, வெளியிட்டிலளோ? உனது வாயைவிட்டு இரகசியம் வெளியேறியதன்றே! எப்படியோ அவளது குமாரன் இந்திரகுப்தனுக்கு மறை புலப்பட்டிருக்க வேண்டும். அவனும் குகச்சந்திரனும் ஓரே உயிர். அவனே உனது தமயனையும் எனது தங்கையையும் குகச்சந்திரனுக்காகப் பெண் கேட்கும்படி நம்மிடம் அனுப்பியிருப்பான்.

தேஜோவதி—மெய்யெப்படியோ? ஆனால் அடியாள் சந்தேகம் ஒன்று. குகச்சந்திரன் நமது சோமப்பிரபையைக் கண்ணாற் காணாதா அவளிடம் ஆதரங் கொள்வன்.

தர்மகுப்தன்—நீ சொல்வது யுக்தமே. அவன் நமது கன்னிகையை எவ்வாறோ பார்த்தே யிருப்பான். உனது தமயனார் நம்மிடம் பெண் கேட்ட சாதுரியத்தைக் கவனித்தாயா?

தேஜோவதி—என்ன வார்த்தை சொன்னார்?

தர்மகுப்தன்—அவர் சொன்ன வார்த்தையா! 'தாங்கள் அருமையாய்ப் பெற்று மறைவாய் வளர்த்து வரும் சோமப்பிரபையையே குகச்சந்திரன் காதலியா நின்றா'னென்றாரன்றே.

தேஜோவதி—ஆம், ஆம். அப்படித்தான் சொன்னார்.

தர்மகுப்தன்—ஆகவே ஊகித்து நோக்கின் குகச்சந்திரன் நமது சோமப்பிரபையை எப்படியோ தரிசித்திருக்க வேண்டும். பின்னர் அவளைப்பற்றிய இரகசியம் துலங்கியிருக்கவேண்டும் தூரப் போவானேன்! இந்திரகுப்தன் குகச்சந்திரனுக்குப் பிராணசிநேகனல்லனோ? அவனே சகல சூதையும் அறிந்து அவர்களிடஞ் சொல்லியிருக்கவேண்டும்.

தேஜோவதி—அடியாட்கு மற்றுமோர் சந்தேகம் விளையாநின்றது. நமது சோமப்பிரபை ஆடவர் நேத்திரங்கட்கு ஒருபோதும் புலப்படமாட்டாளே. பெற்ற தந்தையாகிய தங்கட்கு மட்டுமே தரிசனந் தருவள். ஏனைய ஆண்மக்கள் நேத்திரங்கட்குத் தென்படுவாளோ? 'புருஷரது கண்களுக்குக் காற்றைப்போல் அருவமாயிருப்பேன். ஆதலால் ஆண் மகன் எவனும் என்னைக் காண முடியா'தென நம்மிடஞ் செப்பிய வுறுதியை மறந்தீர்களோ?'

தர்மகுப்தன்—நீ சொல்வது மெய்தான். அதைப் பற்றி யாழ்ந்து கருதவேண்டும். அது நிற்க, இப்போழ்து உனது தமயனார் மிகுந்த வெகுளியோடு நம்மை விட்டுப் பிரிந்தாரே. அவரோ எளிதே சிற்றங் கொள்ளார். மிகுந்த அமைதியும், புத்திக் கூர்மையும், தந்திரமும் வாய்ந்தவர். நம்மை எவ்வித அல்லலுக் காளாக்குவாரோ

அறிகிலேன். இதுவே இப்போழ்து எனக்கு நேர்ந்த திகில்.

தேஜோவதி—நீங்களேன் அச்சமுறவேண்டும்? நமக்குத் தெய்வம் துணை நிற்காதா? எதிர் பாரா வண்ணம் விளைந்த இவ்விக்கட்டை நமது திவ்விய புத்திரியிடம் சொல்லலாம். அவள் மதி எதனைத்தான் வெல்லாது? உள்ளே செல்வோம்.

[இருவரும் உட்புக]

முதல் அங்கம் முற்றும்.

OFFICE OF THE REGISTRAR
3-DEC 1918
MADRAS.

# இரண்டாம் அங்கம்

## முதற் காட்சி.

**இடம்—குகசேனனது கிரகம், முன் கூடம்.**
**காலம்—அத்தமனமாகி இரண்டு நாழிகை.**

[இந்திரகுப்தன் கூடத்தின் வாயிலிலிருந்து குகசேனனையும், தேவசமிதையையும் எதிர்பார்த்து நின்றவன், பெண் கேட்கப்போய் நேரமாயதென வெண்ணி ஏகாந்தமாக]

**இந்திரகுப்தன்**—பெண் கேட்கச்சென்ற இருவரும் இன்னம் வந்திலர். குகச்சந்திரனோ ஆத்திரமுற்று நின்றான். சென்ற காரியம் காயோ, பழமோ? தர்மகுப்தர் இசையவா போகிறார்?

[குகசேனனும் தேவசமிதையும் வர]

இருவரும் இதோ வந்துவிட்டார்கள். சென்ற காரியம் யாதாயிற்று?

**குகசேனன்**—காரியமா? அப்பா, இந்திரகுப்தா, தர்மகுப்தரது செருக்கை என்சொல்வேன். அவரிடம் பெண்ணிருப்பது நிச்சயந்தான். பெண்ணைப்பற்றி நான் அவரிடத்தில் வாயெடுத்தபோழ்து, அவருக்குண்டான எரிச்சலை என் சொல்வேன். ஒருவருக்கும் தெரியாதெனவவர் எண்ணியிருந்த சூதை நான் உடைத்தலுமே பொல்லாத ஆத்திரங்கொண்டார். மரியாதையைக்கடந்த வார்த்தைகளையும் என்மீது

பிரயோகித்தார். பணக்கொழுப்பேறிய அவரது மனைவி எனக்குத் தங்கையேயாயினும் என்னை உள்ளபடி மதித்தாளா? இல்லை. தனது கணவன் சார்பாகவேயிருந்து எங்களை அலக்ஷியஞ்செய்தாள்.

தேவசமிதை—உடன் பிறந்தாரைச் சுற்றத்தாரென விருக்கவேண்டாம், வியாதி ஒருவன கூடவே பிறந்து அவனைக்கொல்லும் எனமுதியவர் கூறுவர். அவ்வாறே, தர்மகுப்தன் எனது அண்ணனுவனோ? அவனே எனக்குச் சத்துரு. சிறிதேனும், கூடப் பிறந்த தங்கையாயிற்றே எனக்கருதிலனே!

இந்திரகுப்தன்—அத்தே, ஆத்திரம் வேண்டாம். மாமா, அவரது செல்வச்செருக்கை அடக்க வழி கிடையாதா? பெண்ணை எப்படியேனும் பற்றவேண்டுமே. வழியாது?

குகசேனன்—ஒரு வழியிருக்கிறது. உதைப்பானுக்கு வெளுப்பான் ஜர்தி வண்ணான் என்றபடி சிநேகபாவத்திற்கிணக்கங் காட்டாத தர்மகுப்தரை அச்சத்துளாழ்த்தி நமது கோறிக்கையை முற்றுவிக்க வேண்டும்.

இந்திரகுப்தன்—எப்படி அவரைத்திகிலுக்கு உள்ளாக்குவீர்கள்.

குகசேனன்—நமது மன்னர் என்மீது மிகுத்த பக்ஷமுள்ளவர் என்பதை யறியாயோ? பன்முறை

தக்க சமயங்களில் உற்ற உதவியை அவருக்கு செய்திருக்கிறேன். எனது கோறிக்கை யாதே பாயினும் முட்டின்றி முற்றுவிக்க தவறமாட்டார். குகச்சந்திரன் பக்கலும் மிகுந்த ஆர்வமுடையவர். நான் நமது குகச்சந்திரன் படும் பாட்டையும், தர் மகுப்தர் செய்த கபடத்தையும் எடுத்துரைப்பே னாயின் அவர் தர்மகுப்தனை எளிதே விடவா போகிறார்? நேரந்தாழ்க்காது சீக்கிரம் இராஜக் கிரகத்திற்கு செல்லவேண்டும். ஏ, தேவசமிதே, நீ சீக்கிரம் உட்சென்று நவமணிகளைக் காணிக் கைக்காக எடுத்துவை. இந்திரகுப்தா, நீ உடனே குகச்சந்திரனிடஞ் சென்று நடந்த வயணத்தைச் சொல்லி தைரியத்தை யூட்டிவிட்டு என்னோடு கூட அரண்மனைக்கு வரவேண்டும்.

[தேவசமிதை உட்செல்ல]

இந்திரகுப்தன்—மாமா, நீங்கள் புறப்படுதற்கு முன் னமே நான் வந்து சேர்கிறேன். குகச்சந்தி ரனிடம் நடந்ததையும் நடக்கபோவதையும் சொ ல்லி ஊக்கத்தைக் கடைப்பிடித்திருக்கும்படி மதி யூட்டி விட்டு கணப்பொழுதில் தங்களைவந்தடை வேன்.

[இந்திரகுப்தன் உட்செல்ல]

குகசேனன்—தெய்வம் துணை நிற்கவேண்டும். தேவ சமிதை நவரத்னங்களை எடுத்துவைக்க உட்சென் றாள். காணிக்கைகளைக் கொண்டு கடிதில் இரா

ஜக் கிரகத்தை யடைய வேண்டும். மன்னர் போ ஜனத்திற்குச் செல்லுமுன் பேட்டி கிடைக்கவேண் டும். நவரத்னங்களை எடுத்து வைத்திருப்பள். சென்று பார்ப்போம்.

[உட்செல்ல]

---

## இரண்டாங் காட்சி.

இடம்—இராஜக் கிரஹம்.

காலம்—இரவு ஐந்து நாழிகை.

[அரசன் தனது மந்திரி தந்திரிகளோடு வசந்தத் திரு விழாக் கொண்டாட்டத்தைப்பற்றி உல்லாசமாகப் பேசிக் கொண்டிருக்கும்போழ்து துவாரபாலகன் அவண் வந்து சொல்கிறன்]

துவாரபாலகன்—மகராஜ்! தங்கள் கண்ணிற்கு கண்ணான குகசேனச் செட்டியார் தங்கள் பேட்டியைக் கருதாநின்றார்.

அரசன்—உடனே அவரை அழைத்து வா.

[துவாரபாலகன் வெளிச் செல்ல]

இரவில் என்ன வேலையோ? ஏதோ மிக அவசரமான பணியாய்த்தான் வந்திருப்பார். மந்திரி! இவரைப்போல் நமக்குற்றவர் வேறெவரேயுள்ளார்?

மந்திரி—உள்ளவா அன்புடன் உற்ற சமயங்களில்

ஓர் சிறிதும் மனங்கோணது உதவி புரியவல்லவர் குகசேனரைத் தவிர வேறொருவரு மிலர். அச் சத்தால் உதவி புரிவாரோ பலருளர்.

தந்திரி—தங்கட்குக் கண்ணும் கவசமுமாயிருந்து நமது நாட்டின் க்ஷேமத்தைக் கருதுபவருள் இவரே மிகச் சிறப்புற்றவர்.

அரசன்—உள்ளது, உள்ளது. அவரும் நானும் ஒரேயுயிரரென வெண்ணுமின்.

[குகசேனனையும், இந்திரகுப்தனையும், அமரதாசனையும் துவாரபாலகன் இட்டுக்கொண்டு வரா நின்றான். குகசேனன் அரசனை நமஸ்கரித்து காணிக்கை யேந்திய தாம்பாளத்தை அரசன் முன் வைக்கிறான்]

அரசன்—செட்டியாரே வாரும், வாரும். தம்மை பார்த்து ஒருமாதத்திற்கு மேலாகிறதே? இந்த நவமணிகளை ஏன் கொண்டு வந்தீர்? மிக வருமையான இரத்தினங்களல்லவோ?' நீர் நமக்குச்செய்துள பேருதவியையும், அதனால் நமக்குக் கிட்டிய அளவிலா நிதியையும் யாரே விரித்துரைப்பார். நாம் உமக்குத் தக்கபடி சம்மானஞ் செய்ய வேண்டுமேயென ஒரு தருணத்தை நாடி நிற்குங்கால், நீரோ மற்றும் எமக்காக அதிகச் செலவை செய்வது!

குகசேனன்—பிரபு, தெய்வ சந்நிதானத்திற்கேனும்

ராஜ சமுகத்திற்கேனும், குழந்தைகளிடமேனும் செல்வோர் வெறுங்கையோடு போகக் கூடாதென பெரியவர் கூறுவர். ஆதலினாலும், தங்களிடம் எனக்கிருக்கும் நேயத்தாலும் பரமப் பிரீதியோடு இச்சிறியக் காணிக்கையைக் கொண்டு வந்தேன்; தாங்கள் மறுக்காது அங்கீகரிக்கவேண்டும்.

அரசன்—உமக்கிருக்கும் அன்பின் பெருக்கை யுள்ளவா அறிந்துளேன். செட்டியாரே! நீர் கூறுவது யுக்தமே. ஆயினும் காணிக்கையை யேற்க மனம் கூசாநின்றது. வந்ததை வேண்டாமென மறுக்கக் கூடாதென்பதற்காகவோர் முத்தைமட்டும் ஏற்றுக்கொள்கிறேன். இது நிற்க. இவ்வேளை நீர் வந்ததை நோக்கின் ஏதோ தீரா அவசரமென வெண்ணுகிறேன். உமக்கு ஏதேனும் குறையுளதேல் அதனை மனப்பூர்த்தியாக நிவர்த்திக்கிறேன்.

குகசேனன்—தங்கள் வாக்கைச் சிரமேற்கொண்டு எனக்குற்ற இடுக்கணை விண்ணப்பிக்கிறேன். தாங்கள் அருமையாய் ஆதரித்துவரும் குகச்சந்திரன் படும்பாடு சகிக்கமுடியவில்லை.

அரசன்—அவனுக்கென்ன? அவனைப்போன்ற சற்புத்திரன் உலகத்திற் கிடைக்கத்தக்கவனோ? நமது குகச்சந்திரன் நோயாற்றுக்குண்டானே? என்ன?

குகசேனன்—நோயுமுண்டு நோயுமில்லை. அவன் நெடுநாளாக விவாகத்திற்கிசையவில்லை யென்பது

தங்கட்குத் தெரிந்திருக்கலாம்.

அரசன்—மெய், மெய், ஏன் ஓட்டாரமாக வதுவை யைக்கடிகின்றான் என்பதைத் தம்மிடங் கேட்க வேண்டுமெனும் அவா பிறந்ததுண்டு; சொல்லும்.

குகசேனன்—இப்போழ்து வசந்தத்திருவிழா நடை பெறுகிறதன்றே! நேற்றுப் பின்பகல் ஏதோ உல்லாசத்தை மேற்கொண்டு காமன் பண்டிகை வேடிக்கையைப் பார்க்கச்சென்றான். அப்போழ்து தர்ம குப்தர் இல்லததில் அவரது புத்திரியைக்கண்டு அவள்பால் மிகவும் மனம் ஈடுபட்டு வீடுவந்து சேர்ந்தான். விளைந்த விரக நோயை இந்திரகுபதன் மூலமாக நான் தெளிந்து நானும் எனது மனைவியும் உடனே பெண் கேட்கச்சென்றோம். அவரோ, "என்னிடம் பெண்ணேது? என்னைப் பரிகாசஞ் செய்யவோ வந்தீர்கள்" என மறுக்கா நின்றார். அப்பெண்ணை குககச்சந்திரனுக்கு விவாகஞ் செய்வித்தாலன்றி அவன் உயிர் தரித்திருப்பதரிது. தங்கள் கிருபையை நாடா நின்றேன்.

அரசன்—அப்படியா? என்ன மிகவும் வேடிக்கையாயிரா நின்றதே! பெண்ணை வைத்துக்கொண்டா இல்லை யெனப் பொய் கூறுகின்றார். குகச்சந்திரனை விட நல்ல மாப்பிள்ளை அவருக்குக் கிட்டவா போகிறான்! செட்டியாரே, பெண்ணிருப்பது உறுதியாயின் குகச்சந்திரனுக்கு மணம் முடிவதும் மெய்

தான். தர்மகுப்தர் பணக் கொழுப்பேறினார் போலும்! அவரை யென்ன செய்தால் வழிக்கு வருவார்?

சுகசேனன்—தாங்கள் அவரைப் பெண்கொடுக்க விணக்குவித்தாற் சாலும்.

அரசன்—நான் ஒன்று செய்கிறேன். அதுவே நல்ல யுக்தி. பிரதானி, நீர் ஓர் சிறு சேனையை உடனே இட்டுக்கொண்டு போய் தர்மகுப்தரது மாளிகையை முற்றுகை செய்யும். ஏனெனில் பெண்ணை ஒருவேளை எங்கேனும் அவர் கடத்தி விடுவாராயின் சுகச்சந்திரன் பொல்லாத பாடுபடநேரும்.

பிரதானி—சித்தத்தின்படி செய்கிறேன்.

சுகசேனன்—அடங்காப் பாம்பிற்கு மூங்கிற்றடியடி என்றபடி, பயத்திற்கு வயப்படாத அவரது செருக்கை யடக்கிக் சுகசந்திரனுக்கு சுபகாரியத்தை முடித்துவிக்கும். உபாயத்தை நன்றாய்க் கண்டீர்கள்.

அரசன்—இனி நேரந்தாழ்க்க வேண்டாம். இவ்விரவிலேயே சென்று பெண்ணைக் கைப் பற்றுங்கள். பெண் கிட்டிவிடின் விவாகத்திற்கு யாதே தடை? செட்டியாரே, பெண்ணைக் கைவசப்படுத்திக் கொண்டு நாளை வேண்டுமானாலும் விவாகத்தை நடத்திக் கொள்ளலாம். நமது சுகச்சந்திரன் மனந்தேறி உற்சாகங் கொள்வன். ஐயம் வேண்டாம்.

கொண்டு வந்த இரத்தினங்களை எடுத்துக்கொண்டு போம். விவாகத்தை மிகச் சிறப்பாக நாமே நடத்திவிப்போம். ஆடையாபரணாதி சகல செலவுகளுக்கும் நமது கஜானா விருக்கிறது. இவ்வுதவியை நாம் செய்யாதிருப்பது நமக்கிழுக்காகும்.

மந்திரி—தக்க தருணத்தை நாடி நமது குகச்சேன செட்டியாருக்கு ஒப்பரிய நன்மை புரியவேண்டுமென எண்ணி யாங்கு அத்தருணம் கிட்டியது.

அரசன்—மெய், மெய். பிரதானி, உடனே சேனையோடு சென்று தர்மகுப்தரது வீட்டை முற்றுகை போடும். செட்டியாரே நீரும் கூடவே செல்லும். பெண்கிட்டிய வுடனே எனக்குத் தகவல் தெரிய வேண்டும். அதுவரை ஆக்கிரமாக விருப்பேன்.

குகசேனன்—இனி எனது பாக்கியத்திற்கு அளவுண்டோ! சித்தப்படி சென்று வருகிறோம்.

[குகசேனனும் இந்திரகுப்தனும் அமரதாசனும் பிரதானியும் அரசனை விட்டுப் பிரிய]

அரசன்—மந்திரீ, தர்மகுப்தர் பெண்ணை ஏன் கொடுக்க மாட்டேனென மறுத்தார்? குகச்சந்திரன் தக்க வரன் ஆகமாட்டானோ?

மந்திரி—ஏதோ ஒரு சூதிருக்க வேண்டும். எல்லாம் சிறிது நேரத்தில் வெளியாகுமே!

அரசன்—இச்சமயம் நான் என்னாலியன்ற உதவியைச் செய்து குகசேனரை மிகவும் மகிழ்விப்பின்

மட்டுமே என் மனம் ஆறுதல் பெறும். எவ்விதத் தாலும் குகச்சந்திரனுக்கு அவன காமித்த தைய லை விவாகம் முடித்து வைக்கவேண்டும்.

மந்திரி—சித்தத்தின்படி யெல்லாம் சரிவர நடக்கும்.

[போஜன மணி யடிபட]

அரசன்—போஜனம் செய்யும் நேரமாயிற்று. உட் செல்வாம்.

[அரசனும் மந்திரியும் உட்செல்ல]

---

## மூன்றாங் காட்சி.

இடம்—தர்மகுப்தனது மாளிகை, உட் கூடம்.
காலம்—இரவு-முதல்யாமம்.

[தர்மகுப்தன் சிறிது சோகமாய் ஆசனத்தில் வீற்றிரு ப்ப, தேஜோவதி வராநின்றாள்.]

தர்மகுப்தன்—சோமப்பிரபையின் சமயம் பார்த்து வந்தாயா ? என் மனம் தடுமாறுகின்றது.

தேஜோவதி—இதோ வந்து விடுவாள். மன்க்கலக் கம் என்னத்திற்கு ? என் தமயன் என்ன செய்து போடப் போகிறார் ?

தர்மகுப்தன்—அவர் உனக்கு கூடப்பிறந்த தமயனே யாயினும், நீ அவரது மனப் பாங்கை நன்றாக வறி யமாட்டாய். ஒரு காரியத்திலும் எளிதே பிரவே சியார். பிரவேசித்தாலோ என்ன இடையூறுற்ற

வழியும் எடுத்த காரியத்தைச் சாதிக்காமல் விடவும் மாட்டார். நீ நடந்த வயணத்தை மகட்கெடுத்துரைத்தாயா?

**தேஜோவதி**—நான் சொல்லவில்லை. 'தகப்பனார் உன்னை அவசரமாக அழைக்கின்றார்' ரெனச்சொன்னேன்; அவள் 'இதோ வருகிறேன், போ' வெனச் சொன்னாள்.

[சோமப்பிரபை, தனது தோழி ஒருபுடை விசிறிகொண்டு வீச, அன்னமென மெல்லென வராநின்றாள்]

**தர்மகுப்தன்**—[மகளை நோக்கி] அம்மணி, நீ நேற்றுப் பின் பகல் காமன் திருவிழாவைப் பார்த்தற்காக மாடியிலேறி நின்றாயா?

**சோமப்பிரபை**—ஆம் மாடியினின்று வேடிக்கையைப் பார்த்ததுண்டு. எதற்காகத் தாங்கள் இக் கேள்வியைக் கேட்டீர்கள்?

**தர்மகுப்தன்**—வேறொன்றுமில்லை. அச்சமயம் உனக்கு அத்தான் முறைமையனும் குகச்சந்திரன் திருவிழாவைப் பார்த்துக்கொண்டு நமது வீதிவழியாகச் சென்றதாகக் கேள்வியுற்றேன். அவன் எவ்வாறோ உன்னைக் கண்டதாக மதிக்கிறேன்.

[சிறிது தூரத்தில் யுத்த பேரிகை முழங்காநின்றது.]

அகாலத்தில் போர் முரசு முழங்குகின்ற காரணம் என்னை ?

சோமப்பிரபை—நீங்கள் கூறுவது வியப்பை தரா நின்றது. அவர் என்னைக் கண்டிருக்க வேண்டு மென எவ்வாறு துணிவுற்றீர்கள் ? யான் ஆடவர் நேத்திரங்கட்கு அரூபியாயிற்றே !

தர்மகுப்தன்—அம்மணி, நிகழ்ந்த வொன்றை உனக்குக் கூறுகிறேன். நேற்றுப் பின் பகல் காமன் பண்டிகை நடை பெறுங்கால் குகச்சந்திரன் நமது வீதியில் வரும் போழ்து உன்னை மாடியில் நிற்கக் கண்டு அடங்கா விரகநோய்க் காளாயினன் போலும். சிறிது நேரத்திற்கு முன்னம் எனது மைத்துனர் குகசேனரும், அவர் மனைவி தேவசமிதையும் உன்னைத் தங்கள் குமாரனுக்குப் பெண் கேட்க வந்தனர். நானோ பெண்ணோது பூதமே தெனமருட்டப் பார்த்தேன். அவரோ மிகவுங் கோபத்தோடு உன் மாமி தேவசமிதையை யிட்டுக் கொண்டு நமதில்லத்தை விட்டு நீங்கினர்.

சோமப்பிரபை—என்ன விபரீதம் ? [ஆலோசனை புரியா நின்றாள். ஓர் தோழி ஓடிவந்த ஓட்டத்தாற் பேசமுடியாமல் தர்மகுப்தனை நோக்கி]

தோழி—ஐயோ ! என்ன செய்வோம். மோசம் ! மோசம் !!

தர்மகுப்தன்—என்னடி உளராநின்றாய் ! உனக்குப்

பைத்தியம் பிடித்துக்கொண்டதா? [பேரிகை கேட்காநின்றது.]

தோழி—அதோ சப்தம் கேட்காநின்றதே! அஃது தங்கள்செவியில் விழவில்லையா?

தர்மகுப்தன்—அது போர்முரசு. முன்னரே அச்சத்தை எனக்குப் பயந்ததுண்டு. என்ன வயணம்?

தோழி—நமது வீட்டை முற்றுகைபோட ஒரு பட்டாளம் வராநின்றது. தங்கள் கண்ணிற்குக் கண்ணான மந்திரியார் இரகசியமாகச் சொல்லிவிட்டதனால் அறிந்தேன்.

சோமப்பிரபை—என்ன காரணத்திற்கோ?

தோழி—வெளியிட அச்சமாயிருக்கிறதே!

தர்மகுப்தன்—இனி என்ன செய்வேன்! மோசம் வந்ததே.

சோமப்பிரபை—என்ன அச்சமடி? ஒன்றிற்கும் பயப்படவேண்டாம். நடந்த வயணத்தை மறைக்காமல் வெளியிடு.

தோழி—[தர்மகுப்தனை நோக்கி] நமது நாச்சியார் சோமப்பிரபையைப் பிடித்துக்கொண்டுபோக சிலமகளிரும் பட்டாளத்திற்குப் பின்னாக வருகிறார்களாமே.

தேஜோவதி—ஐயோ! ஐயோ!! ஈதென்ன கொடுமை?

தர்மகுப்தன்—பேரச்சத்தை விளைவியாநின்றதே! ஐயோ, என்ன செய்வது? குகசேனன் போல்

லாதவனெனச் சொன்னேனன்றோ ?

சோமப்பிரபை—[அடங்காதெழுந்த சீற்றத்தை யடக்கிக் கொண்டு] ஆ! ஆ!! இப்போழ்து எனக்கு வந்த கோபத்தால் பட்டாளத்தையும் அரசனையும் குக சேனனையும் நொடிப்பொழுதில் நாசஞ்செய்திருப் பேன். வலி குன்றிய நரர்களிடத்து தேவ சக் தியைப் பிரயோகிக்கக் கூசுகிறேன். அன்றியும், நான் இவர்களை ஹதம் செய்துவிடின் இந்திரன் வெகுள்வானே என வஞ்சாநின்றேன். ஆயினும் நீவிர் அஞ்சன்மின். பதறாத காரியம் சிதராது. [சிறிது ஆலோசியா நின்றுள்] இப்போழ்தே உள்ளீடு வெளியாகின்றது. நான் மண்ணிற் பிறக்க நேர் ந்த காரணம் புலப்படா நின்றது. குகச்சந்திரர் என்னை எவ்வாறு ஊனக்கண்ணாற் காண நேர்ந்த தென வெழுந்த ஐயம் நீங்கிற்று. இப்புவியில் நான் தோன்றியது அவரை மணமாலை சூடுவதற் போலும். ஊழ்வினை யாரே விலக்கவல்லார். ஆயி னும் பார்ப்போம். [பேரிகைத்தொனி அருகே கேட் கின்றது]

தர்மகுப்தன்—அம்மணி, பட்டாளம் இதோ வந்து விட்டதே! குடிமுழுகிப்போமே!

சோமப்பிரபை—என்ன பயம்? ஒன்றிற்கும் அஞ்ச வேண்டாம். குகசேனரும் கூடவே வராநின்றார். பெண் கொடுக்கச் சம்மதந்தானென்று சொல்

லுங்கள். இனி யென்ன பயம்?

தர்மகுப்தன்—மிகவும் சந்தோஷம். கல்யாணத்திற்கு நீ சம்மதங்கொள்வையோ என்ற எண்ணமே என்னை மிகவும் வாதித்தது. குகச்சந்திரன் மிகுந்த புத்திசாலி. அவனைப்போன்ற சற்புத்திரன் உளனோ? நீ அவனை மணமாலை சூடிக்கொள்வதை நோக்க நான் மிகவும் சந்தோஷமுறுகின்றேன்.

சோமப்பிரபை—எந்தையே! நான் அவரைப் பாணிக்கிரஹணஞ் செய்துகொள்ளச் சம்மதமே. ஆயினும் ஓர் நிபந்தனையுளது. குகசேனர் அதற்கிசைவாராயின் கல்யாணத்தை நடத்திக்கொள்ளலாம்.

தர்மகுப்தன்—யாது நிபந்தனையம்மா?

சோமப்பிரபை—தாயார் மூலமாய்ச் சொல்லிவிடுகிறேன். பட்டாளம் மாளிகையைக் கிட்டாநின்றது. நான் உட்செல்கிறேன். அம்மா, நீயும் வா.

[சோமப்பிரபையும் தேஜோவதியும் தோழியரும் உட்செல்ல]

தர்மகுப்தன்—என்ன நிபந்தனையோ? கல்யாணத்திற்குடன்பட்டவள், வேறென்ன சொல்லிவிடப்போகிறாள். விவாகத்திற்கு ஓர் சிறிதும் இணக்கமில்லாத சோமப்பிரபை அச்செயற்குச் சம்மதங்கொண்டதே எனக்கு நல்ல வாழ்வு. ஆயினும் ஏதோ சொல்லிவிடப்போகிறாளாமே! அது என்னமோ?

[தேஜோவதி வராநின்ருள்]

இதோ வந்துவிட்டாளே. என்ன?

**தேஜோவதி**—[தர்மகுப்தனது செவியில் ஒன்றை இரகசியமாகச் சொல்லிக் கடேசியாக]

இப்படியல்லவோ சொல்லாநின்ருள்.

**தர்மகுப்தன்**—ஈதென்ன தர்ம சங்கடம்? [பட்டாளத்தின் ஆரவாரம் மாளிகையருகே கேட்கின்றது] பட்டாளம் வந்துவிட்டதே. ஆயினும், பயப்படாதே. நான் குகசேனரிடம் பக்குவமாய்ப் பேசிக் காரியத்தைச் சரிப்படுத்துகிறேன். நீ உள்ளே போ. நான் அத்தானைப்போய் தக்கபடி வரவேற்பேன்.

**தேஜோவதி**—நான் தங்களது சாமர்த்தியத்தைப் பார்க்கவேண்டும். எனது அண்ணனது மனங்கோணமல் அவரை யிசைவித்துக் கலியாணத்தை நடத்துங்கள்.

**தர்மகுப்தன்**—அப்படியே செய்கிறேன். நீ பயத்தையொழி.

[இருவரும் வெவ்வேறு வழியாய் மறைகின்றனர்]

---

## நான்காங் காட்சி.

**இடம்—தர்மகுப்தனது மாளிகை, முன்கூடம்.**

**காலம்—இரவு, ஏழு நாழிகை.**

[அரசனது பட்டாளம் மாளிகையைச் சுற்றி நின்று

கொண்டது. தந்திரி முன்செல்லக் குகசேனனும் இந்திர குப்தனும், அமரதாசனும் பின்சென்று படியேறிக் கூடத்தை யடையாநின்றனர். வாயில் காப்போன் வெருக்கொண்டு உள்ளே ஓடாநின்றான். தர்மகுப்தன் பதறிக்கொண்டு உள்ளிருந்து கூடத்திற்கு வராநின்றான்.]

தர்மகுப்தன்—அத்தானே, என்ன பிரமாதத்தை விளைத்துவிட்டீர்கள்! கிணற்றுத்தண்ணீரை வெள்ளமா கொண்டோடிப் போய்விடும்?

குகசேனன்—மைத்துனரே, நான் வீணே ஒருவருக்குத் துன்பத்தை விளைவிப்பேனா? நான் பெண் கேட்பதற்கு நீர்வாய் திறக்கக்கூடவிடவில்லையே. தீராக்கோபம் போராய் முடியுமென்றபடி ஏதோ நடந்துவிட்டது. ஆயாசம் வேண்டாம்.

தர்மகுப்தன்—கலியாணத்திற்கு ஓர் தடையுமில்லை. முதற்கண், பெருந் தயைபுரிந்து பட்டாளத்தைத் திருப்பிப் போய்விடச் செய்யவேண்டும். தங்களது தங்கையும் மற்றுமுள்ளாரும் படுந் திகிலைத் தாங்கள் அறியமாட்டீர்கள். எங்கட்கோ புத்தி கலங்காநின்றது.

தந்திரி—தர்மகுப்தரே, ஏன் பேரச்சமுறுநின்றீர். பெண் கொடுப்பது சம்மதமாயின் எனக்கும் இப் பட்டாளத்திற்கும் இவண் என்ன வேலை?

தர்மகுப்தன்—பெண் கொடுப்பதற்குச் சம்மதமே. தாங்கள் கடிது சென்று எனது இணக்கத்தை

அரசருக்குரைத்து மன்னவரை வெகுளிகொள்ளாதிருக்கும்படி செய்யவேண்டும். இதுவே நான் செய்யும் விண்ணப்பம்.

குகசேனன்—தந்திரியாரே, எனது மைத்துனர் கூறியபடி அரசரிடஞ் சென்று காரியம் மங்களமாயிற்றெனச் சொல்லவேண்டும். நானும் அதிகாலையில் மன்னவரைக் காண வருகிறேன்.

தந்திரி—நீங்களிருவரும் சமாதானமுற்றதை நோக்கி மிகவும் மனமகிழ்ந்தேன். இதோ பட்டாளத்தை இருப்பிடத்திற்கனுப்பிப் போடுகிறேன். அரசர் துயில்கொள்ளும் முன்னம் நடந்ததை யுரைத்துக் கோபத்தையாற்றுவேன். தர்மகுப்தரே, அச்சத்தை ஒழியும்; போய்வருகிறேன்.

[தந்திரி பட்டாளத்தை யழைத்துக்கொண்டு வெளியேறு கின்றான்]

தர்மகுப்தன்—இப்பொழுதுதான் என்னை ஆட்டுவித்த நடுக்கம் நீங்கிற்று. தாங்கள் படபடப்பாய்க் காரியத்தைச்செய்து எனது புத்தியை நிலைகுலைந்து போம்படி செய்தீர்களே. சிறியார் பிழைபிழைப்பின் பெரியார் சிறிது பொறுக்கவேண்டாவோ? இனி, என்ன தடையுளது? பெண்ணைத் தாராளமாய்ப் பாணிக்கிரஹணஞ் செய்துகொள்ளலாம்.

குகசேனன்—இவ்வித விணக்கமான பேச்சு முன்னரே உமது வாயினின்று பிறந்திருக்குமாயின், ஒரு

வித அல்லலும் நேர்ந்திருக்கமாட்டாதே. ஆயி னும் நீர் மறுத்தது ஓர் நன்மைக்குத்தான். ஏனெ னில், இக்கல்யாணத்தை நமது அரசரே தமது பொக்கிஷ சாலையிலிருந்து நிதியைத் திறந்தெ டுத்து மிகுந்த கோலாகலமாக நடத்துவிக்கப்போ கின்றார். நான் ஒரு காசும் செலவழிக்கவேண்டா மாம்.

தர்மகுப்தன்—அத்தானே, இராஜானுக்கிரகத்தைப் பூராவும் பெற்றீர்கள். உங்கள் பாக்கியமே பாக் கியம்.

குகசேனன்—முகூர்த்தத்தை நாளையே வைக்கவேண் டும்.

தர்மகுப்தன்—அப்படியே செய்துகொள்ளலாம். நா ளைத் தக்க முகூர்த்தமிருப்பின் ஏதே தடையுள து. அத்தானே, நான் பெண்ணில்லையென மனத் தைப் புண்படுத்தியதற்காக மனவருத்தமுறலா காது. நமது சோமப்பிரபை மிகுந்த நாணங் கொண்ட பெண். பெருங்கூச்சத்தால் ஆடவரை காணுதற்கும் மிக நாணுவள். அவள் தனது கூச்சம் தெளிந்து கணவனோடு ஒற்றுமைப்படும் வரையும் பாணிக்கிரஹணம் முடிந்திருப்பினும் அ வள் கன்னிகையாகவே யிருக்கவேண்டும்.

குகசேனன்—மைத்துனரே, ஈதென்ன வேடிக்கை யான பேச்சாயிருக்கிறதே! நீர் சொல்வது விள

க்கவில்லையே.

இந்திரகுப்தன்—[புறம்பாக] இவ்வளவு பாடுபட்டும் தொல்லையொழியாதுபோற் றேன்றுகிறதே!

தர்மகுப்தன்—தாங்கள் இவ்விடம் வந்து பெண்கேட்டுக் கோபத்துடன் என்னைவிட்டு நீங்கியதுமுதல் நாளும் தேஜோவதியும் என்ன செய்தோமென்பதைத் தாங்கள் அறிவீர்களாயின் என்னை மிகவும் கொண்டாடுவீர்கள். தங்களது குகச்சந்திரன் விவாகத்தை ஆதியில் எவ்வளவாகக் கடிந்தாளோ அதனினும் பதின்மடங்கு சோமப்பிரபையும விவாகத்தில் வெறுப்புற்றிருந்தாள்.

தேஜோவதி—அண்ணா! அவள் மனதை நாஙகள் இணக்குவிக்கப்பட்ட பாடு உரைக்கடங்குமோ?

தர்மகுப்தன்—ஆண்கா ற்றென்றால் ஆகவே ஆகாதென வெறுத்துநின்ற சோமப்பிரபைக்குக் குகச்சந்திரனது உன்னத குணத்தையும் அறிவின் விசாலத்தையும் தேவ பக்தியையும் மிகவும் எடுத்துரைத்த போழ்து அவள் அவனை மதிக்கத் தலைப்பட்டாள். ஆயினும் தனது நாணங்கெட வருமே என்பதற்குப் பயந்து விவாகத்திற்கு மற்றும் அச்சங்காட்டினள். பின்னர் நான் தங்கள் தங்கையை அவளிடம் வைத்துவிட்டு வெளியே வந்துவிட்டேன்.

குகசேனன்—இவ்வளவு நாணங்கொண்ட பெண்ணு

முண்டோ! ஆயினும் புருஷரை வெறுப்பது தகுதியோ? சரி, எப்படியாயினும் விவாகம் கடிதில் முடியவேண்டுமே.

தர்மகுப்தன்—அவளுக்கு இணக்கம் உண்டாகும் வரை ரதி சாந்திமுகூர்த்தத்தை மட்டும் விலக்கிப் பாணிக்கிரஹணத்தை முடித்துவைக்க ஒரு தடையுமில்லை.

குகசேனன்—இவ்வாறு விவாகத்திற்கு உடன்படுவாருளரோ? திரும்பவும் பெண்ணில்லை யென்று தானே சொல்ல வராநின்றீர்.

தர்மகுப்தன்—அத்தான! கோபம்வேண்டாம். இவ்வகை நிபந்தனையோடு மணமுடியுமாயின் பெண் சம்மதிக்கிறாள். இல்லையாயின் தான் பிராணத்தியாகஞ் செய்துகொள்வாளாம். இதுவே எனக்குற்ற திகில். சோமப்பிரபை உயிர்விடின் எனதுயிரும் நீங்கும்; தமது தங்கையும் மாண்டு மடிந்துவிடுவாளே.

தேஜோவதி—அண்ணு, தற்காலம் மணத்தை முடித்துக்கொண்டு, அவள் மனமிசைந்தபின் ரதிசாந்தி நடத்திக்கொண்டால் என்ன?

குகசேனன்—இனி என் செய்வது? பெண்ணைக்கட்டியும் குகச்சந்திரன் சந்நியாசியாய்த்தானிருக்க வேண்டுமோ? அவனுக்கிப்படியா தலைவிதி வரும்?

இந்திரகுப்தன்—மாமா, அவனது விரகதாபம் தங்கட்குத் தெரியுமல்லவா? எப்படியாவது அவளைத் தொட்டுப் பாணிக்கிரஹணஞ் செய்துகொள்ளும் பாக்கியமேனும் கிட்டின் அவன் உயிர்தரித்திருப்பான்.

குகசேனன்—நீ சொல்வது சரிதான். தற்கால சாந்தியாவது கிட்டுமே. சம்மதியோமாயின் விவாகம் முற்றும் விக்கினமுறும். அது அவன் மனத்தைஅளவிடற்கரிய வாதனைப்படுத்தும். உயிரைவிட்டாலும் விட்டுவிடுவானே. மைத்துனரே! நீர் சொல்கிறபடி பாணிக்கிரஹணத்தையாவது கடிதில் முடித்துவையும்.

தர்மகுப்தன்—அதற்கென்ன தடை? நாளை வேண்டுமாயின் வேத விதிப்படி பாணிக்கிரஹணத்தைச் செய்துகொள்ளலாம். என்மீது ஆயாசங்கொள்ளாது நான் கேட்டுக்கொண்ட நிபந்தனைக்குத் தாங்கள் இத்தீபம் அறிய உறுதிசெய்து கொடுக்கவேண்டும்.

குகசேனன்—வாயுறுதி போதாதோ? பெரிய தர்மசங்கடம். ஆயினும் அப்படியே சத்தியஞ்செய்து கொடுக்கிறேன்.

[தீபசாக்ஷியாக சத்தியஞ் செய்துகொடுக்கிறான்]

தர்மகுப்தன்—இனியோர் தடையுமில்லை. தாங்கள் கடிதில் முகூர்த்த தினத்தை நிச்சயித்துக்கொண்

டு வந்து பெண்ணைத் தங்கள் குமாரனுக்கு வது வை செய்துகொண்டு போகலாம். நாளை வேண்டு மாயினும் விவாகத்தை நடத்திக்கொள்ளலாம்.

குகசேனன்—சரி, அப்படியே செய்வோம். நாங்கள் போய்வருகிறோம்.

தேஜோவதி—சாப்பிட்டுவிட்டுப் போகலாமே.

குகசேனன்—இல்லை: மிகவும் நேரமாயிற்று. போய் வருகிறோம்.

[குகசேனனாதியோர் செலவுபெற்று வீட்டுக்குத் திரும்பாநின்றனர்.]

தர்மகுப்தன்—ஏ, பெண்ணிடஞ்சென்று வதுவை நிச் சயமாயதென்று சொல்லிவிடு. எல்லாம் சுபமாக முடியவேண்டும்.

தேஜோவதி—அதற்கென்ன? உடனே தெரிவிக்கி றேன். நெடுநேரமாயதே. போஜனத்திற்கு வா ருங்கள்.

[இருவரும் உட்செல்கின்றனர்]

---

ஐந்தாங்காட்சி.

இடம்—குகசேனனது இல்லம். முன்கூடம்.

காலம்—நடுநிசி.

[குகசேனனும் இந்திரகுப்தனும் தேவசமிதையும் அமரதாச னும் கூடத்துட் புகாநின்றார்.]

குகசேனன்—அமரதாசா, நீ உட்சென்று போஜ

னத்தைச் சித்தஞ்செய்.

[அமரதாசன் உட்செல்கிருன்]

அப்பா இந்திரகுப்தா! நீ உனது நண்பனிடஞ் சென்று விவாகம் இசைந்ததை உடனே சொல்ல வேண்டும். ஆயினும் நிபந்தனே அவனுக்குத் தெரிய வேண்டாம்.

இந்திரகுப்தன்—இது ஒரு நல்ல சூழ்ச்சிதான். குகசேனன் மனத்துள் அமுதத்தைப் பெய்வதுபோ லிருக்கும். ஆயினும் தங்களது அந்தரங்கம் யாதென்பதைத் தெளிகிலேன்.

குகசேனன்—விவாகம் முடிந்தபின் நமது குகசேனன் தனது மனேவியை ஆளுவதற்கு யாதே தடை நிகழும். வேத விதிப்படி அக்னி சாக்ஷிபாக ஓர் பெண்ணே வதுவை செய்துகொண்டபின் அவள் பால் சர்வ சுதந்தரத்தையும் கணவன் அடைகின் ருனல்லனே?

இந்திரகுப்தன்—தாங்கள் சொல்வது ஒருவாறு யுக்தமே. ஆயினும் தாங்கள் அக்னி சாக்ஷியாக தர்ம குப்தருக்குச் செய்துகொடுத்த பிரதிக்ஞை அவலமாமே. அதுவே என் மனத்தை வருத்தாநின்றது. சத்தியந் தவறலாமோ?

குகசேனன்—நான் அத்தகைய சத்தியத்தைச் செய்து கொடுக்காதிருப்பின் தர்மகுப்தர் நமது குக

சேனனுக்குப் பெண்ணைக் கொடுக்கச் சம்மதிப்பாரா?

இந்திரகுப்தன்—மாட்டவேமாட்டார். நூறு பொய்யைச் சொல்லியேனும் கல்யாண காரியத்தை முட்டின்றி முடித்துக்கொள்ளலாம். அதிற் பாவமில்லையென உலகினர் கூறுவர்.

குகசேனன்—நாம் தர்மகுப்தரிடஞ் செய்துகொடுத்த வாக்குறுதி குகசேனனுக்குத்தெரியக்கூடாது.

இந்திரகுப்தன்—ஆம், தெரியாமலிருப்பதுவே நலமாகத் தோன்றுகின்றது. ஆயினும் தங்கள் கருத்தென்ன?

குகசேனன்—தெரிவிப்பின் வைராக்கியம்கொண்டு அப்படிப்பட்ட விவாகம் வேண்டவே வேண்டாமெனச் சொல்லித் துறவியாய் வெளியேறினும் வெளியேறுவன். அல்லையேல், பெண்ணைக்கட்டியும் அசிதாரா விரதியாயுறைய நேரிடும். இருவிதத்தாலும் அவன் இக்கட்டிற்கே யாளாக வேண்டி வரும். ஏனெனில் நான் சத்தியஞ் செய்திருப்பதை அவனுணர நேரின், எனது சத்தியத்தைக் காப்பாற்றுதற்காக சோமப்பிரபையைப் பக்கலிலிருக்கும் மோகத்தைத் துறந்து இல்லத் துறவியாயே யிருப்பன். ஏனோ அவனுக்கு அத்தகைய இடுக்கணை விளைவிக்கவேண்டும்?

இந்திரகுப்தன்—அப்படியாயின் தாங்கள் செய்து கொடுத்த சத்தியம் ஒருவழி நிற்ப, குகசேனன் அதனையறியாது தனது காதலியோடு வாழவோ?

குகசேனன்—ஆம், ஆம், அவனை யாதொரு தோஷமும் அணுகாது. சத்தியந்தவறின பாதகம் என்னை என்ன செய்யினும் செய்க.

தேவசமிதை—அப்பா இந்திரகுப்தா, சத்தியத்தை மனப்பூர்வமாக அலக்ஷியஞ் செய்யின் பெரும் பாதகமாகாதோ? எனக்குத் திகிலாயிருக்கிறதே.

இந்திரகுப்தன்—அத்தே, கலியாணம் முதற்கண் தடையின்றி நிறைவேறட்டும். பின்னர் இதனைப் பற்றி யோசிப்போமே.

குகசேனன்—சரி, போஜனத்திற்குச் செல்வோம். நெடுநேரமாயது. உள்ளே போவோம்.

[மூவரும் உட்செல்ல]

இரண்டாம் அங்கம் முற்றும்.

## மூன்றும் அங்கம்.

### முதற்காட்சி

இடம்—தர்மகுப்தர் மாளிகையிலமைந்த அலங்கார கொட்டகை.

காலம்—இரவு இரண்டு நாழிகை.

[குகச்சந்திரனுக்கும் சோமப்பிரபைக்கும் வேதவிதிப் படி பாணிக்கிரஹண முகூர்த்தம் முடிந்து பெண்ணும் மாப் பிள்ளையும் ஊஞ்சலில் வீற்றிருக்கும் அமயம். அரசன் தனது பரிவாரத்தோடு அவண் விஜயஞ் செய்யவே குகசேனனும் தர்மகுப்தரும் தக்கபடி மன்னனை வரவேற்கா நின்றனர்]

அரசன்—நமக்குப் பரம சந்தோஷம். மணமகனுக்குத் தக்க மனையாட்டி கிட்டியதைப்பற்றி உள்ள படி மனம் பூரிக்கா நின்றேன். மன்மதனும் இரதியும்போல் கண்ணிற்கின்பத்தைப் பயக்கும் இவ்விருவரும் நீடூழி வாழ்க. தீர்க்க ஆயுளையும் ஒப்பரிய போகத்தையும் ஈசன் இவ்வதுவரர்க்கு அளிக்கவேண்டும்.

[அரசன் எழுந்து ஆணிமுத்தாலாகிய மாலைகளை மணமகனுக்கும் மணமகளுக்கும் தனது கையாலணியா நின்றான்]

குகசேனன்—தங்களது பரிபூரணகிருபையால் இவ் விவாக மகோத்சவம் எவரும் மிகவுங்கொண்டாடும் வண்ணம் நடைபெறுகின்றது.

அரசன்—இக்கலியாணத்தைச் சிறப்பிக்கவந்தவரொவ்வொருவரும் பூரண திருப்தியுறுமாறு போஜன சுகத்தையும் வெகுமானங்களையும் அளிக்கவேண்டும். இதன்பொருட்டு ஒருகோடி திரவியம் வரையும் தாராளமாய்ச் செலவிடும்படி நமது பொக்கிஷதாரனுக்கு ஆக்ஞை செய்துளேன்.

குகசேனன்—தங்கள் வாக்கிற் கெதிர் வாக்குளதோ ? தங்கள் பண்டாரியார் சொர்னப் பைகளையும் வெள்ளிப் பைகளையும் திறந்து வைத்துக் கொண்டு தட்டில்லாமல் எல்லாச் செலவுகட்கும் காசை யுதவுகின்றார். அன்றியும் தங்கள் கருவூலத்திருந்து வந்த பீதாம்பரங்களும் பட்டாடைகளும் பணிதீர்ந்த ஜரிகைத்துப்பட்டாக்களும் உயர்தரமான சால்வைகளும் அவரவர் தகுதிக்குத் தக்கபடி பரிசளிக்கப்படுகின்றன. சம்மானம் பெற்றமாந்தரது முகங்களோ மலர்ந்த செந்தாமரையினும் பொலிந்து தோன்று நின்றன. தங்களது கருணைக்குப் பாத்திரமாயபின் யாதே குறைநேரும்.

அரசன்—இவ்விவாகம் நமக்குப் பேரானந்தத்தை விளைவியாநின்றது. அன்றியும் இஃது ஏதோ தெய்வீகமான திருவிழாவென வெண்ணுகிறேன். இவ்வரியகாட்சி மண்ணுலகிற் கிட்டவல்லதோ ? குகசத்திரன் தனது குணத்திற்கேற்றபடி தக்க பாக்கியத்தைப் பெற்றான்.

[காஸ்மீர தேசத்துத் தாசிவர; வந்தவள் மன்னனையும் சபையோரையும் வணங்கிவிட்டு அதியற்புத நடனஞ் செய்யாநின்றாள்.]

அரசன்—செட்டியாரே, இஃது ஒப்பரிய நடனம். கால்கள் பூமியைத் தொட்டனவென்றும் தொட்டிலவென்றும் துணிந்து கூறமுடியவில்லை.

குகசேனன்
தர்மகுப்தன் } —எல்லாம் தங்களது அனுக்கிரகமே. இவளைப்போல நடனமாடவல்ல மெல்லியல் இந்தப் பரதகண்டத்திற் காண்பதரிதெனச் சொல்வர்.

அரசன்—நீவிர் சொல்வதொக்கும். எத்தனையோ காஸ்மீரமகளிரது நடனத்தைக் கண்டுளேனாயினும் இவளது நடனம்போற் பரம சுகத்தை ஒன்றேனும் அளித்திலது.

குகசேனன்—தங்களது சித்தம் உகக்கும் வண்ணம் ஈசன் இத்தெய்வீக நடியை இச்சமயத்திலுதவினானெனவே மதிக்கிறேன்.

[இளமங்கையர் போந்து வதுவரர்க்கு லாலி பாடாநின்றார்]

அரசன்—குகசேனரே, மிகவும் பேரானந்த முற்றேன். பிரதி தினமும் இக்கலியாணக் கோலத்தை வந்து கண்டு மகிழ்வேன். போய் வருகிறேன்.

[அரசன் தனது பரிவாரத்தோடு வீடுசெல்க]

---

## இரண்டாம் காட்சி

காலம்—சாயங்காலம்

இடம்—குகசேனனது மாளிகை

[மூன்று நாளும் கலியாணச் சடங்குகள் நடந்தேறி நாலாம் நாட் பிற்பகல் பெண்ணை யழைத்துக்கொண்டு குகசேனன், குகச்சந்திரன், இந்திரகுப்தன், தேவசமிதை முதலாயினர் குகசேனனது மாளிகைக் குட்புகாநின்றார்]

குகசேனன்—அப்பா, குகச்சந்திரா! தெய்வச்செயலாய் உனது மனப்பாங்கின்படி விவாகம் நிறைவேறிற்று. இக்கலியாணம் முட்டின்றி முடியப்பட்டபாடு சாலவும் பெரிது. கனல் சான்றாக நீ கைப்பிடித்த மனையாட்டியை சயனக் கிரகத்திற்கிட்டுச் செல்தற் கென்ன தடை? நல்ல முகூர்த்தம் வராநின்றது. தேவசமிதே, மணமகளை சயனக் கிரகத்திற்கழைத்துக்கொண்டு செல்.

சோமப்பிரபை—[உக்ர ரூபங்கொண்டு ஆட்காட்டிவிரலை யமதண்டம்போலசைத்து] துஷ்டா! யாது சொன்னாய்? வயது முதிர்ந்தும் அறிவு குறுகிய பேதாய், சத்தியத்தை மனதார முறித்தெறியத் துணிகின்றாயல்லவா? உன் கதி யாதாகின்றது பார்!

குகசேனன்—[நடுநடுங்கிக்கொண்டு] ஐயோ! மிகவும் பேரச்சத்தைத் தராநின்றதே! கண்கள் சுழன்று நெஞ்சம் தடுமாறுகின்றதே! இனி, இவ்வுயிர்

இவ்வுடலத்தில், நிற்கவாபோகிறது! ஓ! இதோ வுயிர் பறக்கின்றதே! [வீழ்ந்து காலே உதைத்துக் கொண்டு சாகிருன்.]

குகச்சந்திரன்—ஐயோ! ஐயோ!! ஐயோ!!! ஈதென்ன விபரீதம்! [யாவரும் அலரா நின்றனர்]

தேவசமிதை—ஐயையோ தெய்வமே! நீ இப்படியோ என் தலையில் எழுதினுய்! [தேம்பியழுது மூர்ச்சையுறுகின்ருள். மற்றை மகளிர் திகிலாற் பிடியுண்டு சோமப்பிரபையின் பாதங்களில் வீழ்ந்து]

மகளிர்—அம்மா! மகமாரி!! பரதேவதே!!! எங்கட்கு உயிர்ப்பிச்சை தரவேண்டும்.

[சோமப்பிரபை ஒன்றுங் கூருது ஓர் அறைக்குட் செல்கின்ருள்.]

குகச்சந்திரன்—[சிறிது பிரமை நீங்கி] இதனது உட்சூதை யோர் சிறிதும் தெளிகிலேன்!

இந்திரகுப்தன்—நீ யறியாய்; முன் நடந்தவோர் இரகசியம் உனக்குத் தெரியக்கூடாதென்பதெங்களெண்ணம். இப்போழ்தே காரியம் பழுத்து விட்டதே! இத்தகைய கேடு விளையுமெனவோர் சிறிதும் எண்ணிலேமே!

குகச்சந்திரன்—நிகழ்ந்த இரகசியத்தை வெளியிடாது ஏதேதோ சொல்கின்றீரே!

இந்திரகுப்தன்—அப்பா, குகச்சந்திரா, இவ்விவாகம்

முடிதற்குமுன் நினது பிதா ஓர் சத்தியஞ்செய்து கொடுக்கநேர்ந்தது. பாணிக்கிரஹணமாயினும் நீ சோமப்பிரபையோடு அவளது சம்மதமின்றிக் கூடிவாழக் கூடாதெனத் தர்மகுப்தரிடம் தீப சாக்ஷியாக வாக்குறுதி செய்துகொடுத்தார்.

சுகச்சந்திரன்—இது எனக்குத் தெரியவே தெரியாது. தெரிந்திருக்குமாயின் விவாகத்தை மறுத்திருப்பேனே!

இந்திரகுப்தன்—உனக்குத்தெரியின் கலியாணம் நிறைவேறாது நீ பெருந்துன்பத்திற்காளாவாயே யெனவெண்ணி நடந்த இரகசியத்தை யுனக்குணர்த்தவில்லை. சத்தியந்தவறிய பாவம் தம்மைப் பிடிக்கினும் நீ சுகமாக வாழவேண்டியதொன்றே தமது பேராசை. ஆயினும் இத்தகைய தூர்மரணம் திடீரெனவவருக்குவருமென வொருவரும் எண்ணிலேம்.

சுகச்சந்திரன்—எத்தனையோ அன்பாய் ஆதரித்து என்னை வளர்த்ததந்தையை யிழந்தேன். ஐயோ! அவரது குணத்தை எவரே புகழாதார்! இக்கதியோ நேரவேண்டும்! சத்தியத்தை அலக்ஷியஞ் செய்யலாமோ! அதனது பலனைக் கைமேற்கண்டார். [பேரழுகை]

இனியாகவேண்டியதி யாது! அன்னை யின்னம் மூர்ச்சை தெளிந்திலளே. பிதாவிற்குரிய உத்தர

## நான்காம் அங்கம்.

### முதற்காட்சி.

இடம்— தேவசமிதையின் அந்தப்புரம்.

காலம்— சூரியோதய சமயம்.

[தேவசமிதையும் கோமளாங்கியும் வர]

**தேவசமிதை**— கோமளாங்கி, நான் படும்பாட்டை யென்னென்றுரைப்பேன்! கணவனை யிழந்த மகளிர் தீப்பாய்ந்து உயிர் துறப்பதே மரபாயினும் எனது குமாரனது க்ஷேமத்தைக் கருதி பிரதி தினமும் விரதம்நோற்று இவ்வுயிரை இதுகாறும் தாங்கி நின்றேன். குகச்சந்திரனோ நாளுக்கு நாள் துரும்பா யொடுங்கி வருகிறான். அவனுக்கு நல்ல காலம் எப்போழ்துதான் பிறக்குமோ! ஓ, ஈதென்ன! இருந்தாற்போலிருந்து எனது இடத்தோளும் இடது நேத்திரமும் துடிக்கா நின்றன. இவை நல்ல குறியெனப் பெரியவர் கூறுவரே! அன்றியும் என்னை யறியாமல் யாதோ வொரு களிப்பு என் இதயத்துள் இக்கணத்தில் ஊற்றெடுக்கா நின்றது.

**கோமளாங்கி**— அம்மா, தாங்கள் வருத்தமுறவேண்டாம். எனக்கும் தங்களைப்போலவே நன்னிமித்தங்கள் பல விளைந்தன. தங்கள் குமாரருக்கு நற்காலம்

கட்டியதென்பது திண்ணம். இன்று நான் நித்திரை விட்டெழும் சமயத்தில் நல்ல சொற்பனமொன் றைக் கண்டேன். சோமப்பிரபை தங்களது குமா ரரோடு ரதியைப்போற் கொஞ்சி விளையாடப் பார்த்தேன். அக்கனவு இப்போழ்தும என் மன த்தை விட்டகலாது உறையாநின்றது.

தேவசமிதை—அப்படியா! மிகவும் ஆநந்தம்! நல்ல காலம் வரவேண்டும். நீ எனது மருகியின் குண த்தை நன்குணர்ந்திருக்கக் கூடுமாதலின் அவ ளைப்பற்றி என்ன நினைக்கிறாய்? எனது குமார னிடம் அவட்கிருக்கும் நோக்கம் யாது?

கோமளாங்கி—அம்மணி, தெய்வப் பிறவியாகிய சோமப்பிரபையைப் பற்றி என் சொலவல்லேன்! அவள் என்னோடும் அவளது அன்னையோடுமே சிறிது வார்த்தையாடுவள். மற்றைப் பெண்டிரி டம் மௌனமே. பிறந்த இல்லத்தை விட்டு புக் கில்லமாகிய தங்களது கிரகத்திற்கு வரும்போழ்து என்னைத் தன்னோடு நீங்காதுறையும்படி அவள் கேட்டுக் கொண்டதனால் அடியாள் இவண் வர நேர்ந்தது.

தேவசமிதை—நல்லது. சோமப்பிரபைக்குக் குகச் சந்திரனிடமிருக்கும் நோக்கம் எத்தகையது? நீ ஏதேனும் புலன் கண்டிருக்கலாமன்றே.

கோமளாங்கி—தாங்கள் கேட்கும் கேள்வி யுக்தயா

னதே; சோமப்பிரபை தங்களது குமாரரிடம் தக்க மரியாதை படைத்தவளென்பதற்கு ஐய மில்லை. ஆயினும் காதலுக்கும் அவட்கும் வெகு தூரமென்றே தோன்றுகிறது. பிரதி தினமும் பிராமண போஜனமானவுடன் கைக்கண் பொற் கிழியும் மாணிக்கப் பையுந் தாங்கித் தனது கணவ ேனாடு வினயமாய் நின்று அந்தணரொவ்வொரு வர்க்கும் தக்ஷிணையை மிக வினிதாய்க் கொடாநின் றாள். ஆகவே அவள் தங்களது புத்திரரிடம் தக்க மதிப்பை வகித்திருப்பது திண்ணமன்றோ! ஆயி னும் நாடோறும் இருவரும் ஒருவரை யொருவர் தரிசிக்க நேரினும் காதல் பிறந்திலதென்றே கூறு வேன். ஏனெனில், ஓர் தினத்தேனும் அவளி டம் புன்முறுவல் விளைந்ததைக் கண்டிலேன். தங்கள் குமாரரிடம் அவட்கு வெறுப்பு மில்லை, காதலெனும் விருப்பு மில்லை. ஆயினும் மதிப் பும் ஓர்வித அன்புமுளது. அது நிற்க-இன்று நம்மிருவர்க்கும் நன்னிமித்தங்கள் கண்டிருப்பதா லும், உஷத் காலத்தில் அடியாள் கண்ட கனவி னாலும் நன்மை கடிதில் விளையுமெனவே எண்ணுகி றேன்.

தேவசமிதை—மிகவும் ஆனந்தம். எனக்குமவ்வாறே தோன்றுகின்றது. மிகப்புளிப்பாய மாங்காய் பக் குவம் வரவே அமிழ்தினுமினிய பழமாவதுபோல், நமது சோமப்பிரபையின் பிணக்குத்தீர்ந்து அவள்

எனது புத்திரனுக்கியைந்த மணாட்டியா யமைவா ளென நம்பிக்கையை வகிப்பேன். அன்றியும் எனது குமாரனை இதுவரையும் இயற்றிய தானங் களும் தவங்களும், விரதங்களும், வீண்போமோ! பலனைத்தாவே தரும. எதற்கும் ஈசனது அருளே மூலமாம். இன்று அம்மையப்பராகிய சிவபெரு மானுக்கு நல்ல அபிஷேகம் நடாத்தி அவரது அருளை நாடுவேன.

**கோமளாங்கி**—நல்ல வழியைக் கண்டீர்கள்.

**தேவசமிதை**—நீ கடிது சென்று திருமஞ்சனத்திரவி யங்களைச் சேகரி; தாமதமில்லாமல் ஆலயஞ்செல் லவேண்டும்.

[காட்சி மறைய]

---

## இரண்டாங் காட்சி.

இடம்—யாக சாலை.

காலம்—விடியற்காலம்.

**சுகச்சந்திரன்**—குரு கற்பித்தவண்ணம் மந்திரத்தை உள்ளபடி மந்திமை வாக்கால் உச்சரிப்பதையறிந் துகொண்டேன். இனி வேள்வித்தீயின் முன்னி லையிலிருந்து அதனை ஜபிக்கவேண்டும்.

[யாகசாலையிலமைந்திருந்த ஹோமகுண்டத்தின் பாங் கர், விபூதியும் உருத்திராக்கமும் அணிந்து தக்க சிரத்தை

யோடு குகச்சந்திரன் பத்மாசனத்தமர்ந்து தனது மந்திரத்தை யுருவேற்று நின்றான். ஆகுதி பெய்யப்பட்ட ஹோம குண்டத்திலிருந்து அக்னி வலஞ்சுழித் தெரியா நின்றது. குகச்சந்திரனது தேகம் விதிர்விதிர்க்கவே அக்கணம் ஹோம குண்டத்தினின்று அங்கியங்கடவுள் முழு நீறும் குண்டலமும் யஜ்ஞோபவீதமும் அணிந்து கிருஷ்ணாஜினம் தரித்த அந்தணவுருவோடு குகச்சந்திரனுக்குப் பிரத்தியக்ஷமாகாநின்றார். அங்கியங்கடவுள் எதிர்ப்படவே குகச்சந்திரன் பொருக்கெனவெழுந்து சாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ்செய்து திரும்பவுமெழுந்து தலையிற் கூப்பிய கையனாய்ப் பகவானைத்துதிக்கா நின்றான்]

குகச்சந்திரன்—அங்கியங்கடவுளே! தேவர் அனைவர்க்கும வாயிலாயுறையும் பெரியோய்! உன்னை மகிழ்விக்கின் தேவர் யாவரும் திருப்தியடைவர். ஏ, சத்தியசொரூபா! அவரவர்க்குரிய பலியையும் அவரவர்க்குத் தக்காங்கு கொண்டுபோய்ச்செலுத்துவோய்! உள்ளபடி நோக்கின் யாவும் நீயன்றோ! எழுநாவெனப் பெயர்பெற்று உனது ஏழு கலைகளால் சப்தலோகங்களாய் உறையும் ஈசா! ஏ, நீருறுதியே! பசிமயமாய் எவ்வுயிர்க்குமவ்வுயிராய் எங்கணும் அவ்வவற்றின் உதரத்தே நின்று போஜனசுகத்தை உள்ளபடி காண்பது உன்னையன்றி வேறெவர்கொலோ! ஏ, வைசுவானரா! ஏ, வன்னி! நினது புகழை எங்ஙனம் விரிப்பேன்!

அக்னிபுருஷன்—தக்க சிரத்தையோடு என்னை வழிபட்டு எனது தரிசனத்தைக்கருதி வரங்கிடந்த

உத்தம பக்தா! கல்யாண், நீ வேண்டும் வரத்தைத் தடையின்றி யுதவுவேன், கேட்டுக்கொள்தி.

குகச்சந்திரன்—வேதவிதிப்படி அடியேன் கைப்பிடித் தவோர் தையல் எனக்கு வயப்படாது என்னைப் பீதியிலழுத்தலழுகோ! ஒருவன் ஓர் பெண்ணை மணமாலே சூடின முதல் நாள் அவள் தண்மதிக் குரியளெனவும், இரண்டாம் நாள் கந்திருவர்க் குரியளெனவும், மூன்றும் நாள அவனுனக்கு மனைவியாகின்றுளெனவும் வேதம் கூறி நான்காம் நாள் நீ கொடுப்ப கணவன் மனைவிதோளைத்தோய அருகனுவானெனவும் முறையிடுகின்றதே. அவ் வாறே நான்காம் நாள் என்வயமாகவேண்டியவள் ஏதோ அவளிடமிருக்கும் தேவசக்தியால் என்னை அச்சத்துளழுத்தா நின்றுளே! இணங்காமையை நோக்கி விரக்தியைவகித்து யான் எனது பொருளை உத்தம தானத்திற் செலவிட்டு வருங்கால் ஒரு பெரியவர் தோன்றி என்னை அருளுடன் நோக்கி இக்குறையை நிவர்த்தி செய்யவேண்டிய பொறுப்பு அங்கியங்கடவுளதெனவெனக்கு வலியுறுத்தி சர்வ தேவமுகனுகிய உம்மைக்கிட்டும் வழியை எனக்கு உபதேசித்துச் சென்றுர். யஜ்ஞதத்தர் கூறிய வண்ணமே அடியேன் உம்மை நோக்கி வரங்கிடந்தேன். எனது தவம் பழுத்து நீர் பிரத்தியக்ஷமானீர். கிருதார்த்தனுனேன். உமது அருளே எனக்குக்கதி.

அக்னிபுருஷன்—வேத தர்மங்களது உள்ளீட்டை நன்குணர்ந்த குகச்சந்திரா, கல்யாண். உனக்குக் கடிதில் சகல மங்களங்களும் விளையும். இதுகாறும் நினது மனப்பாங்கு கைகூடாததற்கு நினது தந்தையே காரணம். சத்தியம் எதனினும் பெரிதென்பதை மறந்து மிகவும் அவசரப்பட்டார். நீயோ சூதை யறியாது மனைவி தோளை ஆலிங்கனஞ்செய்யச் சம்மதங்கொண்டாய். எதிர்பாராத தீவினை விளைந்தது. அதனால் இதுகாறும் நீ அல்லற்பட்டாய். விமோசன காலம் கிட்டியது; துக்கத்தைப் புறங்காண்பாய்.

குகச்சந்திரன்—தங்களைக் காணப்பெற்ற அடியேனுக்கு இனி என்ன குறை நிற்கும். சர்வ சுபங்களும் கைகூடி வருமென்பதற்கையமுளதோ? தங்கள் சித்தம் என் பாக்கியம்.

அக்னிபுருஷன்—பாலகா, யான் நினது காரியத்தை முடிப்பிக்கும் வழியைக் காட்டுகிறேன், கண்டு கொள்தி. நான் சொல்லும் வண்ணம் நீ செய்யக் கடவாய். இன்று நீ நடத்துவிக்கும் பிராமண போஜன சமயத்தில் நானும் ஓர் அதிதியாய் வந்திருந்து சமாராதனத்தைச் சிறப்பிப்பேன். பின்னர் இற்றையிரவில் நினது சயனக் கிரகத்தில் யானும் உன்னோடு உறைவேன். அப்போழ்து ஓர் பெரும் அதிசயம் நிகழும். யான் அதனை யுனக்

குக் காட்டி நினது மனைவியின் அந்தரங்க சொரூபத்தை உனக்கு வெளிப்படையாக்குவேன். அப்போழ்து உனது மனைவி இதுவரையும் உன் வயப்படாத காரணம் உனக்கு உள்ளபடி விளங்கும். அதன் பின்னர் அவளது தோளைத் தோய்ந்து இம்மண்ணுலகிலேயே தேவபோகத்தை நீ காணும் வழியை யுனக்கு நான் காட்டிவிட்டுப் பின்னர் எனதிடஞ் செல்வேன். சுகமாக வீடு செல்.

குகச்சந்திரன்—தங்கள் சித்தம் என் பாக்கியம். அடியேன் செய்விக்கும் பிராமண போஜனத்தை தெய்வீகமே நேரில் வந்து அங்கீகரிக்குமாயின் எனக்கினி யென்ன குறை! பிரபு, தங்கட்குக் கோடி நமஸ்காரம்.

[அக்னிபுருஷன் உருக்கரக்க]

இனி யென்ன புதுமைகளைக் காணப் போகிறேனோ? எனது தவம் பழுத்ததெனவே சொல்வேன். எனது தாயார் மிகவும் மகிழ்ந்து சோகம் நீங்குவள். எனது குடும்பமே இடுக்கணிலிருந்து விலகி சுகத்தைக் காணும். எல்லாம் ஈசன் செயலே. [அமரதாசன் வர] அப்பா, அமரதாசா, இன்று சமாராதனம் மற்றைத் தினங்களிலும் பதின்மடங்கு மிகச்சிறப்பாக நடக்கவேண்டும். அதற்குத் தக்கபடி செய்.

அமரதாசன்—தங்கட்கு நல்ல காலம் வராதா? தங்

கள் அன்னையார் படும் மனோபாதை அளவுக்கடங்குமோ?

துகச்சந்திரன்—பொறுத்தார் அரசாள்வார் எனக் கூறுவரே. அவ்வாறே படவேண்டிய துன்பங்களையெல்லாம் பட்ட நமக்கு நற்காலம் கிட்டியதென்றே நினை. இனிக் கவலையுற வேண்டாம். தெய்வம் நமக்குத் துணை நிற்குமென்பதற்கு ஐயமில்லை. கடிது சென்று சமாராதனத்திற்காக வேண்டியவற்றைப் பார்.

அமரதாசன்—சித்தத்தின்படி செய்கிறேன்.

[காட்சி மறைய]

---

## மூன்றும் காட்சி.

இடம்—துகச்சந்திரனது வித்தியாமண்டபம்.

காலம்—இரவு ஐந்து நாழிகை.

[துகச்சந்திரன் ஏதோ வோர் நூலை வாசித்துக் கொண்டிருப்பவன் அதனைவிட்டு]

துகச்சந்திரன்— எனது நற்பாக்கியத்தால் அங்கியங் கடவுளை இன்று இருமுறை தரிசித்தேன். அவர் வரவால் இற்றைச் சமாராதனம் எத்துணைச் சிறப்புப் பெற்றது! அவர் வருவதாகச் சொன்ன நேரம் கிட்டிற்று.

[அமரதாசன் வர]

அமரதாசன்—பிரபு, யாரோ வோர் அந்தணர் இவ்

விய தேஜஸோடு நமது இல்லத்திற்கு விஜயஞ் செய்து தங்களைக் காண விரும்புகிறார்.

குகச்சந்திரன்—[தனக்குள்] அக்னிபுருஷராகவே யிருக்கவேண்டும். நீ உட் செல். [அமரதாசன் மறைய; குகச்சந்திரன் பொருக்கெனச் சென்று அக்னிபுருஷனை வரவேற்கிறான்]

பிரபு, ஒவ்வொரு கணமும் தங்களது வரவை எதிர்பார்த்து நின்றேன். இனி தங்களது கட்டளைப் படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன்.

அக்னிபுருஷன்—குகச்சந்திரா, உனது சமாராதனம் இன்று மூன்று லோகத்தையும் உகப்பித்தது. நீ காரிய சித்தியை மிகக் கடிதிற் காண்பாய். நீ சிறிது நேரம் நித்திரை கொள்ளலாம். நான் எழுப்பும் அமயத்தில் எழலாம். நானும் படுத்துக் கொள்கிறேன். தீபங்களை யெல்லாம் நிறுத்திவிட்டு நித்திரை கொள். [தீபங்களை யெல்லாம் நிறுத்திவிட்டுக் குகச்சந்திரன் நித்திரை கொள்கிறான். நடுநிசியில் சோமப்பிரபை எழுந்து தனது கதவை திறந்துகொண்டு]

சோமப்பிரபை—யாவரும் அயர்ந்து தூங்கா நின்றார். யான் எனது தங்கையைப் பார்க்கச் செல்வேன். [புறப்படுகிறாள்]

அக்னிபுருஷன்—[குகச்சந்திரனைத் தட்டி யெழுப்பி] அப்

பா, குகச்சந்திரா, எழுந்திரு, எழுந்திரு. உனது மனைவியின் செயலைப்பார். [குகச்சந்திரன் எழுந்து]

குகச்சந்திரன்—தேவதேவ, சோமப்பிரபை வெளிச் செல்கின்றாளே ! என்ன காரணமோ !

அக்னிபுருஷன்—அசாலமாகிய நள்ளிரவில் நினது மனையாட்டி வெளியேறு நின்றாள். நாமிருவரும் தொடர்ந்து செல்வோம். ஆயினும் நம்மை நோக்குவளாயின் சபிப்பாள், ஏதம் நேரும். ஆதலின், அவள் ஐயுறாவண்ணம் நாம் மனித வுருவைத்துறந்து வேற்றுருக் கொள்ளவேண்டும். யான் எனது மந்திர சக்தியால் நின்னை ரிஷபமாக்குவேன்; நானோ குதிரை வடிவைக் கொள்வேன். யாமிருவரும வெவ்வேறு வழியாய் வெளியேறிப் புல் மேய்வதுபோல நடித்துக் கொண்டு அவளது செயலை ஆராய்வாம். நீ யொருகணம் நினது கண்ணை மூடு.

[அங்கியங்கடவுள் குகச்சந்திரனை இடபமாகவும் தம்மை குதிரையாகவும் உருமாற்ற]

குகச்சந்திரன்—வெகு தூரஞ் சென்றுவிட்டாளே.

அக்னிபுருஷன்—நாமிருவரும் இவ்வேற்றுருவோடு விரைந்து சென்று அவளைத் தொடர்வாம்.

[இருவரும் வெளியேறுகின்றார்]

---

## நான்காம் காட்சி.

காலம்—நடுநிசி; பூரணச்சந்திரன் பிரகாசியா நின் றது.

இடம்—ஒரு பெரிய ஆலமரமும் அதன் சார்பும்.

[பலசாகைகளைத் தாங்கி வானுறவோங்கிய வோர் ஆல மரம் தோன்றுநின்றது. அவண் ஓர் கிளையில் சீரார்ந்த பவ ளக்காலும் நீரார்ந்த முத்துவடமும் கொண்ட பொன்னூஞ் சலில் சந்திரபிம்பத்தைப் பழித்த முகத்தழகுடன் ஒரு திவ் யப் பெண் தன்னை வேறிரு தேவமகளிர் இருபுரமும் நின்று சாமரம் இரட்ட எழிலுடன் வீற்றிருக்கிறாள். வீணை நாத மும், புல்லாங்குழலிசையும் மிருதங்கத் தொனியும் கலந்த தேவகானம் செவிக்கமுதம் பெய்யா நின்றது. சோமப்பிர பை சிறிது தூரத்தே விரைந்து நடந்து வரா நின்றாள். குதிரையாகவும் இடபமாகவும் உருமாறிவந்த அக்னிபுருஷ னும் குகச்சந்திரனும் அயலே நின்று நடக்கும் அதிசயங்களை நோக்கா நின்றனர். விரைந்து நடந்தவள் பொன்னூசலில் வீற்றிருந்த தனது தங்கையாகிய கனகப்பிரபையை யடைந் து ஊஞ்சலைப்பற்றி யேறி அவளோடு கூட அர்த்தாசனத்தில் வீற்றிருக்காநின்றாள். பின்னர், இருபெண்மணிகளும் மது வைப் பருகி திவ்விய போஜனஞ் செய்து கொண்டு மிகவுல்லா சமாக அளவளாவி ஊஞ்சலாடுங்கால் தேவ நட்டுவராம் தும் புரு, தேவதாசிகளாகிய ரம்பை, ஊர்வசி, திலோத்தமை, மேனகையாதியரை இட்டுக்கொண்டுவரவே அம்மகளிர் அற்புத நடனஞ் செய்யா நின்றார்; குகச்சந்திரன் ஆநந்த சாகரத்துள் ஆழ்ந்து]

**குகச்சந்திரன்**—ஈதென்ன புதுமை! ஏக காலத்தில் பூரணச்சந்திரன் மூன்று பிரகாசிக்கக் காண்கி

றேன்! வானிலிலங்கும் மதியமோ, மரத்துட் டோன்றும் சந்திர பிம்பங்களோ மிக்க எழில் படைத்தன? நான் காண்பது கனவோ? அன்றி நினைவோ? அன்றி யுள்ளபடி மெய்க் காட்சியோ? ஆராயுமறிவு என்னைவிட்டு நீங்காமையின் இது ஜாக்கிரமே. ஐயமில்லை. நான் பண்டைப் பிறவிகளிலும் இப்பிறப்பிலும் செய்த புண்ணியங்களெல்லாம் மறைவாய்ப் பழுத்துப் பலனைத் தரும் தருணமாகவே இதனைக் கொள்வேன். ஆ! ஆ!! ஆ!!! கனவிலேனும் இவ் அரிய கானங்களை இது வரை கேட்டதுண்டோ! கண்ணிற்கும் செவிக்கும் என்ன விருந்து! எனது கண்ணையும் மனத்தையும் கொள்ளைகொண்டு இவ்வூஞ்சலில் வீற்றிருக்கும் எனது மனைவியின் எழிலையும் அவளது சாயலைப் போனற அம்மங்கையின் சௌந்தரியத்தையும் எங்ஙனம் புகழவல்லேன்! இப்பெண் யார் கொலோ!

அக்னிபுருஷன்—ஆனந்தவாரிதியில் மூழ்கும் எனதன்பா, இவள் உனது மனைவி சோமப்பிரபையின் தங்கை; தெய்வ மகள்! பெயர் கனகப்பிரபை. உனது மனைவியோ ஊழ்வலியாலுந்தப்பட்டு உன்னை மணமாலை சூடுதற்கே இப்புவியில் உற்பவித்தாள். ஆயினும் இவ்விரு மகளிரும் என்றும் தமக்குள்ள நேயத்தால் ஒருவரைவிட்டொருவர் பிரிய வொண்ணுபல் இவ்வாறு ஒவ்வொரு தினத்

திலும் இரவில் ஒன்று கூடி உண்டு குடித்துக் களிக்கா நின்றனர்.

குகச்சந்திரன்—அப்படியா? தாங்கள் கூறுவதொக்கும். சோமப்பிரபையும் அவள் தங்கை கனகப்பிரபையும் ஒரே அச்சில் வார்த்தெடுத்த தங்கச் சிலைகள் போலத் தோன்றா நின்றார். எத்தகைய உழுவலன்பைப் படைத்துளார்! ஆ! ஆ!! அவ்விருவரும் கொஞ்சி விளையாடுவதை யென் சொல்வேன்! இதுவன்றோ மெய்யன்பு! இச் சுந்தரிகளது அழகு ஒரு வழிகிடப்ப, அவர் முன்னம் நிர்த்தம் செய்யும் இத்தெய்வமாகளிரது வனப்பைத் தான் என்ன சொல்வேன்? இம்மங்கையர் தமது வடிவழகால் மூன்று லோகத்தையும் பணி கொள்ள வல்லார் போலும்! இவர்கள யாரோ, அறிகிலேன். இவர்களை நட்டம பயில்விக்கும் அக்கிழவரது சாதுர்யத்தை என் சொல்வேன்! இவர் தான் யாரோ?

அக்னிபுருஷன்—புண்ணியங்களெல்லாம் பழுத்து மனம் பழுத்து முக்திக்கு வித்தாகா நின்ற குகச்சந்திரா! நீ இப்போழ்து இதுவரை காணாதவெல்லாம் ஊனக் கண்கொண்டு பார்க்கவும், கேளாதனவெல்லாம் ஊனச் செவிகொண்டு கேட்கவும் பாக்கியம் பெற்றாய். உன் சங்கைகளை யெல்லாம் ஒழிப்பேன், கேட்குதி.

சுகச்சந்திரன்—முன்னவனே முன்னின்றால் முடியாத தொன்றுளதோ! பகவானே நான் பெறும் பாக்கியங்கள் அனைத்திற்கும் தங்களது அருளேமூலம்.

அக்னிபுருஷன்—இக்கிழவர்தான் தேவ நட்டுவர்! பரதநூலின் உள்ளீடுகளனைத்தையும் உழவுகண்டவர்; இவரையே தும்புருவெனக் கூறுவர்.

சுகச்சந்திரன்—அப்படியா! மிகவும் ஆநந்தம்.

அக்னிபுருஷன்—அதோ தோன்றுபவள்தான் தொடையழகியாம ஊர்வசி. இவளை மனைவியாகக் கொள்ளும் பாக்கியத்தைப் புரூரவன் பெற்றான். பின்னர் ஓர் சமயம் விஜயன் தேவலோகத்தை யுற்ற காலை இவள் அவன்பால் மோகங்கொண்டாள். அருச்சுனனோ தனது மூதாதையின் மனைவியாயிருந்தவளென்பதை யுணர்ந்து அவள் குறிப்பிற்கிசையவில்லை. ஊர்வசி வெகுளிகொண்டு காண்டீபனை நபுஞ்சகனாகும்படி சபித்தாள். இவளிட்ட சாபம் பற்குனற்குத் தக்க சமயத்தில் உதவிற்று. பாண்டவர் ஒருவருடம் கரந்துறையும்படி நேர்ந்த காலத்தில் கீசக விராடவரையனது அரண்மனையில் பிரஹந்நளை எனப் பெயர் கொண்டு பேடியாய் அவ்வோராண்டையும் ஓட்டினான். அறிவாயன்றே!

சுகச்சந்திரன்—ஆம், ஆம்; தாங்கள் கூறியபடியே மகாபாரதத்திற் கேட்டுளேன். நல்ல பாக்கியத்

தைப் பெற்றேன். மற்றை மகளிரது பெயரை யும் அவர் வரலாற்றையும் விளக்கஞ் செய்யும்படி பிரார்த்திக்கிறேன்.

அக்னிபுருஷன்—அதோ, ரூபலாவண்யத்தால் கண்டவர் நேத்திரங்கட்கு அமுதூட்டி அவர் மனத்தையும் இன்புறச் செய்யவல்லவளாய்த் தோன்றுகின்றாளே அவளே ரம்பை. இவளது மேனி யழகைக் கண்ட இராவணன் அடங்கா மையல்கொண்டு இவளைப் பலாத்காரப்படுத்தப் பார்த்தான். அப்போழ்து இவள் கொழுநன் நளகூபரன் இராவணனை நோக்கி 'நீ எவ்வழகியையேனும் அவள் சம்மதமின்றி அவளது தோளைத் தோய்வையாயின் உன் சிரம் வெடிக்கக் கடவ' தெனச் சாபமிட்டான். இதனாலன்றே தசமுகன் ஜானகியின் கற்பைப் பங்கம் செய்யத் துணிந்திலன். நிற்க, 'இவளென்ன ரம்பையோ?' என உலகியலில் வழக்குண்மையால் மாந்தர் இவளையே எவரினும் கட்டழகி யென மதித்திருப்பதனையும் கவனி.

குகச்சந்திரன்—இத்தேவ தாசிகளெவரினும் இவளே மிக ரம்மியமான எழிலை யுடையாள்.

அக்னிபுருஷன்—இவளயலே நின்று நட்டம் செய்யும் அவளை யறிவையோ? ஒவ்வோர் அங்கத்தின் அழகையும் தனித் தனி யுற்று நோக்குதி.

குகச்சந்திரன்—உற்று நோக்கின் ஓர் வகையாய் இவ

ளே மற்றை மகளிரினும் மேதக்க கட்டழகியாவள். பொது நோக்கமாய் நோக்கின் ரம்பையே சிறந்தவளாய்த் தோன்றினும் ஊன்றி நோக்கின் இவளே பேரழகி.

அக்னிபுருஷன்—இவடான் திலோத்தமை. இவள் தோன்றிய வரலாற்றைக் கேள். சுந்தன் உபசுந்தன் எனும் அசுரர் இருவர் ஓர் காலத்தில் தேவர்க்கு மிக்க இடுக்கண் விளைவித்தனர். உடன் பிறந்தாராகிய இவ்விருவரும் எவரானும் வெல்ல முடியா வலி பெற்றிருந்தமையால் எங்ஙனம் இவரைத் தொலைப்பதெனத் தேவர் மயங்கினகாலை பிரமன் கவலையுற்று ஆராய்ந்து பின்னர் அழகியவொவ்வொரு பொருட்கண்ணு மிருந்து எள்ளெள்ளளவாய் அவ்வவற்றின் உத்தமவழகையெல்லாம் ஒருசேரத் திரட்டி ஒரு பெண்ணைப் படைத்தான். அதுபற்றி யவட்கு திலோத்தமை யெனப் பெயரமைந்தது. தனது கையாற் படைத்த இத்தையல் நல்லாள் பிதாவாகிய தன்னை வலம்வரும் போழ்து பிரமன் அவளை விடாது நேத்ரோத்ஸவம் கொண்டு இன்புறுதற்காக அவள் திரும்பும் திசை தொறும் ஒவ்வொரு முகங்கொண்டு நான்முகனுனன். பிரமதேவனையும் மோகத்துளழுத்திய இத்தையல் அச்சுந்தோபசுந்தர்கட்கு எதிரே தரிசனமுற்றகாலை அடங்கா மோகத்தால் மதி

புறம்போய அவ்விருவரும் அவளைப் பற்றுதற்காக ஒருவரோடொருவர் மீளாப் போர் புரிந்து யுத்த பூமியில் உயிர் துறந்தனர். தேவருக்குற்ற இடுக்கண் அதனால் விலகியது. திலோத்தமையின் வரலாற்றைக் கூறினேன்.

குகச்சந்திரன்—பெரும் இரம்பூது. இத்தகையாளா இவள்? ஒக்கும் ஒக்கும். இனி, அதோ நிற்கும் அவள் ஒருவளே இனந்தெரிய வில்லை. அவள் தனது கண்ணாலெவரையும் தனக்கடிமைப்படுத்த வல்லவள் போலும். ஒரோவழி இவடானோ மேனகை யென்பாள்

அக்னிபுருஷன்—ஆம், ஆம்; நன்கு கண்டாய். இவளது கடைக்கண் பார்வைக் காற்றாதன்றோ காதிகுமாரனாகிய விசுவாமித்திரன் தனது தவத்தைக் கெடுத்து அவட்கு ஈடுபட்டான். இருவரும் கூடி வாழ்ந்தபோழ்து சகுந்தலை பிறந்தாள். பின்னரன்றோ மேனகை கௌசிகனை விட்டு நீங்கினள். சகுந்தலையைப் பற்றி நீ தெரிந்திருப்பாயன்றோ.

குகச்சந்திரன்—அறிந்துளேன்? துஷ்யந்த சக்ரவர்த்திக்கு அவடானே மனைவி. மிக வருமையான பல விஷயங்களைத் தங்களது கிருபையால் உள்ளபடி உணராநின்றேன். ஏதோ சோமப்பிரபை தனது தங்கையோடு வார்த்தையாடப் பார்க்கின்றாளே.

அக்னிபுருஷன்—கவனத்தை யவண் வைப்போம்.

[தும்புருவும் தேவதாசிகளும் மறைகின்றனர்]

சோமப்பிரபை—தங்காய், இன்று வழக்கம்போல் உன்னிடம் நெடு நேரமிருக்க வொண்ணுது.

கனகப்பிரபை—எனக்கா, இவ்வாறு சொல்கின்றுய்?

சோமப்பிரபை—இன்று சமாராதனம் மிகச் சிறப்பாக நடந்தது. அதிதிகளில் ஓரந்தணண், நான் இன்றுவரை நரரிடத்திற் காணுத, ஒப்பரிய தேஜஸோடு விளங்கினன். என்றுங் கிட்டாத இத்தகைய அதிதி இன்று எவ்வாறு செட்டிய குமாரனுக்குக் கிட்டினுன்? என்னை யறியாது ஏதோ அச்சம் மனத்துட் புகுந்து வாதனை புரியாநின்றது. அவ்வந்தணனை நினைக்கும் தோறும் ஏதோ எனக்கு ஏதம் விளைவதுபோற் றேன்றுநின்றதே. எனது மதி ஏனோ மயங்கப் பார்க்கின்றது? என்னை மண்ணிற் பிறக்கச் செய்த வூழ் என்னை எளிதே விடாது போலும். யாதுதான் நேருமோ அறிகிலேன்.

கனகப்பிரபை—நீ யுறும் மன வாதனையை எங்ஙனம் சகிப்பேன்? அக்கா, ஊக்கத்தைக் கடைப்பிடி. வருவன வெல்லாம் வருக. மனத் தளர்ச்சி வேண்டாம்.

சோமப்பிரபை—எல்லாம் ஈசன் செயல். தேவரும் நரரும், பாதலத்தாரும் ஏனை ஆன்மாக்களும்

வித்தகச் செல்வனும் சிவபெருமானால் ஆட்டுவிக்கப்படும் பொம்மைகளன்றி மற்றென்னவா? உள்ளபடி நோக்கின் எவர்க்கே சுதந்திரமுளது.

கனகப்பிரபை—உனது வார்த்தைகள் எனக்குப் பேருபதேசமாகின்றன. நீ கூறும் வண்ணம் எல்லாம் சிவன் செயலென்றே வாளாவிருப்போம்.

அக்னிபுருஷன்—[குகச்சந்திரனை நோக்கி] இன்று எனது வரவால் இத்தெய்வப் பாவைய ரிருவர்க்கும் வந்த மன வாட்டத்தைக் கண்டாயா?

குகச்சந்திரன்—கண்டு கொண்டேன், பிரபு. என் காரியம் வெற்றிதான். சோமப்பிரபை திரும்பவும் எதோ சொல்கின்றாளே.

சோமப்பிரபை—தங்காய், இனி இவ்விரவு உன்னோடு கூடி அளவளாவி இன்பங்கொள்ள முடியாது.

கனகப்பிரபை—அக்கா, உன்னைவிட்டு எங்ஙனம் பிரிவை யாற்றுவேன். நீ என்னைவிட்டு மண்ணிற் பிறந்தபின் சொர்க்கத்திற்றான் எனக்கு யாதே பற்றுளது? அன்புடையாரைப் பிரியின் அதுவே நரகவாதனையாம். அன்னோரைக் கூடின் அதுவே பரமானந்தமாம். எப்போழ்து யான் நின்னோடு இடையறா வாழ்வைப் பெறுவேனோ?

சோமப்பிரபை—அச்சம் மீதூர்ந்தெழும்போழ்து அறிவு புறம்போகா நின்றது. அச்சந் தீர்ந்தோ

ரே உள்ளவா பெரியோர். தங்காய், இனி ஒரு கணமும் இவண் நிற்கலாற்றேன். உடனே வீடு சென்று உள்ளுறையவேண்டும். அப்பார்ப்பான் என்னை என் செய்வானோ? நான் போய் வருகிறேன். நீ தேவலோகம் செல். நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்.

[ஊஞ்சலிலிருந்து கீழே இறங்குகின்றாள்]

அக்னிபுருஷன்—பார்த்தாயா? நினது மனைவி ஊஞ்சலைவிட்டிறங்கா நின்றாள். இனி வேகமாய் வீடு செல்வாள். என்னை ஏதோ புலன் கண்டாள் போலும். இனி நாமிவண் அரைக் கணமும் தாமதிக்க வொண்ணாது. இருவரும் கடிதே வீடு செல்ல வேண்டும். எனது மந்திர சக்தியால் நாமிருவரும் இக்கணமே உனது வித்தியாகிரகத்தை யடைவோம். நீ உனது கண்ணை மூடிக் கொள்.

[உடனே இருவரும் மறைகின்றனர். சோமப்பிரபை மிக வேகமாய் வீட்டை நோக்கி நடக்கா நின்றாள்]

## ஐந்தாம் அங்கம்.

### முதற் காட்சி.

இடம்—குகச்சந்திரனது வித்யாக்கிரஹம்

காலம்—இரவு, நான்காம் யாமம்

[குதிரையும் இடபமும் வர]

அக்னிபுருஷன்—ஒரு கணத்திலிவனுற்றும். சோமப்பிரபையோ, இனி வந்து சேர்வள். உனது கண்ணை க்ஷணப் பொழுது மூடு. [குகச்சந்திரன் கண்ணை மூடுகின்றான்; அக்னிபுருஷனது மந்திரப் பிரயோகத்தால் இருவரும் சுயரூபம் பெறுகின்றனர்]

அப்பா, குகச்சந்திரா, உனது மனைவியின் செயலை பிரத்தியக்ஷமாகக் கண்டு கொண்டாயல்லவா?

குகச்சந்திரன்—பகவ, தங்களது அருளாற் காணுதன வெல்லாங் கண்டேன், கேளாதன வெல்லாங் கேட்டேன். இனி, இம்மண்ணுலக வாழ்வை விட்டு நீங்கும் போழ்து பிறவா வழியையுங்கண்டு முக்திப் படியும் ஏறுவேன்.

அக்னிபுருஷன்—நீ சொல்வதொக்கும். உனது மனைவி தெய்வப் பெண்ணென்பதை யுள்ளபடி யுணர்ந்தாய். தேவ அப்சரசுகள் நராது போகத்திற்கு எளிதே கிட்டவல்லரோ!

சுகச்சந்திரன்—தேவஸ்திரி போகம் எளிதிற் கிட்டும் பொருளன்று. யோக பலத்தாற் றவஞ் செய்து ஞானக் கண் பெற்றார்க்கு மூன்றுலகும் ஏவல் செய்யும். ஆகலின் அவர்களைத் தெய்வ மகளிர் தாமே வந்தடைவர். விசுவாமித்திரரை மேனகை வந்தடைந்தாளன்றே. ஓரோ வழி மகாவீரரையும் தேவ மகளிர் காமுற்று அவர் வயப்படுவது முண்டு. புரூருவனை ஊர்வசி யடைந்தாளன்றோ. ஆகவே பெருந்தவமும் மகாவீரமும் தேவபோகத்தை எளிதே தரவல்லனவெனக் கொள்ளலாம். எளியேனைப் போன்ற ஏழைகட்கு அஃது எவ்வளவு தூரம்!

அக்னிபுருஷன்—நீ நமக்கெங்ஙனம் இப் பெண் கிட்டப் போகிறாளென வஞ்ச வேண்டாம். இப்பிறவியிற் கானகஞ் செல்லாக்காலும் இல்லத்திருந்தே காமனைக்கடிந்து ஒப்பில்லா வறத்தையும் இயற்றியுள்ளாயாகலான உனக்குக் கிட்டாத தெஃதுளது! அறமேனும் பாவமேனும் அளவெஞ்சி நிகழின் அதன் பலனை இப்பிறவியிலேயே காணலாமென்பது பெரியோர் துணிபு. அன்றியும நீ ஓர் மகானது அருளால் மந்திரசித்தி கைவந்து என்னையும் உகப்பித்தாய். ஆகலின் இரண்டொரு தினத்திலேயே உனது திவ்விய மனைவியின் தோளைத் தோய வல்லவனாவை. நான் இதோ

கற்பிக்கப்போம் மந்திரத்தைப் பெற்று பொன்னு லக வின்பத்தை இம்மண்ணுலகிலேயே காணும் பாக்கியத்தைக் கடிதிற் பெறுவாய்.

குகச்சந்திரன்—அடியேன், உய்ந்தேன், உய்ந்தேன். சர்வ தேவர்கட்கும் முகமாயும் சத்திய சொரூப னுயும் நித்தியனுயுமுறையாநின்ற தங்கள் கிருபை யால் அடியேன் எதனைத்தான் பெறமாட்டேன்.

அக்னிபுருஷன்—உன் மனத்தை வருத்திய ஏக்கம் தீர்ந்து தேவபோகத்தை நீ காணும் வழியைக் கேள். ஓர் மந்திரத்தை யுனக்குக் கொடுப்பேன். நீ அதனை செவி வழித்தாய் மனத்துட் பதித்து விடிந்த வுடனே அதனை உனது மனைவியின் சய னக் கிரஹத்தின் வாசல் மேல் எழுதி வை. இத னுல் அவள் உன் வயப்படுவது திண்ணம்.

குகச்சந்திரன்—பகவ, தாங்கள் கூறிய வண்ணமே செய்கிறேன்.

அக்னிபுருஷன்—மந்திரத்தின் ஆற்றல் சாலவும் பெரி தென ஆன்றோரிடமும் கேட்டிருப்பாய். நான் உபதேசிக்கும் மந்திரம் உனது தேவியை நின்பால் ஈடுபடச் செய்யும். ஆயினும் ஓர் தந்திரத்தை யும் சொல்வேன். எனது மந்திரமே நினது மனை வியை உன் வயப்படச் செய்வதாயினும் நான் கற்பிக்கும் தந்திரத்தையும் கைக் கொள்வையா யின் உனது இச்சை மிகக் கடிதிற் கைகூடும்.

குகச்சந்திரன்—பிரபு, சித்தப் பாங்கின்படி நடக்கக் காத்திருக்கிறேன்.

அக்னிபுருஷன்—அருகே, வா [குகச்சந்திரன் செவியில் மந்திரத்தை உபதேசிக்கின்றார்] மந்திரத்தைப் பெற்றுக் கொண்டாயல்லவா? நீ யிதனை நினது மனைவியின் வாசலுக்கு மேல் எழுதிவை.

குகச்சந்திரன்—தாங்கள் கூறிய வண்ணமே செய்கிறேன். இனித் தாங்கள் அருள்வதாய் வாக்களித்த தந்திரத்தையுங் கற்பிக்கச் சித்தம் முகிழ்க்க வேண்டும்.

அக்னிபுருஷன்—ஆம், ஆம். நான் சொல்லும் தந்திரமும் நான் கொடுத்த மந்திரத்தோடு கலப்பின் பலன் துரிதமாகக் கைகூடும். நின்மலமாகிய அக்னி தானே எரிவதாயினும் காற்றுங் கூடின் சொல்லவும் வேண்டுமோ! விடியும் முன் மந்திரத்தை வாசலில் எழுதி விட்டுப் பின்னர் இப்பாடலிபுத்திரத்திலுள்ள உருத்திர கணிகையருள் தக்கயுவதியை மிக அலங்காரத்துடன் நினது கிரஹத்திற்கு வரவழைக்க வேண்டும். பின்னர் அவளை உனது மனைவியின் வாசற் கெதிரிலுள்ள மணிமண்டபத்துள் ஓர் ஆசனத்திரீஇ, புஷ்பங்களாலும் கந்தங்களாலும் ஆபரணங்களாலும் புனைவித்து அவளோடு சரச சல்லாபம் செய்வதுபோற் பாசாங்கு செய், பின்னர் நிகழ்வதைப் பார்.

சுகச்சந்திரன்—நல்ல சூழ்ச்சி.

அக்னிபுருஷன்—அப்போழ்து நினது மனைவி நின்னேடு ஊடல் கொண்டு பின்னர் கணப்பொழுதில் நின வயப்படுவள்.

சுகச்சந்திரன்—தாங்கள் கூறிய வண்ணமே செய்கிறேன்.

அக்னிபுருஷன்—புண்ணியம் பழுத்த உத்தம குணத்தோய், இந்திர போகத்தினுஞ் சிறந்த சுகத்தை இம்மண்ணுலகிலேயே கண்டனுபவித்துப் பின்னர் பிரபஞ்சமாய்கையை உதறிவிட்டு இருவரும் பிறவா வழிகண்டு பேரின்ப வீட்டினுறைவீர். கல்யாண; போய் வருகிறேன்.

சுகச்சந்திரன்—தங்களது அருளிற்குக்கோடி நமஸ்காரம். [அக்னிபுருஷன் உருக்கரக்க] எனது கலிபெல்லாம் அகன்றது. இனி நேரந்தாழ்க்கலாகாது; விடியும் சமயமாயிற்று. இன்று எனது மாதாவும், எனது நண்பனும் துயர்தீர்வர். துக்கக் கடலுள் ஆழ்ந்து கிடக்கும் எனது குடும்பம் இனிக் கரையேறும். எல்லாம் ஈசன் செயல்.

[மறைய]

———

## இரண்டாம் காட்சி

காலம்—அதிகாலை

இடம்—சோமப்பிரபையின் சயனக்கிரஹம்

[குகச்சந்திரன் சோமப்பிரபையது சயனக்கிரஹத்தின் வாசலை மெல்லென வணுகி]

குகச்சந்திரன்—சோமப்பிரபை யின்னம் துயிலெழுந்திலள் போலும். இதுவே தக்க தருணம். [குகச்சந்திரன் தனக்குக் கற்பித்த வசிய மந்திரத்தை அவ்வாசற்கு மேல் எழுதாநின்றன்]

இம்மந்திரம் இந்த திவ்வியமாதை என்னுடன் இணங்கச் செய்வது சரதம். தெய்வ கடாக்ஷம் கிட்டின் என்ன பாக்கியந்தான் வராமலிருக்க வல்லது? தெய்வந் துணை நிற்பின் முயற்சியின்றியும் எதுவும் கைகூடுமன்றே!

சோமப்பிரபை—[சயனித்தவாறே] அங்கே யார்?

குகச்சந்திரன்— நான்தான். [தனக்குள்] என்னை கண்டுகொண்டாளே! ஆயினும் என?

சோமப்பிரபை—[எழுந்துட்கார்ந்துகொண்டு] அத்தான் தானோ? இவ்விடம் என்ன காரியம்?

குகச்சந்திரன்—ஏதோ சும்மா வந்தேன். [விலகுகிறான்]

சோமப்பிரபை—காரியமின்றி வாளாவந்திருக்க மாட்டார். இவரிடம் கல்லைப்போல் வன்மையைப்

படைத்திருந்த எனது சித்தம் என்னை யறியாது இரண்டொரு தினங்களாக ஈடுபடப் பார்க்கின்றதே! ஆயினும் பொருட் படுத்தாதிருந்தேன். நேற்று முதல் யான் படும் வாதை சாலவும் பெரிதே. நேற்றுப் பிராமண போஜனத்திற்கு மிகுந்த தேஜசோடு ஒரு பார்ப்பான் வந்தானே. அவனை நினைக்குந்தோறும் மனம் பதைக்கின்றது. யாதுநேருமோ அறிகிலேன்! ஊழை யாரே தடுக்கவல்லார்! தெய்வ மகளிர் ஊத்தை யுடல் படைத்த மாந்தர் வயப்பட்டு அவர்கட்கடங்கி யொழுகுவது என்ன சிறுமை! இவ்வாறோ தலைவிதி என்னை யிழுக்கப் பார்க்கின்றது! என்னைக் கண்டு நடுங்கினோர்க்கெல்லாம் இனி நான் நடுங்கும் காலமும் வரும் போலும்! என்றும் என்னிடந் தோன்றாத பயம் இன்று எனது கணவன்பாற் பிறத்தற்குக் காரணம் யாது? சிறிது வீணையை வாசித்தேனும் மனத்தை வேறு வழியாய் நாட்டுவேன்.

[வீணையை வாசிக்கிறாள்; குகச்சந்திரன் மெல்லென மறைவாயணுகி வீணாகானத்தைக் கேட்டின்புறுகிறான்]

குகச்சந்திரன்—என்ன அற்புத நாதம்! என்பெல்லாம் நெக்குடைந்து மயிர் சிலிர்த்து செப்புதற்கரிய பேரின்பம் மனத்துள் விளையா நின்றதே! ஆ! ஆ!! எனது பாக்கியமே பாக்கியம்! இனி, இம் மெல்லியளது தோளைப் பகவான் அருட்படி யான்

கடிதிற் புல்லநேரும் போழ்து எனக்குண்டாகப் போகும் சுகத்தை எவரே கணிக்கவல்லார்! நிற்க. இனி நேரந் தாழ்க்கலாகாது. கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போமா? மனமே, வாட்டமுறுதே. இக்கணமே அங்கியங்கடவுள் எனக்குக் கற்பித்த தந்திரத்தையுஞ் செய்ய முயல்வேன்.

[மறைய]

---

## மூன்றாங் காட்சி.

இடம்—குகச்சந்திரனது மாளிகை

காலம்—விடிந்து மூன்று நாழிகை

[குகச்சந்திரன் ஏகாந்தமாகத் தனக்குள் சொல்கிறான்]

**குகச்சந்திரன்**—அங்கியங் கடவுள் எனக்களித்த மந்திரம் மிகக்கடிதிற் பலிக்கா நின்றது. கவலை நீங்கும் காலம் கிட்டிற்று. [அமரதாசன் வர] அமரதாசா, உன்னை நினைத்த கணமே நீ யுற்றாய். இதுவும் நல்ல அறிகுறியே. நீ விரைந்து சென்று எனது மைத்துனர் இந்திரகுப்தரை அழைத்துக் கொண்டு வா. [அமரதாசன் விலகுகிறான்; தேவசமிதை வருகிறாள்] அம்மா, நல்ல தருணத்தில் வந்தாய்.

தேவசமிதை—இரண்டு நாளாய் உன்னைப் பார்க்கப் பார்க்க மனம் பூரிக்காநின்றது. உனது தந்தை காலஞ் சென்றது முதல் மனோ சுகத்தை ஓர் சிறிதும் காணாதிருந்தேன். உனது க்ஷேமத்தைக் கருதியன்றே சககமனம் செய்யாது இவ்வுடலத்தை தாங்கி நின்றேன். இப்போழ்து, தெய்வம் நமக்கு நல்ல காலத்தைக் கொண்டு வந்ததென வெண்ணுகிறேன்.

குகச்சந்திரன்—அம்மா, நீசொல்லுவது சரிதான். தெய்வபலம் நமக்கு உள்ளபடி கிடைத்திருக்கிறது. அடங்காப் பிடாரி அடங்குங்காலம் கிட்டிற்று. இல்லறத்தையினி இனிதே நடத்தக்கூடும். இன்று சில விஷயங்கள் நேரும். நீ மறைவிலிருந்து உனது மருகி வசப்படும் விந்தையைக் கண்டு களிகூர்வாய்.

தேவசமிதை—சந்தோஷம். இன்று உனது முகத்தில் சோகக்குறி சற்றுமில்லை. ஏதோ பரம உற்சாகம் பிறந்திருப்பதைக் காண்கிறேன்.

குகச்சந்திரன்—இன்று நான் உனது மருகியின் கொட்டத்தை யடக்கி அவளை யாளும் விந்தையை நீ மறைவிலிருந்து காணவேண்டும்.

தேவசமிதை—அப்படியா! மிகுந்த ஆர்வத்துடன் காண்பேன்.

[அமரதாசன் வருகிறான்]

அமரதாசன்—அம்மா, தங்கள் மதனியார் தேஜோவதி யம்மாள் மகளிடம் வந்திருக்கிறார்கள். என்றுங் கூப்பிடாத நாச்சியாரவர்கள் இப்போழ்து என்னை யழைத்து அத்தையாரை அழைத்து வா அமரதாசா வென்றார்கள். வாருங்கள்.

தேவசமிதை—மிகவும் வியப்பாயிருக்கிறது. நல்ல காலம் சமீபித்ததென்பதற் கையமில்லை. சோமப்பிரபை இதுவரை ஒரு நாளேனும் என்னுடன்நேராய் வாய்திறந்து பேசின தில்லையே!

குகச்சந்திரன்—உனது மருகி இன்று காலமே என்னோடுஞ் சிறிது வாய் திறந்து பேசினள்.

தேவசமிதை—மெய்தானா! மிகவும் ஆனந்தம். பேசாமடந்தை பேசப் புகுந்தாள் போலும். நானும் அவளைப் போய்ப் பார்த்து வருகிறேன். மதினியாரும் வந்திருக்கிறார்களாமே.

குகச்சந்திரன்—தெய்வானுகூலம் கைகூடி விட்டது. போய் வா, அம்மணி. [தேவசமிதை உட்செல்ல; அமரதாசனை நோக்கி] அமரதாசா, இந்திரகுப்தர் ஏன் இதுகாறும் வந்திலர்? நீ அவரை கூப்பிடச் செல்ல வில்லைபோலும். காலையிலேயே வருவாரே. வெளியே சென்று பார்த்து வருகிறாயா?

[இந்திரகுப்தன் வர]

இந்திரகுப்தன்—இதோ வந்து சேர்ந்தேனே, யாது காரியம்?

குகச்சந்திரன்—எல்லாம் நல்ல காரியமே.

இந்திரகுப்தன்—சில தினங்களாக உன்னோடு தக்க சம்பாஷணம் கிட்டவில்லை. நீயோ பிரதி தினமும் அதிக காலையிலெழுந்து உனது சிவபூஜை மண்டபத்துட் புகுந்து ஏதோ தியானஞ் செய்து வருவதாகத் தோன்றுகின்றது. ஏதோ புதுமையுளது. அன்றியும் இரண்டு வாரங்களாக உன்னைக் கவனித்து வந்ததில், உனது மனத்தினிடம் மறைந்துறைந்த சோகம் நீங்கியதாகக் கொண்டேன். ஆயினும் மற்றொரு கவலை ஏதோவொன்று உன் மனத்துட் பதிந்துளது. மிகவும் ஊக்கமாக வேதோவொன்றை முடிப்பித்துக் கொண்டிருக்கின்றாய்போலும், நேற்றும் இன்றும் உன்னை நோக்கும்பொழுது மட்டுக்கடங்கா மகிழ்ச்சியுன்னுள் ளூற்றெடுப்பினும் நீயதனை அடக்கமாக புலன்காட்டாது மறைக்கின்றாய். நான் சொன்னது மெய்யோ, பொய்யோ?

குகச்சந்திரன்.—உனது மதிநுட்பம் சாலவும் வியக்கற்பாலது;

> ஐயப்படாது அகத்தது ணர்வானைத்
> தெய்வத்தோடொப்பக்கொளல்

எனத்தெய்வப்புலவன் இசைத்தவண்ணம் நீயெனது மனத்தையுள்ளபடி கண்டாயாகலான் நீ தெய்வமே. நிற்க. நமது மனக்கவலைகளெல்லாம் ஒழிந்

து பாக்கியங்களெல்லாம் பழுத்து இம்மண்ணுல கிலேயே இருவரும் தேவபோகத்தைக் கிட்டும் காலமும் கிட்டிற்று. நடந்தேறிய அற்புதங்களை யெல்லாம் உனக்கெடுத்துக்கூறி இன்றுநான் நடப் பிக்க உத்தேசித்த நாடகத்தையும் உனக்குக்காட் டுவேன். நீயும் எனதன்னையும் மறைவிருந்து நான் செய்யும் கூத்தைக்கண்டு ஆனந்தங்கொண் மின்.

இந்திரகுப்தன்—ஏதோ எனதறிவிற்குப் புலனுகாத சில அதிசயங்களை நீ கண்டுளாய்போலும். கால தாமதமின்றி அவற்றை எனக்கு விளக்கி உனது ஆனந்தத்தையெனக்குப் பங்கிட்டுத்தரவேண்டும்.

குகச்சந்திரன்—நீ கூறும் வண்ணம் செய்யவென்ன தடை? ஆயினும் அன்னையும் வரட்டும். [புறம்பாக] அமரதாசா.

அமரதாசன்—[உள்ளிருந்துவந்துகொண்டே] இதோ வந் தேன்; பணிவிடை யாது?

குகச்சந்திரன்—அன்னையாரை விரைவில் அழைத்து வா.

அமரதாசன்—இதோ செல்கிறேன் [மறைய]

குகச்சந்திரன்—இந்திரகுப்தா, குறைவேலையைக் குரு விற்கும் காட்டாதே யெனவுலகினர் கூறுவரன்றே.

அதுபற்றியே யானும் இதுகாறும் நடந்த அற்புத ங்களை எவர்க்கும் விண்டிலேன்.

இந்திரகுப்தன்—அப்பா, குகச்சந்திரா? நினது பரிசாரகன் ஓர் புதுமையை எனக்குக் கூறினான். நேற்று நீ செய்வித்த சமாராதனத்தை தெய்வீக ஒளி வீசிய அந்தணரொருவர் ஏற்றுக்கொண்டதாகவும், பின்னர் நேற்றிரவு அம்மகான் உன்னோடு கூடவே காலத்தைப் போக்கியிருக்கவேண்டுமென்றும் கூறினான்.

குகச்சந்திரன்—நீ கூறியது மெய்தான். ஆயினும் நேர்ந்த மற்றை இரகசியங்களை அமரதாசன் கண்டிருக்கமாட்டான். நீயும் எனதன்னையும் பூரிக்குமாறு யாவற்றையும் விரித்துக்கூறி மகிழ்விப்பேன்.

[தேவசமிதையும் அமரதாசனும் வர]

அன்னையாரும் வந்துவிட்டார்கள். அம்மா, மருகியிடம் சென்ற காரியம் யாது?

தேவசமிதை—இதுகாறும் நினது மனைவியைக் கண்டால் ஏதோ ஓர்வகை அச்சம் என் மனத்துள் எழுந்ததுண்டு. இன்றோ அத்தகைய திகிலொன்றும் விளைந்திலது. சோமப்பிரபையென்னோடும் தனதன்னை தேஜோவதியோடும் மிகவினிதாய் வார்த்தையாடினள். ஆயினும் ஏதோவோர் வகையான சோகம் அவள் மனத்துள் உறைகின்றதாகவே கொள்வேன்.

இந்திரகுப்தன்—சுகச்சந்திரா, நடந்த அற்புதங்களை எம்மிருவர்க்கும் விண்டு சொல்லி எங்களை ஆனந் தக் கடலுள் ஆழ்த்தி நீயும் பூரிப்பை யடைதி. அமரதாசனும் நாமுறும் களிப்பை யடையலா மன்றே.

சுகச்சந்திரன்—துக்கத்தை வெளிவிட விட அஃது குன்றும், இன்பமோ வெளிவிட விடப் பெருகும். ஆதலின் நான் மிகவினிதாக நிகழ்ந்த விந்தைகளை யெடுத்துக்கூறி உங்களை மகிழ்வித்துப் பின்னர் இற்றைப் பகல் மற்றுமாக வேண்டியவற்றையும் முடுக்கி முடித்து நமது அல்லலை வேரோடு களைந் து இடையூறற்ற சுகத்தைப் பெறவேண்டும்.

நடந்த அற்புதங்களை மனத்துட்கொண்டு வரு ம்போழ்தே எனக் குண்டாகும் பூரிப்பை யென் சொல்வேன். நாம் நால்வரும் சிறிது ஏகாந்த மான ஒதுக்கிடத்திற்குச் செல்வாம். அவண் நீங் கள் என்னிடம் ஊனச் செவியிதுவரை கண்டறி யாத விருந்தைப் பெறுவீர்கள். செல்வாம், வம் மின்

[நால்வரும் உட்செல்ல]

## நான்காங் காட்சி.

இடம்—சோமப்பிரபைபவதியும் மணிமண்டபம்.
காலம்—நண்பகல்.

[ஏகாந்தம்]

சோமப்பிரபை—ஈதென்ன விபரீதம்! எனது கதி அடியோடு மாறுகின்றதே! இன்று நிகழ்ந்த யாவும்புதுமையே. பேசக்கூடாதென யான் விரதங் கொண்டிருந்தவர்களிடமெல்லாம் என்னையறியாது வார்த்தையாடினேன். எனது மனமோ பேய்க்கோட்பட்டான் சித்தம்போல் என்வயமிழந்து சுதந்தரமற்று பரதந்திரமாகப் பார்க்கின்றது. இதன் காரணத்தைத் தெளியத்தூரப்போவானேன்! நேற்று சமாராதனத்திற்கு வந்த அந்த அந்தணனால் விளைந்ததுவே. அவர் மானிடச்சட்டை சாத்திவந்தாராயினும் அவர் திவ்வியபுருஷனே. எனது மணவாளர் இயற்றிய புண்ணியம் பழுத்து அவரை உய்விக்க வந்தனர் போலும். அம்மகானை நினைக்க நினைக்க என்மனம் அச்சத்திற்காளாகின்றது. யாது நேருமோ, தெளிகிலேன். வரவர அச்சம் மீதூர்கின்றதே! என் செய்வேன். வேறென் செய்வது? இனிக்கணவனுக்கடங்கி இல்லறத்தையவர் மனங்கோணாது நடாத்துவதே பொருத்தமானவழி. இனி என்ஜபம் ஓங்காது. நிற்க.

இப்புக்கில்லத்திற்கு கொடியேன் இழைத்த

பொல்லாங்கை நினைக்குங்கால் மனம் அலமரா நின்றது. வயது பதின்மூன்று நிறையாத சிறுமியாயினும் கொலைபாதகியெனும் பெயரை எடுத்தேன். மாமனைக்கொன்ற இச்சண்டாளிக்கு யாதே நற்கதியுளது. இதுமட்டோ? வேதோக்தமாக முடிந்த விவாகத்தை என்னிடமுற்றிருந்த ஆணவமலத்தால் அலக்ஷியஞ்செய்து கணவனை துக்கத்துள் ஆழ்த்தி, குடும்பத்தை அச்சத்துள் இருத்தி வேதநிந்தனை செய்தவளானேன். இல்லறத்தை அலக்ஷியஞ்செய்த காரணத்தால் பிதுர்க்களுக்குப் பெரிய அபராதம் புரிந்தவளுமானேன். இவற்றையெல்லாம் பரிகரிப்பதெங்ஙனம்? அடாஅது செய்தேனாகலின் படாஅது படவே வேண்டும். ஈசா, இனி நான் உய்யும் வழியுளதோ?

ஆ, ஆ, ஓர்வழி தோன்றுகின்றது; சத்திய புத்தியோடு அதனைப்பிடித்து ஒழுகுவேனாயின் இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை விளையும். பாரார், விசும்புள்ளார், பாதலத்தார், புறத்தார் இவர்களுள் எவர்க்கே உள்ளபடி சுதந்தரமுளது. வினைவழி ஆட்டுவிக்கப்படும் மாம்சப்பொம்மைகளேயன்றி மற்றென்னுவர். ஆணவமலத்தால் தாமே எச்செயற்கும் கருத்தாவெனக் கருதாநிற்பர். உள்ளபடி நோக்கின் எல்லாம் சிவன் செயலே; மாயை செய்யும் மருட்சியால் எவரும் தாமே அதிகாரிக

ளென்று நல்வினை தீவினைகளுக்குத் தம்மையாளா க்கிக் கொள்வர்.

ஒரு பெரியர்,—

என்செயலின் றியாவு நின் செயலென்
றெண்ணுவேனொவ்வொருகாலம்
புன்செயன்மாயை மயக்கினென்செயலாய்ப்
பொருந்துவேனஃதொருகாலம்

எனக்கூறினாரல்லரோ?

மூலையிலிருந்து மறைவாகசிவபரஞ்சுடர் ஆட்டுவிக்க ஆன்மாக்கள் தாமே யாடுவதாய்க் கருது வர். அருளுதயம் பெற்றவரோ மூலையில் மறை விருந்தாட்டுவிக்கும் சிவனை முன்னுக்கிழுத்து ஆடவிட்டுத்தாம் இறை பணிநிற்பர். இவர்களே மாயையை வென்றவர்கள்; இவர்களது மகிமை யுரைக்கடங்குமோ!

மூலையிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியரென் றுந்தீபற
தவத்திற் றலைவரென் றுந்தீபற,

என ஆன்றோர் கூறியுளாரன்றே! எனது கணவரோ உத்தம சிவபக்த சிரோமணியாகையால் அவரது உள்ளப்பாங்கின்படி யொழுகுலதே சிவப்பிரீதியாம். உய்யும் வழியுமதுவாம். என் செயல் தேய்ந்து எல்லாஞ் சிவன் செயலாகிப் பேரின்பத்திற்கும் வாயிலாகும். எனது பாதகங்களெல்

லாம் இக்கணமே பொழிந்தன. எங்ஙனமெனின்,

பாதகங்கள் செய்திடினும் கொலைகளவு கள்ளுப்
    பயிற்றிடினும் நெறியல்லா நெறிபயிற்றி வரினும்
ஜாதி நெறி தவறிடினும் தப்புகள் வந்திடினும்
    தனக்கென வோர் செயலின்றித்தான் அதுவாய் [நிற்கின்

நாதனவனுட லுயிராயுண்டுறங்கி நடந்து
    நானுபோகங்களையுந் தானுகச் செய்து
பேதமற நின்றிவனைத் தானுக்கிவிடுவன்
    பெருகு சிவபோகமெனப் பேசும் நெறியிதுவே

என முக்திவழிகண்ட ஆசான் கூறினுரல்லரோ. அவரது வாக்கே எனக்குற்ற துணையாகும்.

'எங்கொங்கை நின்னன் பரல்லார் தோள்சேரற்க
எங்கை யுனக்கல்லாதெப் பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றென்றுங் காணற்க'

எனக் கூறியபடி சிவபக்த சிரோமணியாகிய எனது கணவற்குகந்த அடிச்சியாகிச் சிவனை உவப்பித்து பிறப்பை யறுப்பேன். இனியேனு என்னைப் படைத்த பிரமனை நோவ வேண்டும். பழம் நழுவிப் பாலில் விழுந்த கதையாயிற்று. புளித்த மாங்காய் போல விருந்தயான், இனி எனது கணவர்க்கு இனித்த பழமாவேன்.

சித்தத்துட்டித்திக்கும் தேனுகிய சிவமே! பத்திசெய் யடியரை பரபரத் தியக்கும் முடிவிலா முதலே! நீயோ, குற்றஞ் செய்யினும் குணமெ

னக் கொள்ளும் பேரியோ யாதலின் அடியாளது சித்தத்தைச் சிவமாக்கி யான் செய்பவற்றைத் தவமாகக் கொண்டு என்னைக் கணவனுக்கினிய தர்ம பத்தினியாக்கி முடிவில் எம்மிருவர்க்கும் பிறவா வழியைக் காட்டி பேரின்ப முத்தியிலிருத்த வேண்டியது நினது பாரம். சிவபெருமானே! ஓலம்!! ஓலம்!!! ஓலம்!!!!

அசரீரி—அஞ்சல், அஞ்சல். உனது மனோரதங் கைகூடும். உனது கணவனுக்கு நண்பராகும் இந்திரகுப்தரை மறவாதே. உனது தங்கை கனகப்பிரபையை அவர்க்கு மணமாலை சூட்டுவி. உடனே உங்கட்கு ராஜபோகமுங் கிட்டும். முடிவில் நாலவரும் சிவபதத்தைக் கிட்டுவீர்.

சோமப்பிரபை—[சிரசின்மேற் கூப்பிய கையளாய்] திருவருள் ஒன்றுக்கும் பற்றாத இவ்வடிச்சியைக்கடைக்கணித்ததோ! உய்ந்தேன்! உய்ந்தேன்!! கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியாகிய சிவமே! எய்ப்பினில் வைப்பாகிய பரஞ்சுடரே!! அடியாள் எனது தங்கையை இன்றே இந்திரகுப்தருக்கு மணமாலை முடித்து வைக்கிறேன்.

எனதுள்ளத்துள்ள துயரெல்லாம் இன்றே யொழிந்தது.

கண்டத்தைக்கொண்டு கரும முடிப்பவர்
பிண்டத்தில் வாராரென்றுந்தீபற
பிறப் பிறப்பில்லை யென்றுந் தீபற

வென்றபடி இன்றுகண்ட திருவருளை இமைப் பொழுதும் மறவாமற் கொண்டு எனது வினையை ஒழிப்பேன். அன்றியும்,

எட்டுக் கொண்டார் தமைத் தொட்டுக் கொண்டே- [நின்றார்
விட்டாருலகமென்றுந்தீபற
வீடே வீடாகுமெனறுந்தீபற

வென்றபடி இப்போழ்தே பேரின்ப வீட்டை யெய்தினேன். இனியெனக்கென்ன குறை?

---

ஐந்தாங்காட்சி.

இடம்—சுகச்சந்திரனது கிரஹம்; முன்கூடம்.

காலம்—பிற்பகல்.

[சுகச்சந்திரனும் தேவசமிதையும் ஆசனங்களிலிருப்ப, அமரதாசனும் கோமளாங்கியும் பக்கத்தில் நிற்க]

தேவசமிதை—பாலகா, பாரத இராமாயணாதி இதிகாசங்களும் நினது சரிதத்தை மிஞ்சமாட்டா? ஆன்றோரது அனுக்கிரகத்தைப் பெற்று சர்வதேவ முகனாகிய அங்கியங்கடவுளை பிரத்தியக்ஷமாகக் காணும் பாக்கியத்தைப் பெற்றாய். ஊனக்கண்

கொண்டு தேவலோகவாசிகளையும் தரிசித்தாய். தேவகானங்களைச் செவியமுதங் கொண்டாய். இவை அனைத்திற்கும் காரணம் நீ இயற்றிய புண்ணியமுந்தவமுமே. மற்றும் ஆகவேண்டியது யாதேயுளது? தெய்வம் கற்பித்த தந்திரமாகிய நாடகமொன்றே முடியவேண்டும். இந்திரகுப்தனை உனது தங்கையை இட்டுக்கொண்டுவரும்படி அனுப்பினையல்லவா?

**குகச்சந்திரன்**—அவர் ஏன் இன்னம் திரும்பி வரவில்லை? நடந்த விர்த்தாந்தங்கள் அனைத்தையும் ரூபணிகைக்கு எடுத்துரைத்து சாயங்கால சமயம் அவளை வரும்படி ஏற்பாடுசெய்துவிட்டு வரும்படி சொன்னேன். சீக்கிரம் வந்துசேர்வர்.

[இந்திரகுப்தனும் ரூபணிகையும் வர]

**தேவசமிதை**—இதோ இருவரும் வந்துவிட்டார்களே.

[ரூபணிகை தேவசமிதையையும் குகச்சந்திரனையும் நமஸ்காரஞ்செய்கிறுள்]

**குகச்சந்திரன்**—தங்காய், உன்னைப்பார்த்து நெடுநாளாகின்றது.

**ரூபணிகை**—அண்ணு, தங்களது விவாகமகோத்ஸவத்திற் தங்களைக் கண்டதேயன்றி பின்னர் தங்களது தரிசனங்கிட்டவில்லை. தாங்கள் எதிர் பாராத அல்லல்களுக்காளாகி இதுகாறும் மிகவும் வருந்தி

னீர்கள். அடியாள் அப்போதைக்கப்போது தங் களது க்ஷேமத்தைத் தெரிந்துகொண்டு திருவரு ளைப்பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். இன் றோடு தங்களது கலியெல்லாமகன்றதைக்கேட்டு மிகவும் விம்மிதமெய்தினேன். அத்தானவர்கள் தங்களது திவ்விய சரிதத்தைக்கூறி வந்தபோழ்து கண்ணீருங்கம்பலையுமாகி நின்றேன். ஈசனது பூர ண கிருபைக்குப் பாத்திரமாயபின் நமக்கு இனி யாதே கவலை?

குகச்சந்திரன்—ஓரேயொரு சிறுநாடகம் உன்னோடு யான் நடிக்கவேண்டுவதொன்றே குறை. அத்தான் உனக்குச் சொல்லியிருப்பாரே.

ரூபணிகை—ஆம், ஆம். அந்நாடகத்தை யாடமிக வும் கூச்சமாயிருக்கிறது.

குகச்சந்திரன்—ஓரே ஆசானிடம் இளமையிற்கல்வி பயின்ற நாமிருவரும் சகோதரபாவமாகவே ஒழுகி வந்தோம். இனிமேலும் இருவரும் தமையனும் தங்கையுமே.

ரூபணிகை—அண்ணா, தங்களெண்ணப்படி அடியா ள் நாடகத்தை தங்களுடன் மிகவினிதாக நடிக்கி றேன். பகவான் தங்கட்குக் கற்பித்த மந்திரமும் தந்திரமும் ஒன்றுகூடின் மதினியார் முழுமுற்றும் தங்கள் வயப்பட்டு இல்லறத்தை யினிதே முடிக் கவல்ல தர்மபத்தினி யாவதும் திண்ணம்.

குகச்சந்திரன்—ஆம், ஆம். நீ கூறியபடியே சற்று நேரத்தில் முடியும். இந்திரகுப்தா, இனி நேரந் தாழ்க்கவேண்டாம். அன்னையாரும் நீயும் மறைந்திருந்து நடக்கும் நாடகத்தைக்கண்டு உவகை கொண்மின். அனறியும், இன்னுயிர்க்குற்ற துணையாய இந்திரகுப்தா, நீயும் இன்று தேவபோகத்தைக் கிட்டும் வழியைக் காண்பாய். கனகப்பிரபையை யுனக்கு மணமாலை முடித்துவைப்பேன்.

தேவசமிதை—நீங்கள் இருவரும் இதுவரை பட்ட பாட்டிற்கெல்லாம் தக்கபரிசாக பகவானது அருள் கிட்டியபடியால் உங்களது மனோபீஷ்டங்களெல்லாம் இனிது கைகூடி இருவரும் விண்ணுலகின்பத்தை மண்ணுலகிலேயே காணக்கடவீர்.

குகச்சந்திரன்—அம்மா, உனது ஆசீர்வாதத்திற்காக உனக்குக்கோடி நமஸ்காரம். ஏ, கோமளாங்கி, நீ இக்கணமே ரூபணிகையையிட்டுக்கொண்டு மணிமண்டபத்திற்குச் செல்தி. ரூபணிகா, நானும் இதோ உன்னிடம் வந்துசேர்கிறேன். சென்மின்

[ரூபணிகையும் கோமளாங்கியும் மறைய]

அமரதாசா, மிக்க அற்புதமான ஆபரணங்களையும், மலர்மாலைகளையும், வாசனைத்திரவியங்களையும் கொண்டுவா. கடிதுசெல்.

அமரதாசன்—சித்தம், சித்தம் [மறைய]

குகச்சந்திரன்—நானும் செல்கிறேன். நீங்கள் இருவரும் அதிசயத்தை மறைவிலிருந்து கண்டு களிக்க வேண்டும்.

தேவசமிதை
இந்திரகுப்தன் —அப்படியே கண்டு களிப்போம்.

[குகச்சந்திரன் உட்செல்ல]

தேவசமிதை—மருகா, குகச்சந்திரன் உனக்கு சோமப்பிரபையின் தங்கையாகிய கனகப்பிரபையை மணவினைமுடிப்பதாக வாக்களித்தானே? அந்த தெய்வமகளை எங்ஙனம் உனக்கு மனையாட்டியாக்குவன்?

இந்திரகுப்தன்—அத்தையாரே, அவனுக்கு உள்ளபடி தெய்வபலம் கிட்டியதால் அவன் எதனைத்தான் எளிதே சாதிக்கமாட்டான்? எதிர்பாராத தேவசுகத்தை எனக்குதவக் கங்கணங்கட்டிவிட்டான். ஈசா, எல்லாம் உனது திருவிளையாடலே.

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

முக்கண்ணப்பா, முடிவிலா முதலே, எல்லாம் வல்லசித்தா; நாயேன் நினது மகிமையை எங்ஙனம் விரித்துரைக்கவல்லேன்? ஒரு பெரியர்,

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும்
அன்றியதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாது முன்வந்து நிற்கினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்,

எனக்கூறியபடி, ஓர் தவமுஞ் செய்யாது எனது அன்பனது க்ஷேமமொன்றே கருத்தாய்ப் பாடுபட்டு வந்தவெனக்கு எதிர் பாராத சொர்க்கபோகத்தைக் கொடுப்பாய் போலும்.

அன்பர்பணி செய்ய வெனை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே

எனறவருள் வாக்கின்படி. சிவபக்த சிரோமணியாகிய குகச்சந்திரனுக்காகப் பாடுபடவே எனக்கும் விண்ணவரின்பத்தை நல்க வெண்ணங் கொண்டாய் போலும்.

தேவசமிதை—அப்பா, இந்திரகுப்தா, உனது அந்தரங்க சிவபக்தியை இன்றே நன்கு கண்டேன். தாழ்விலும் வாழ்விலும் சிவனை மறவாமையே அருளைப் பெறுவார்க்கு வழியாகும்.

இந்திரகுப்தன்—அத்தையாரே; தாங்கள் கூறும் நன்மதியே என்னுயிர்க்குற்ற துணை. தாயுமான சுவாமிகள் அருளியவோர் பாசுரம் மனத்துள் உதயமாகின்றது. சற்று இசைக்கிறேன். செவியமிர்தக்கொள்க,—

கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னீழல் வைகினும்
குளிர்தீம்புனற்கையள்ளிக்
கொள்ளுகினுமந்நீரிடைத் திளைத்தாடினும்
குளிர்சந்தவாடைமடவார்
வந்தலவுகின்றதென முன்றிலிடையுலவவே
வசதிபெறுபோதும் வெள்ளை
வட்டமதி பட்டப்பகற்போல நிலவுதர
மகிழ்போதும் வேலையமுதம்
விந்தைபெறவறு சுவையில் வந்ததெனவமுதுணும்
வேளையிலும் மாலைகந்தம்
வெள்ளிலை யடைக்காய் விரும்பிவேண்டியவண்ணம்
விளையாடி விழிதுயிலினும்
சந்ததமும் நின்னருளை மறவாவரந்தந்து
தமியேனை ரக்ஷை புரிவாய்
சர்வ பரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்த சிவமே.

தேவசமிதை—நீ எத்தகைய போகத்திலழுந்தினும் கணப்பொழுதும் சிவபெருமானை மறக்கமாட்டாயென்பது சரதம். மண்ணுலகிலேயே பொன்னுலக வாழ்வைக்கண்டு பின்னர் அதனையும் வெறுத்து சிவசாயுஜ்ஜியத்தைப் பெறுவதும் திண்ணம். நிற்க. இதற்குள் குகச்சந்திரன் மணிமண்டபத்திற்குச் சென்றிருப்பான். நடக்கும் விந்தையை மறைவிருந்து காண்பாம். வா.

இந்திரகுப்தன்—அப்படியே செய்வோம். [இருவரும் உட்செல்ல]

---

## ஆறாம்காட்சி.

இடம்—சோமப்பிரபைவதியும் அறையின் முன்னுள்ள மணிமண்டபம்.

காலம்—பொழுது விழும் அமயம்.

[ரூபணிகையும் கோமளாங்கியும் வர; தேவசமிதையும் இந்திரகுப்தனும் மறைவிருந்து வேடிக்கையைப் பார்க்க]

ரூபணிகை—கோமளாங்கி, செட்டியாரவர்கள் என்னை இவணழைப்பித்த காரணத்தையறிவாயா?

கோமளாங்கி—ஓர் சிறிது அறிவேன். பிரபுவும் தாங்களும் ஓர் நாடகம் நடிக்கப்போகிறீர்கள். அதனை மறைவிருந்தேனும் கண்டு மகிழ்வேன்.

சோமப்பிரபை—[ஏகாந்தமாக] இஃதென்ன விந்தை? இவ்யுவதி யார்கொலோ? தேவ ரமபையரையும் வனப்பாற் பணிகொள்ளவல்ல இந்த மண்ணுலக மகள் யாவள்? இவள் இச்சமயம இவணுற்ற காரணம் மிக வியப்பைத் தருகின்றது. [கோமளாங்கியைவிளித்து] அடீ, கோமளம்! நீ யங்கே யென்ன செய்கிறாய்! நீ யெனக்குப் பாங்கியோ? பிற மாதர்க்குக் குற்றேவல் புரியும் ஊழியக் காரியோ! தன்னை மறந்தாய்போலும். உனக்கு ஆணவம் மேலிட்ட காரணத்தைத் தெளிகிலேன்.

கோமளாங்கி—[சோமப்பிரபையை கிட்டிக்கொண்டே தாங்கள் அடிச்சி மீது வெகுளி கொள்ள வேண்டாம். இதோ வந்து சேர்ந்தேனே.

சோமப்பிரபை—நீயிருக்கவேண்டிய நிலையை மறந்தாய். நெஞ்சகத்தை ஈட்டிகொண்டு பிளப்பதையொப்ப என்பாற்றவறிழைத்தவுன்னைக் கோபிக்கவுங்கூடாதோ! அடக்கியும் ஆள்வைபோலும்! பள! பளா!! காலம் என்னவாயிற்று! எல்லாங் கிடக்கட்டும். அக்கட்டழகி யாரடி? மண்ணுலகில் இத்தகைய வனப்பும் அமையற்பாலதோ?

கோமளாங்கி—[மிகவும் நடுங்கிய தேகத்துடன்] நாச்சியாரே, ரூபணிகை யெனப்பேர் படைத்த இத்தையல் நல்லாள் நமது பிரபுவிற்கு நண்பி. இருவரும் சிறு பிராயம் முதல் ஒரே ஆசானிடம் கலைபயின்றவர்கள். நாமடந்தைக்கொப்பான அறிவையும் செவிச் செல்வத்தையும் பெற்ற இம்மங்கை ஒப்பில்லா நற்குணங்கட்கெல்லாம் உறைவிடம்.

சோமப்பிரபை—நீ கூறுவது ஒரோ வழி ஒக்கும். ஆயினும் அஃதிருக்கட்டும். இவள் இச்சமயமிவணுற்ற காரணத்தைச் சொல்.

கோமளாங்கி—அடியாட்கென்ன தெரியும்? வேறென் சொலவல்லேன்? தனது இன்னுயிர் நண்பரை தரிசிக்க வந்தனள் போலும்.

சோமப்பிரபை—என்னடி! ஒளித்துப் பேசுகிறாய்? இருவரும் உடலும் உயிரும் போன்ற நண்பினர்களா? இக்கட்டழகியை விட்டு என்பால் என் காதலை வகித்தார்?

[குகச்சந்திரன் வர ; அவனைத் தொடர்ந்து அமரதாசன் வாசனைத் திரவியங்களையும், நறுமலர் மாலைகளையும், இரத்தினுபரணங்களையும் தாம்பாளத்திற்றுங்கிப் பின் வர]

கோமளாங்கி—அம்மணி, இதோ பிரபு வருகின்றுர்களே.

சோமப்பிரபை—அவளை நோக்கியன்றே செல்லாநின்றனர்! ஈதென்ன விபரீதம்! இதற்கும் சமர்த்தர் போலும்!!

[ரூபணிகை பொருக்கென வெழுந்து குகச்சந்திரனை அஞ்சலி செய்து அவனை யணுகுகிறுள் ; கோமளாங்கியும் குகச்சந்திரனைக் கிட்டவே, அமரதாசன் கோமளாங்கியிடம் திரவியங்களை கொடுத்துவிட்டு விலகுகிறுன்]

குகச்சந்திரன்—எனதின்னுயிர் மருந்தே! பாவியேனிடம் உனக்கு அருள் பிறந்ததோ? எனது பேதமையை யென் சொல்வேன்! எட்டாக் கொம்புத் தேனுக்கு முடவன் கொட்டாவி விடுவது போலவும், கானலை நீரென்றெண்ணி மான்கணம் ஓடியோடி வீணே தவிப்பது போலவும், கனவிற்கண்ட புதையலை நினைத்து ஏக்கங் கொள்ளும் பேதையன் போலவும், இலவு பழுக்குமெனக் காத்திருந்த கிளி போலவும், வீணே காலத்தைப் போக்கி மனத்தைப் புண்ணுக்கினேன். கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய் தேடி யுழல்வாருளரோ!

நானே அத்தகைய அறிவிலி. ஏ, கண்ணாரமுதே! பால்ய சிநேகத்தை முழுமுற்றும் மறந்து உன்னைக் கைவிட்ட பாவியைக் கடைக்கணிப்பாயா?

ரூபணிகை—எனதன்பே யுருவான அத்தானே, தாங்கள் அடிச்சியை யோர்போதும் மறந்ததில்லை. அடியாள் தங்கள் இச்சையின் வழியெல்லாம் ஒழுகக் காத்திருக்கிறேன். கவலை யெற்றிற்கோ!

[சோமப்பிரபை பிரமையுடன் நாடகத்தை நோக்க]

சுகச்சந்திரன்—இன்னுயிர்பாவாய்! நான் உன்னை மறந்திழைத்த பாவத்திற்கு யாதே பரிகாரஞ் செய்யவல்லேன்! யாழிடைப் பிறவாவிசையே! அலையிடைப் பிறவாவமுதே; மலையிடைப் பிறவா மணியே! நான் உனக்கு மீளா அடிமையானேன். உனது மழலை வாக்கே எனக்குத் தேவகானம்; உனது வாலெயிற்றிலூறும் நீரே எனக்குத் தேவாமுதம்; உனதளகத்தினின்று வீசும் மணமே எனக்குத் தேவகந்தம்; தங்கச் சிலைபோன்ற நினது ரூபமே எனது தியானத்திற்குரிய ஞேயம்; உன்னைத் தொட்டு தழுவுதலே பரமானந்தம்.

கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்பொறியும்
ஒண்டொடிக் கண்ணே யுள

வெனப் பொய்யில் புலவன் கூறிய மெய்ப் பொருளை இப்போழ்தே நின்பாற் கண்டேன். ஏ, சோம

ளாங்கி, அமரதாசன் கொண்டுவந்த திரவியங்களை அருகே வை.

[குகச்சந்திரன் முதற் கண் கத்தூரிதிலகத்தை ரூபணிகையின் நுதற்கண்ணிட்டு, பின்னர் இரத்தினு பரணங்களை யணிந்து, அதன் பின் நறுமலர் மாலைகளை அவட்குச் சூட்டி ஒப்பரிய பீதாம்பரத்தால் அவளைப்போர்த்து, அவளையிட்டுக்கொண்டுபோய் நிலைக் கண்ணாடியின் முன்னிறுவி அவளை நோக்கி]

ஏ, ஆசைக் கண்ணாட்டி, உனதழகையிப்போழ்து நீயே யுற்று நோக்குதி. தேவரமபையேனும் திலோத்தமையேனும், மதன் கொஞ்சி விளையாடும் இரதியேனும் நின்னை நிகர்ப்பளோ! உனது எழிலை நோக்குங்கால், பெண்டிரும் உன்னைத் தோய ஆண்மையை விரும்புவரென வெண்ணுகிறேன்.

[எனக் கூறிப்பின்னர் அவளை ஆலிங்கனம் செய்ய முயல்வான்போல் நடிக்கவே ரூபணிகை நாணமுற்று குகச்சந்திரனைநோக்கி]

ரூபணிகை—கண்ணாளா! ஆசை வெட்கமறியாதெனக் கூறுவரே. அதனுண்மையை இன்றே தங்களிடங் கண்டேன். இங்கு நமக்காவதென்ன? இருவரும் நமது மாளிகை சென்று ஏகாந்தமாக மனம்போனபோக்காய்க் காலத்தை யினிதே யோட்டலாமே. எழுந்து செல்வோம் [எனச்செப்பி குகச்சந்திரனது கையைப் பற்றுகிறாள்]

சுகச்சந்திரன்—அப்படியே, செல்வோம் வா [எனக்கூறி ரூபணிகையின் கரங்களை இனிதாய்ப் பற்றிக் கொண்டு வெளியேறப் பார்க்கின்றுன் ! இவற்றை யெல்லாம் இதுவரை நெட்டுயிர்ப்புடன் பார்த்துக் கொண்டு நின்ற சோமப்பிரபை திடுக்கென வோடிவரும் போழ்தே]

சோமப்பிரபை—ஏது காரியம் மிகவும் மிஞ்சுகின்றதே ! [எனக்கூறி இருவரையுங்கிட்டி தனது கணவனது கைகளை ரூபணிகையின் கைகளினின்று விலக்கி அவனை நோக்கி]

அத்தானே ! இத்தகைய சமர்த்தும் தங்கட்குளதோ ! நல்ல காரியத்திற்கு ஏற்பட்டீர்கள் ! காத்திருந்தவன் காதலியை நேற்று வந்தவன் கொண்டு போனுன் எனும் கதையை எனக்குக் காட்டவோ இத்தையல் வந்தாள். ஆக்கப் பொறுத்த தங்கட்கு ஆறப் பொறுக்க முடியாதாயிற்றோ !

சுகச்சந்திரன்—மங்காய், நீ என்னை இலவு காத்த கிளியைப்போல தவிக்கவிட்டு வாட்டினது போதாதோ ? இப்போழ்து இத்தகைய சதுர்ப்பாட்டையும் புரியாநின்றாய் ; பள ! பளா !!

சோமப்பிரபை—அடிச்சிபுரிந்தது பேரபாரதமே. சிறியார் பிழை இழைக்கின் பெரியார் பொறுக்க வேண்டாமா ? அது நிற்க, தங்களை இதுவரை ஏகபத்னி விரதனென்றல்லவோ எண்ணியிருந்தேன். அஃது பொய்த்ததுபோலும்.

குகச்சந்திரன்—நீ எண்ணியது தவறன்று; உனது எண்ணம் பொய்த்திலது. இப்போழ்தும் யான் ஏக பத்னி விரதனே. ரூபணிகையாகிய இந்நங்கை எனக்குத் தங்கையே. ஓர்நாடகமே நடித்தோம். இந்நாடகமும் எற்குத் தெய்வமிட்ட பணியாம்.

சோமப்பிரபை—வேதவிதிப்படி என்னைக்கைப்பிடித்த மணவாளா! அடியாள் உள்ளமும் உடலமும் பூரித்தேன். நான் தங்களது சித்தப் போக்கிற்கெல்லாம் இனிதே வளைந்து பணிவிடை புரியும் அடிச்சியே. இது சத்தியம், சத்தியம், முக்காலும் சத்தியம்.

குகச்சந்திரன்—ஆயின், எனதுள்ளத்துறுதுயரெல்லாம் இக்கணத்தே துறந்தேன்.

ரூபணிகை—மதினியாரே, தங்கள் பாக்கியமே பாக்கியம். எனதண்ணாவை என்ன நினைக்கின்றீர்கள்? மருவிலா ஆடவரத்னம். நீங்களிருவீரும் இல்லறத் துறையுள் இறங்கி மதனும், இரதியும்போல் வாழ்வதைக் காண்பதே யெனக்குப் பேரானந்தமாம். நீங்கள் இருவரும் மனமொத்த விந்தையைத் தங்கள் அத்தையாரும், அன்னையாரும் தகப்பனாரும் காணுங்கால் அவர்களது மகிழ்ச்சியை எடுத்துரைக்க எவரே வல்லவர்!

சோமப்பிரபை—குணப் பெருங் குன்றமாகிய மதினி

யாரே, தங்களை உற்ற துணையாகப் பெற்ற எங்கட்கு வேறென்னதான் குறையுளது?

[தேவசமிதையும் இந்திரகுப்தனும் மறைவை விட்டு விலகி அருகே வர! மாமியாரைக் கண்டவுடன் சோமப்பிரபை அவளது பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து]

சோமப்பிரபை—அத்தையாரே, அடிச்சி அறியாமையாற் செய்த அபராதங்களை மறந்து அடியாளை தங்களது இன்னருளிற்குப் பாத்திரமாகக் கொள்ளவேண்டும்.

தேவசமிதை—[மருகியை மார்பிறுகத் தழுவிக் கண்ணீருடன்] எங்களது தவத்தால் எனது குமாரனுக்கு மனையாட்டியாகவந்த சோமப்பிரபா! நீங்களிருவீரும் உடலுமுயிரும்போல் இணைபிரியாது வாழக்கடவீர். [கோமளாங்கியை நோக்கி] கோமளாங்கி, இந்த மங்கள காரியத்தை நீ கடிது சென்று அண்ணாவவர்கட்கும் மதினியாருக்கும் தெரிவித்து அவர்களை யழைத்துக் கொண்டுவா.

கோமளாங்கி—அப்படியே தெரிவித்து அழைத்து வருகிறேன். [மறைய]

சுகச்சந்திரன்—சோமப்பிரபா! மற்றுமோர் குறை உன்னால் நிவர்த்தியாக வேண்டியதுளதே!

சோமப்பிரபை—அடியாள் கூறுவதொன்றுளது. சிவாக்ஞை யொன்றை முடிப்பிக்க வேண்டியவளா

கவிருக்கிறேன். தங்கள் மைத்துனர் இந்திரகுப்தர் மிக்குயர்ந்த அந்தரங்க சிவபக்தர். அவரது மனமகிழுமாறு எனது தங்கை கனகப்பிரபையை இக்கணமே அவருக்கு மணமாலை சூட்டுவிக்க வேண்டுமே.

குகச்சந்திரன்—ஈதென்ன பெரும் வியப்பாயிராநின்றது. யானும் இக்கோரிக்கையே நின்பாற் செய்ய நின்றேன். சிவபெருமானது அருட்பிரஸாதத்திற்கு முன்னமே பாத்திரமானாய் போலும். சிவபரஞ்சுடரே, நினது அருளிற்கு பாத்திரமான இம்மங்கையையும் இந்திரகுப்தரையும் உறவினராப் பெற்ற எனது பாக்கியம் எவர்க்கே யுளது! திருவருளின் போக்கை எவரே கணித்துரைக்க வல்லார்!

சோமப்பிரபை—முற்பிறவிகளில் அடியாள் ஈட்டிய புண்ணியங்களெல்லாம் ஒருசேரத் திரண்டு முக்திக்கு வித்தாகிய தங்களை கணவனாக மணமாலை சூடும் பேற்றைக் கொண்டேன். இதோ எனது தங்கையை வரவழைக்கிறேன். யாவரும் சிறிது நேரம் கண்களை மூடவேண்டும். அப்போழ்து ஆகாயத்திடத்தே தேவதுந்திபி கேட்கும். உடனே கண்களை விழித்து விண்ணை நோக்கின் கனகப்பிரபை புவிக்கிறங்குவதைக் கண்ணாரக் காணலாம். கண்ணாளா! தாங்களும் தங்கள் மைத்துனரும்

எதிர்பாராத மற்றுமோர் போகத்தையும் சற்று நேரத்திற் காண்பீர்கள்.

சுகச்சந்திரன்—ஆக்கங்களெல்லாம் ஒன்று கூடிவரும் காலமுமுளதன்றே! எல்லாம் சிவன் செயலே; கண்ணமுதே! கடிதில் நினது தங்கையை வரவழை. யாவரும் கண்களைச் சிறிது நேரம் மூடிக் கொண்மின்.

[சோமப்பிரபை சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டு தியானிக்கிறாள்; ஏனையோரும் அவ்வாறே கண்களை மூடிக் கொண்டு மௌனமாக விருக்கிறார்கள். ஆகாயத்தினிடத்தே தேவதுந்துபி கேட்கவே, யாவரும் நேத்திரங்களை விழித்து மேலே நோக்காநின்றனர். அப்போழ்து கந்திருவப் பெண்கள் இருவர் இருபுறமும் சாமரம் இரட்ட கனகப்பிரபை மெல்லென பூமியிலிழிகின்றாள். கந்திருவமகளிர் மறைகின்றனர். உடனே சோமப்பிரபை யவளை ஆலிங்கனஞ் செய்து]

சோமப்பிரபை—தங்காய். நேற்றிரவு நீ என்னை நோக்கி 'அக்கா, எப்போழ்து நம்மிருவர்க்கும் இடையறுவாழ்வு கிட்டுமோ?' வெனக்கவலைப்பட்டாயே, நாமிருவரும் முற்பிறவிகளில் ஈட்டிய நல்வினைகள் யாவும் திரண்டு முத்திக்கு வித்தாகிய இரண்டு சிவபக்த சிரோமணிகளை நமக்குக்கணவராக பயந்தன.

கனகப்பிரபை—அக்கா, இவ்வளவு விரைவில் நமது அல்லலெல்லாம் ஒழியுமெனக் கனவிலும் எண்ணி

லேன். நீயோ உன்னை விட்டுப் பிரியா வாழ்வை நல்கினதுமன்றி முக்திக்கே வித்தான கணவரையும் உதவி பிறவிவேரையறுத்தாய். மனக்கவலையடியோடு நீங்கிற்று.

துகச்சந்திரன்—எனது தவமே யுருவான சோமப்பிரபாய்! எனது நண்பனுக்கு நீ செய்த வுதவிக்கு யான் யாதே கைம்மாறு கொடுக்கவல்லேன்.

இந்திரகுப்தன்—திருவருளைக் கைப்பற்றிய குகச்சந்திரா, பூவோடு கூடிய நாரும் மணம் பெற்றது போல் உன்னால் நானும் கிருதார்த்தனாயினேன்.

சோமப்பிரபை—அத்தைமாரே, இரண்டு திருமங்கிலியங்களைச் சீக்கிரம் உதவவேண்டும்.

[தேஜோவதியும் தர்மகுப்தரும் கோமளாங்கியும் வர; சோமப்பிரபையும் கனகப்பிரபையும் பெரியவர்களை சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறார்கள். தேஜோவதி சோமப்பிரபையையும் கனகப்பிரபையையும் மார்போடு தழுவா நின்றாள்]

அம்மா, இவள் எனது தங்கை! இந்திரகுப்தரை மணமாலை செய்வள். தக்க சமயத்தில் வந்தீர்கள்.

[அமரதாசன் சொர்னதட்டில் நவமணிகள் இழைத்த இரண்டு திருமங்கிலியங்களைக் கொண்டுவந்து வைக்கிறான். தேவதுந்துபி

முழங்க குகச்சந்திரனும் இந்திரகுப்தனும் முறையே சோமப்பிரபையையும் கனகப்பிரபையையும் திருமங்கிலியதாரணஞ் செய்கின்றனர். தேவர் புஷ்பமாரி பொழிகின்றனர். சிறிது நேரத்திற்கெல்லாம் அந்நகரவரசனும், மந்திரி தந்திரிகளும், பாதசாரிகளாக அவண் வராநின்றனர். தர்மகுப்தரும், இந்திரகுப்தனும், குகச்சந்திரனும் அவர்களை வரவேற்காநின்றனர்]

அரசன்—புருஷ திலகமாகிய குகச்சந்திரா! எனக்கோ சந்ததி கிடையாது. எனது மந்திரிக்கும் புத்திரப்பேறு கிடையாது. அவப்பொழுதைக் கானகஞ்சென்று தவப்பொழுதாக்குவோம். இது சிவாக்ஞை. நீயும் நினது நண்பன் இந்திரகுப்தனும் இந்நாட்டைப் பரிபாலனஞ் செய்யக்கடவீர்.

[எனச்சொல்லி மணிக்கிரீடத்தை குகச்சந்திரனுக்கு அணிகிறான். மந்திரியும் தனது அதிகாரத்தை இந்திரகுப்தனுக்குக் கொடுக்கிறான். தேவதுந்துபி முழங்கிற்று.]

அசரீரி—குகச்சந்திரா, நீ நினது நண்பனோடு இராஜபோகத்தையும் தேவபோகத்தையும் புவியிற்றுய்த்து முடிவில் நால்வரும் பேரின்பவீட்டிலுறைவீர்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 5 | 21 | அறிவிள் | அறிவின் |
| | last line | மகா | மாக |
| 6 | 3 | நன்பனது | நண்பனது |
| 10 | 1 | துணே. | துணே |
| 13 | 7 | யெனவும் | யெனவும், |
| 15 | 3 | பும் | யும் |
| 17 | 19 | முடுப்பித்து | முடிப்பித்து |
| 20 | 8 | — | |
| 23 | 20 | ரிய | ய |
| 27 | 19 | போயிருப்பரனென | போயிருப்பா'னென |
| 38 | 4 | வேண்டும் | வேண்டும். |
| 42 | 23 | வீர்கள். | வீர்கள் ? |
| 47 | 16 | குககச்சந்திர | குகச்சந்திர |
| 48 | 15 | குகசந்திரனுக்கு | குகச்சந்திரனுக்கு |
| 49 | 8 | எண்ணி யாங்கு | எண்ணியாங்கு |
| 71 | 5 | அலார | அலரு |
| | 14 | அரைக்குட் | அறைக்குட் |
| 73 | 11 | அலரி | அலறி |
| 77 | 23 | ஒக்குமாயினும் | ஓக்குமாயினும், |
| 78 | 13 | துன்பம் | துன்பம், |
| 79 | 2 | அச்சோவே. | அச்சோவே, |
| 80 | 15 | பற்றற்றற | பற்றற்ற |
| 82 | 4 | யப்பருக்கே. | யப்பருக்கே |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 83 | 15 | படியே | படியே |
| 84 | 18 | யாக்ஞவல்கிய | யாக்ஞவல்க்கிய |
| 92 | 16 | அறிவாய் | அறிவாய். |
| 100 | 1 | மட்டும் மிக | மட்டும் ஒலி மிக |
| | 2 | இவ் | இம் |
| 101 | 5 | யேற்கும் | யேற்கு |
| 102 | 21 | சப்தத்தை | சத்தை |
| 103 | Put மூன்றும் அங்கம் முற்றும் at the end | | |
| 109 | 19 } 20 } | நீருறுதியே | நீருறு தீயே |
| 124 | 16 | யாற்றுவேன். | யாற்றுவேன் ? |
| 130 | 17 | உருத்திர கணிகை யருள் | உருத்திரகணிகையருள் |
| | 18 | தக்கயுவதியை | தக்க யுவதியை |
| 131 | 1 | சூழ்ச்சி. | சூழ்ச்சி ! |
| 136 | 1 | மதனியார் | மதினியார் |
| | 11 | ஞேடுஞ் | ஞேடு |
| | 13 | நானும் | நான் |
| 137 | 4 | அதிக காலை | அதிகாலை |
| | .13 | போலும், | போலும். |
| 139 | 3 | குகச்சந்திரா ? | குகச்சந்திரா, |
| 141 | 13 | ஞல் | ரால் |

178900

164/82 7.10.82